
பொழிவு - 19
குவிப்பு - 03
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
மார்ச் - 2016
Registered as a News Paper
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 167 / News / 2016"

# ஆன்மீக, உடலியல் ரீதியிலான இறைவனின் இரக்கச் செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்

## திருத்தந்தையின் தவக்காலச் செய்தி



இறைவனுடைய இரக்கத்தின் ஆண்டு யூபிலி விழாவில் நாம் எதிர்கொள்ளும் தவக்காலத்தில் இறைமக்கள் அனைவரும் ஆன்மீக, உடலியல் ரீதியான இறைவனின் இரக்கச் செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்திருக்கின்றார். இறைவனின் இரக்கச் செயல்கள் மனிதனின் உள்ளத்தை உருமாற்றுகின்றது. அதன்மூலம் உண்மையான இறை அன்பை அனுபவித்து செயலாற்ற ஊக்குவிக்கின்றது என்று கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி திருத்தந்தை வழங்கிய தவக்காலச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எமது ஒவ்வொரு நாள் தனிப்பட்ட செயற்பாட்டின்போது எமது அயலவர்களுக்கு உடல், ஆன்மா ரீதியிலான இரக்கச் செயல்களான உணவளித்தல், தரிசித்தல், ஆறுதல் கூறுதல், ஆலோசனை வழங்குதல் போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் கட்டாயம் இறைத்தந்தையால் அவதானிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படும். இவ்வருட தவக்காலச் செய்திக்காக தூய மத்தேயு நற்செய்திப் பகுதி எடுக்கப்பட்டுள்ளது. "உங்கள் பலிகளை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன்" என்பதே அதன் தொனிப்பொருள்.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

## புனித வியாழன் பாதம் கழுவும் சடங்குமுறையில் மாற்றங்கள்



புனித வியாழன் திருவழிபாட்டில் பாதம் கழுவும் சடங்கில், ஆண்கள் மட்டுமல்ல, இறைமக்கள் அனைவரும் இணைக்கப்பட வேண்டும் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் புதிய விதிமுறை ஒன்றை திருப்பீடம் வெளியிட்டுள்ளது.

திருவழிபாடு மற்றும் அருளடையாளப் பேராயத் தலைவர் கர்தினால் இராபர்ட் சாரா அவர்கள் கையெழுத்திட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் ஆண்கள், பெண்கள், இளையோர், வயதானவர்கள், நோயாளர், நலமாக இருப்பவர்கள், அருள்பணியாளர்கள், அர்ப்பண வாழ்வு வாழ்பவர், பொது நிலையினர் என இறைமக்கள் சமுதாயத்தின் ஒவ்வொரு நிலை நபர்களும், பாதம் கழுவும் சடங்கில் பங்குகொள்வதற்குத் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## மடுத்திருப்பதியில் திருச்செபமாலை தியான நிலையம்
## Rosasry Meditation Centre



மடுத்திருப்பதியில் திருச்செபமாலை தியான நிலையம் என்ற பெயரில் திருச்செபமாலையின் நான்கு மறைநிகழ்ச்சிகளான மகிழ்ச்சி, துயர, மகிமை, ஒளி மறைநிகழ்ச்சிகளை தியானிக்கக்கூடிய திருச்சுருபங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி மடுப்பரிபாலகர் அருட்திரு. எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற விழாவின்போது மேற்படி நிலையத்தை மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இழைப்பாறிய யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களும் இன்னும் பெருமளவிலான குருக்கள் துறவியரும் கலந்துகொண்டனர்.

நான்கு நன்கொடையாளர்களின் உதவியோடு மடுத்திருப்பதியின் நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இம்முயற்சியானது கத்தோலிக்க மக்களின் மாதா பக்தியையும், செபமாலைப் பக்தியையும் வளர்க்க பெரிதும் உதவும் என நம்பப்படுகிறது.


இதை வெறுமனே பார்வையிட்டுச் செல்லும் காட்சிப்பொருளாகக் கருதாமல் செபமாலைத் தியானத்திற்குரிய இடமாக இதைக் கருதி பயன்படுத்த வேண்டும் என மடுப்பரிபாலகர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இங்கு நிறுவப்பட்டள்ள திருச்சுருவங்கள் கேரளாவில் உள்ள டிவைன் தியான இல்லத்தின் உதவியோடு கேரளாவில் உருவாக்கப்பட்டு மடுவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாஸ்கா விழாச் சிறப்பிதழ்







நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் சிலுவையில்தான் நாம் பெருமை கொள்ள வேண்டும். அவரிலேதான் நமக்கு மீட்பும் உயிரும் உயிர்ப்பும் உண்டு; அவராலேதான் நாம் இரட்சணியமும் விடுதலையும் அடைந்தோம்.
(ஆண்டவரின் இராவுணவு விழா வருகைப் பல்லவி - காண்க கலா 6: 14)

## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது?



ஒரு வருடத்திற்கான
உள்நாட்டுச் சந்தா ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா ரூபா 3,500.00

எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் -
077 - 7420811, 023 - 2250789, 023 - 3233276

## சந்தாவைப் புதுப்பியுங்கள்!

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

## பாப்பரசரை சினமடைய வைத்த மெக்ஸிக்கோ மக்கள்

எப்போதும் அமைதியின் உருவமாக புன்னகை தவழ வலம் வரும் பாப்பரசரை சினமடைய வைத்த சம்பவம் மெக்ஸிக்கோவில் இடம்பெற்றுள்ளது.

அவர் கடந்த பெப்ரவரி மாதம் 16,17ஆம் திகதிகளில் மெக்ஸிக்கோ நாட்டிற்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார். அந்நாட்டின் மொரெல்லா நகரிலுள்ள மைதானமொன்றுக்கு விஜயம் செய்த வேளை அவரைச் சூழ்ந்துகொண்ட கூட்டத்தினர் அவரது கரங்களைப் பற்றிப் பிடித்து இழுத்தும், அவரது இடுப்பில் கட்டியிருந்த நாடாவைப் பற்றி இழுத்தும் அவரை சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த வயோதிபர் ஒருவர்மீது நிலைதடுமாறி விழும் நிலைக்கு உள்ளாக்கியதையடுத்து அவர் தனது கட்டுப்பாட்டையும் மீறி சினத்துக்குள்ளாகியுள்ளார்.

இதன்போது பாப்பரசர் "என்ன உங்களுக்கு நடந்தது? சுயநலமாக செயற்படாதீர்கள்" என அதட்டும் வகையில் சத்தமிட்டுள்ளார்.

பாப்பரசர் உடனடியாக தன்னை சுதாகரித்துக்கொண்டு அந்தக் கூட்டத்திலிருந்த நபரொருவரின் தலையில் முத்தமிட்டு




ஆசீர்வதித்தபோதும், அவரது முகத்தில் சினம் தொடர்ந்து பிரதிபலித்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதிகளாக அல்ல, பாசமுள்ள தந்தையர்களாகச் செயற்படுங்கள்

## ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கும் குருக்களுக்கு திருத்தந்தை அறிவுரை



ஒப்புரவு அருளடையாளம் வழங்கும் அருள்பணியாளர், இந்த அருளடையாளத்தை அணுகிவரும் மனிதர்களின் இதயங்களை, கடவுளின் இரக்கம் என்ற ஆடையால் உடுத்தி, அவர்கள் உணரும் வெட்க உணர்வை நீக்கி, மகிழ்வில் அவர்களை நிரப்பவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அருள்பணியாளர்களுக்கு வழங்கிய ஓர் உரையில் குறிப்பிட்டார்.

கடந்த பெப்ரவரி 10, திருநீற்று புதனன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகெங்கும் அனுப்பியிருக்கும் 'இரக்கத்தின் மறைப் பணியாளர்களை' (Missionarics of Mercy) வத்திக்கானில் சந்தித்து, அவர்களிடம் மனம் திறந்து பேசியபோது இவ்வாறு கூறினார்.

உலகெங்கிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1,142 'இரக்கத்தின் மறைப்பணியாளர்களில்' வத்திக்கானுக்கு வருகை தந்துள்ள 726 அருள்பணியாளர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சந்தித்தபோது, தன்னை அணுகிவரும் எவரையும் வரவேற்கக் காத்திருக்கும் அன்னையாக விளங்கும் திருஅவையின் பிரதிநிதிகளாக, இந்த அருள்பணியாளர்கள் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஒப்புரவு அருளடையாளத்தை நாடிவருபவர், அன்னையாக விளங்கும் திருஅவையின் அருகாமையை உணரமுடியாமல் போனால், அது அவரது நம்பிக்கையையும் குலைத்துவிடும் ஆபத்து உள்ளதென்று கூடியிருந்த அருள்பணியாளர்களிடம் திருத்தந்தை கூறினார்.

ஒப்புரவு அருளடையாளத்தை அணுகிவருபவரை வரவேற்பது, அவருக்கு செவிமடுப்பது, அவரை மன்னிப்பது, அவர் தேடும் அமைதியை அளிப்பது என்று அனைத்தையும் செய்வது, கிறிஸ்துவே என்றும், அந்த அருளடையாளத்தை வழங்கும் அருள்பணியாளர்கள் கிறிஸ்துவின் மன்னிப்பை முதலில் பெறவேண்டிய நிலையில் உள்ளவர்கள் என்றும் திருத்தந்தை தன் உரையில் வலியுறுத்தினார்.

1953ஆம் ஆண்டு, செப்ரம்பர் 21ம் தேதி தான் மேற்கொண்ட ஒப்புரவு அருளடையாளம் தன் வாழ்வை மாற்றியது என்று நினைவுகூர்ந்த திருத்தந்தை, அந்த அருளடையாளத்தின்போது தன்னை அந்த அருள் பணியாளர் வரவேற்று, ஒரு தந்தைக்குரிய பாசத்தை வெளிப்படுத்திய பாங்கு தன் மனதில் இன்னும் பசுமையாக உள்ளது என்று எடுத்துரைத்தார்.

ஒரு சில வேளைகளில் ஒப்புரவு அருளடையாளம் பெற வருவோர் தங்கள் உள்ளத்தில் இருப்பனவற்றை வார்த்தைகளால் கூற இயலாமல் தடுமாறும்போது, அவர்கள் நிலையை கனிவுடன் புரிந்துகொண்டு, மன்னிப்பை நாடி அவர்கள் வந்துள்ளனர் என்பதையும், தங்கள் வாழ்வை மாற்றி அமைக்க விரும்புகின்றனர் என்பதையும் நாம் உணர்ந்து, அவர்களை வழிநடத்தவேண்டும் என்று திருத்தந்தை 'இரக்கத்தின் மறைப்பணியாளர்களை' கேட்டுக்கொண்டார்.

ஒப்புரவு அருளடையாளத்தை அணுகி வருபவர் உணரும் வெட்க உணர்வைக் குறித்து, தன் உரையின் இறுதிப் பகுதியில் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவ்வேளையில், அருள்பணியாளர்கள் அங்கிருக்கும் மனிதருக்கு மரியாதையும், ஊக்கமும் வழங்கவேண்டியது அவரது கடமை என்று வலியுறுத்திப் பேசினார்.

தவறு செய்துவிட்டோம் என்பதை உணர்ந்த ஆதாம், ஏவாள் இருவருமே வெட்கப்பட்டனர் என்றும், அவர்கள் இறைவனைக்காண விருப்பமின்றி விலகிச் சென்றனர் (தொடக்கநூல் 3:8-10) என்றும் குறிப்பிட்ட திருத்தந்தை, பாவத்தில் விழும் மனிதர்களின் முதல் உணர்வு இறைவனைவிட்டு விலகிச் செல்வது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

நேர்மையானவர் என்றும் குற்றமற்றவர் என்றும் கூறப்படும் நோவா, மது மயக்கத்தில் நிலை இழந்து போவதைக் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை, ஆடையின்றி கிடந்த நோவாவின்மீது துணியைப் போர்த்திய அவரது இரு மகன்கள், அவருக்குரிய மதிப்பை மீண்டும் அளித்தனர் (தொ.நூல் 9:18-23) என்பதையும் சுட்டிக்காட்டினார்.

ஒப்புரவு அருளடையாளம் வழங்கும் அருள்பணியாளர்கள், ஒரு நீதிபதியைப்போல் அங்கு அமர்ந்திருப்பதற்குப் பதில், நோவாவின் இரு மகன்களைப்போல், துன்பங்களோடு நாடிவரும் மனிதர்களின் மாண்பை மீண்டும் நிலைநிறுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை தன் உரையில் கேட்டுக்கொண்டார்.

'இரக்கத்தின் மறைப்பணியாளர்களாக' உலகெங்கும் செல்லும் அருள்பணியாளர்களுடன் தானும் துணைவருவதாகக் கூறிய திருத்தந்தை அவர்கள், இப்பணியில், புனித லியோ போல்தோ, புனித பியோ இன்னும் பல புனிதமான அருள் பணியாளர்களும் துணைவருகின்றனர் என்ற வார்த்தைகளுடன் தன் உரையை நிறைவுசெய்தார்.

## அருட்பணியாளர் சகாயநாதனின் ஓராண்டு நினைவு



மன்னார் மறைமாவட்டத்தின் பறப்பாங்கண்டல் பங்குத்தந்தையும், திருவுளப் பணியாளர் சபையின் முன்னாள் மாகாண முதல்வருமான அருட்பணியாளர் அந்தோனி சகாயநாதன் அவர்கள் இறையடி சேர்ந்து ஒரு வருட நினைவு மார்ச் மாதம் 10ஆம் திகதி ஆகும். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்கும்படி இறைமக்களை மன்னா வேண்டி நிற்கின்றது.


## மடு தியான இல்லத்தில் குடும்ப தியானம்

இந்திய (சாலக்குடி) டிவைன் தமிழ் தியான குழுவினர்

வழிநடத்தும் நற்செய்தியும், குணமளிக்கும் குடும்ப தியானம்.



திகதி : 12, 13, 14, 15, 16 (ஏப்ரல் 2016)

இடம் : தியான இல்லம் (மடு திருத்தலம்)

தியான விபரங்களுக்கு

மடு பரிபாலகர்
Phone : 023 2280001
023 3230248

Spelman Fernando
Colombo.
Phone : 023 2280001

போக்குவரத்து பதிவுகளுக்கு

Thomas Rodrigo - Colombo
011 2432300, 0768 756 168

Jesper Fernando - Colombo
0773 455 096

Benny Fernando - Colombo
0774 120 103


## மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2016

### பங்குனி

02. கோமரசன்குளம் கல்வாரி திருத்தல யாத்திரை மன்னார் பேராலயத்திலிருந்து ஆரம்பம். காலை 5.00 மணிக்கு திருப்பலி
04. கோமரசன்குளம் கல்வாரி திருத்தல பாத யாத்திரை நிறைவும், திருப்பலியும்.
11. ஓலைத்தொடுவாய் கர்த்தர் ஆலய பாத யாத்திரையும் திருப்பலியும்.
13. தவக்கால நிதி சேகரிப்பு.
18. பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலய பாதயாத்திரையும் திருப்பலியும்.
19. மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் பெயர் கொண்ட திருவிழா, புனித சூசையப்பர் திருவிழா தாழ்வுபாடு, காத்தான்குளம், இலுப்பைக்கடவை.
20. குருத்தோலை ஞாயிறு - புனித வாரம் ஆரம்பம்
21. திருத்தைல மந்திரிப்பு கூட்டுத்திருப்பலி புனித செபஸ்ரியார் பேராலயம் மாலை 5.00 மணி. 7.30 மணி. குருக்களுக்கான திருமணித்தியாலம் - ஆயர் இல்லம்.
25. புனித வெள்ளி உண்ணா நோன்பும், மாமிசத் தவிர்ப்பும், குருமடத்திற்கான நிதி சேகரிப்பும்.
27. உயிர்ப்பு ஞாயிறு
29. புனித அந்தோனியார் - தொங்குபாலம் (குஞ்சுகுளம்)

- மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## பாடல் இசையமைப்புக்கு தொடர்புகொள்ளவும்

கிறிஸ்தவப் பாடல்களுக்கு இசையமைப்பது தொடர்பான தேவையுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்:

**திரு. ஏ. ஜே. பொஸ்கோ, மன்னார்.**
**தொலைபேசி இல. 0776614031**

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். **- மன்னா நிர்வாகம்.**

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் உரிமை தேவை

## அரசமைப்பு சீர்திருத்தக் குழுவிடம் யாழ் மறைமாவட்ட நீதி சமாதன ஆணையம் ஆலோசனை தெரிவிப்பு

இலங்கையில் 2009ஆம் ஆண்டு முடிவடைந்த உள்நாட்டுப் போரில் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கு முழு உரிமை வேண்டும் என்று, இந்நாட்டின் வடக்கிலுள்ள தமிழர்கள் விரும்புவதாக யாழ்ப்பாண மறைமாவட்ட நீதி சமாதான ஆணையம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பு சீர்திருத்தங்களுக்கு, அரசு உருவாக்கியுள்ள பொதுமக்கள் பிரதிநிதிகள் குழுவை இவ்வாரத்தில் சந்தித்த இவ் ஆணையம் இனங்கள், மொழிக்குழுக்கள், மதங்கள் ஆகியவற்றுக்கிடையே பதட்டநிலைகளையும் மோதல்களையும் ஊக்குவிக்கும் தீவிரக் கொள்கையுடைய குழுக்கள்மீது அரசு தடை விதிக்கவேண்டுமென்றும் தமிழர்கள் விரும்புகின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

போரில் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவது குறித்த தடையை 2015ஆம் ஆண்டில் இலங்கையின் புதிய அரசு ஓரளவு நீக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுக்கரை நன்னீர் மீன் சந்தை திறப்பு

### அப்போஸ்தலிக்க பரிபாலகர் திறந்து வைத்தார்



வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால் ரூபா 2.5 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட கட்டுக்கரை நன்னீர் மீன்சந்தை கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம் - பிள்ளை ஆண்டகையால் மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முருங்கன் நகரின் கட்டுக்கரைக்குளத்தை அண்டியதாக அமைக்கப்பட்ட குறித்த சந்தையானது வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால், நன்னீர் மீன்பிடியாளர்களை வாழ்வாதாரத்தில் உயர்த்தும் நோக்கோடு குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடையின்கீழ் ரூபா. 2.5 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தை திறப்பு விழாவின்போது குறித்த பிரதேசத்துக்குட்பட்ட 6 நன்னீர் மீன்பிடிச்சங்கங்களுக்கு 32 குல்லாக்களும், கட்டுக்கரையைத் தளமாகக் கொண்ட 7 சங்கங்களுக்கு 60 உயிர்காக்கும் அங்கிகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர், முருங்கன் பங்குத்தந்தை, மெதடிஸ்த திருச்சபையின் போதகர், இந்துமத குருக்கள் ஆகிய மதத்தலைவர்களும், வணிக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், நானாட்டான் பிரதேச செயலாளர் என். பரமதாசன் ஆகியோரும், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கட்டுக்கரைக் குளத்தையொட்டிய நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மாணவிக்கு நீதி கோரி மன்னாரில் கவனவீர்ப்பு



பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வவுனியா மாணவியின் படுகொலையைக் கண்டித்து மன்னாரில் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது பாலியல் வன்புணர்வின் பின்னர் மிக மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்ட வவுனியா மாணவியின் சாவுடன் தொடர்புடையவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்பட வேண்டும் எனவும், இனிவரும் காலங்களில் இலங்கையின் காவல்துறையும் அதனுடன் இணைந்த ஏனைய சிவில் மற்றும் சமூக அமைப்புக்களும் எமது மக்களையும், மாணவர்களையும், இளம் சிறார்களையும் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளில் முழு மூச்சாக ஈடுபட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு மாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ. குணசீலன், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பீ. ஏ. அந்தோனி மார்க், மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மார்டீன் டயஸ், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், மதத்தலைவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முருங்கன் பேரூந்து நிலையம் அதிதிகளால் திறந்து வைப்பு

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முருங்கன் பேரூந்து நிலைய திறப்பு விழா கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

வட மாகாண போக்குவரத்து அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இந்தப் பேரூந்து நிலையத் திறப்பு விழா வடமாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, சிறப்பு விருந்தினர்களாக அமைச்சர் ரிசாத் பதியுதீன், பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்ரர் சோசை அடிகளார் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இதன்போது நானாட்டான் பிரதேச செயலாளர் எஸ். பரமதாசன் உட்பட திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# இலங்கையில் திருத்தந்தையின் பரிந்துரையின்படி புனித வியாழன் பாதம் கழுவும் சடங்கு



புனித வியாழன் பாதம் கழுவும் சடங்கில் பெண்களும் சேர்க்கப்பட வேண்டும் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கை ஆயர்கள் வலியுறுத்தியுள்ளனர்.


இலங்கை ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் மால்கம் ரஞ்சித் அவர்கள் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் மேய்ப்பர்கள் பாதம் கழுவும் சடங்கிற்கு ஒரு சிறு விசுவாசிகள் குழுவைத் தேர்ந்தெடுக்கலாம். இக்குழுவில் இறைமக்கள் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இச்சிறிய குழு, ஆண்கள் மற்றும் பெண்களைக் கொண்டிருக்கலாம். இளையோர், வயதானவர், நலமாக இருபவர், நோயாளிகள், இருபால் துறவியர் என்று பலதரப்பட்ட இறைமக்களை இக்குழு கொண்டிருப்பது பொருத்தமானது என்று கர்தினால் ரஞ்சித் அவர்கள் கூறியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் திருப்பீட திருவழிபாட்டுப் பேராயம் புனித வியாழன் பாதம் கழுவும் சடங்கில் மாற்றங்களைக் கொண்டுவரும் விதிமுறைகளை கடந்த ஜனவரியில் வெளியிட்டது. இந்த விதிமுறைகள் வருகிற மார்ச் 24ம் திகதி புனித வியாழனன்று நடைமுறைக்கு வருகின்றன.

## இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில்

# இரண்டு வெளியீடுகள்




இறை இரக்க ஆண்டிலே இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் சுவைக்கும் முகமாக கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவினால் "ஆண்டவரே இரக்கமாயிரும்" என்னும் இறுவட்டும், "இரக்கத்தின் திருமடல் ஓர் கண்ணோட்டம்" என்னும் சுற்றுமடலின் சுருக்க வெளியீடும் அருட்பணி. விக்ரர் சோசை (குருமுதல்வர்) அவர்களால் மன்னார் தோட்டவெளி தியான இல்லத்தில் வெளியிடப்பட்டது.

## கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில்

# தவக்காலத் தியானங்கள்

இறைஇரக்க ஆண்டிலே எம் உள்ளங்களை இறைவன்பால் உயர்த்தவும், இறைவனின் இரக்கத்தை மென்மேலும் உணரவும், அருளின் காலமாகிய இத்தவக்காலத்தில் ஆன்மீகவழியில் எம்மை ஆயத்தப்படுத்தவும் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் தவக்காலத் தியானம் ஒழுங்குசெய்யப்பட்டது. தமிழ் நாட்டைச் சேர்ந்த புதுவாழ்வு செபக்குழுவினரின் உதவியோடு கத்தோலிக்க இளைஞர்கள், அன்பிய, திருவழிபாட்டு பணியாளர்கள், முதியோர்கள், பாடசாலை மாணவர்கள், பங்குமக்கள் என அனைவருக்கும் இத்தவக்காலத் தியானம் ஒழுங்குசெய்யப்பட்டு நடத்தப்பட்டது.

இதில் விசேடவிதமாக ஒவ்வொரு மறைக்கோட்ட இளைஞர் யுவதிகளுக்கும் அவர்களுக்குரிய மறைக்கோட்டங்களில் தியானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முருங்கன் மறைக்கோட்டம் - நானாட்டான் பங்கிலும்,
மன்னார் மறைக்கோட்டம் - தோட்டவெளி தியான இல்லத்திலும்,
மடு மறைக்கோட்டம் - பரப்புக்கடந்தான் கத்தார் கோவிலிலும்,
வவுனியா மறைக்கோட்டம் - கோமரசன் குளம் கல்வாரி திருத்தலத்திலும் இத்தவக்காலத்தியானங்கள் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஒவ்வொரு மறைக்கோட்டங்களில் இருந்தும் 250ற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டதோடு, மன்னார் மறைக்கோட்டத்தில் 500ற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.

இத்தோடு அன்பிய, திருவழிபாட்டு, பாடகர் குழாம், மன்னார், முருங்கன், மடு மறைக்கோட்டப் பணியாளர்களுக்கான தியானங்கள் தோட்டவெளியிலும், வவுனியா மறைக்கோட்டப் பணியாளர்களுக்கான தியானங்கள் வவுனியா இறம்பைக்குளத்திலும் நடைபெற்றது. இவற்றோடு விவிலியப் பணியாளர்களும் இத்தியானங்களில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இத்தோடு பேசாலை, வங்காலை, நானாட்டான், ஆட்காட்டிவெளி, வேப்பங்குளம், செட்டிகுளம் போன்ற பங்குகளிலும் இத்தியானங்கள் சிறப்பாக நடைபெற்றன.






தியானங்களில் பங்கேற்ற அனைவருக்கும், உதவிபுரிந்த அனைத்து நல்லுள்ளங்களும், இந்தியாவின் புதுவாழ்வு செபக்குழுவினருக்கும் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு நன்றி தெரிவித்து நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்காவிழாச் சிறப்புப் பொழிவு

# புனித வார திருச்சடங்கு விளக்கவுரைகள்

## வழிபாடுகளில் விளக்கத்தோடு பங்கெடுப்போம் !




## புனித வியாழன்

**முன்னுரை**

கிறிஸ்துவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே,
இரக்கத்தின் யூபிலி ஆண்டிலே நாம் பயணித்துக் - கொண்டிருக்கிறோம். இறைவனின் எல்லையற்ற இரக்கம் இயேசுவில் வெளிப்பட்டதை நாம் அறிவோம். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைநிகழ்ச்சிகள் இறைவனுடைய இரக்கத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. எனவே புனித வாரத்தின் மிகமுக்கிய நாட்களுக்குள் காலடி பதிக்கும் நாம், இறைவனின் இரக்கம் இயேசு வழியாக எப்படி வெளிப்பட்டது என்பதை இந்நாட்களில் சிறப்பாகச் சிந்திப்போம்.

இயேசுவின் வாழ்வில் இன்று வைர வரிகளைச் செதுக்கிய பொன்னாள் என்று ஒவ்வொரு கிறிஸ்தவரும் பெருமைப்படக் கூறலாம். ஏனென்றால், அவர், இன்றுதான் உலகம் உள்ளளவும் தமது ஒப்பற்ற உடனிருப்பை உணர்த்தும் 'நற்கருணை' என்னும் அருளடையாளத்தை நிறுவினார். அந்த நற்கருணையைப் பொருளுணர்ந்து கொண்டாடவும், தந்தை இறைவனுக்கும் இத்தரணிவாழ் மக்களுக்கும் உறவுப்பாலமாக விளங்கவும் 'குருத்துவம்' என்னும் அரிய அருள் அடையாளத்தை ஏற்படுத்தியதும் இந்த நாளில்தான்.

பொன்னையும் பொருளையும் தருவதில் அல்ல, தன்னையே தருவதில்தான் அன்பு என்னும் அருமைப் பண்பு ஒளிர்கிறது என்பதை இந்த அவனிக்கு உணர்த்தும் விதத்தில் தம் திருத்தூதர்களின் காலடிகளைக் கழுவி பிறரன்புக்குப் பெருமை சேர்த்ததும் இந்த நாளே. இப்படி ஒவ்வொரு நாளையுமே உன்னத நெறிக்கு ஒப்புவித்த இறைமகன் இந்த நாளை ஒப்பற்ற நாளாக உருமாற்றினார். ஆம், இந்த அற்புத நாளில்தான் அவர் இறையாட்சியின் எதிராளிகள் கையிலும் ஒப்புவிக்கப்படுகிறார். இந்த நாள் கொண்டாட்டங்களில் எழுச்சியுடன் பங்கேற்று, இதய பலம்பெற வந்திருக்கும் நாம், இறையருளை இன்னும் அதிகம் பெறும் விதத்தில் இத்திருப்பலிக் கொண்டாட்டத்தில் பங்கேற்போம். குருத்துவம் தோன்றிய இந்நாளில் நமது குருக்களுக்காக மன்றாடுவோம். இன்றைய திருவழிபாடு நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. 1. இறைவாக்கு வழிபாடு, 2. காலடி கழுவும் சடங்கு, 3. நற்கருணை வழிபாடு, 4. நற்கருணை இடம் மாற்றம் பவனி. இவற்றில் பங்கேற்று நம் ஆண்டவரின் மறைநிகழ்வுகளை அவருடைய இரக்கத்தை நம் உள்ளத்தில் பதிப்போம்.

### *1. இறைவார்த்தை வழிபாடு*

**முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 12:8,11-14**

எகிப்தில் மன்னன் பார்வோனின் கொடுங்கோல் ஆட்சியில் இஸ்ரயேல் மக்கள் ஏற்ற இன்னல்கள் ஏராளம். அவர்களிடமிருந்து தம் உரிமைப் பேறான மக்களை இறைவன் விடுவிக்க விரும்பினார். விடுதலைப் பயணத்தின் விதிமுறைகளை விளக்கிக்கூறி புதிய விடியலுக்கு, தம் மக்களை இறைவன் தயாரிக்கும் பங்கினை விடுதலைப் பயண நூலிலிருந்து வாசிக்கக் கேட்போம்.

**இரண்டாம் வாசகம்: 1 கொரி 11:23 – 26**

நற்கருணையைக் கொண்டாட குருத்துவமும், குருத்துவத்திற்கு வலுச்சேர்க்க நற்கருணையும் துணைநிற்பது நமக்கு பெருமகிழ்ச்சி அளிக்கிறது. இரு பெரும் அருளடையாளங்களை ஏற்படுத்திய இந்நாளில் கல்வாரிப் பலியின் நினைவுச் .சின்னமாகவும் வழிப்பயண உணவாகவும் இயேசுவின் உடனிருப்பாகவும் விளங்கும் நற்கருணைபற்றி விளக்கிக்கூறும் வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

**நற்செய்தி வாசகம்: யோவான் 13:1-15**

அன்பை வெளிப்படுத்த நமக்கு அவ்வப்போது அருமையான வாய்ப்புக்கள் அருளப்படுகின்றன. அன்பு ஓர் அனுபவம்: அது ஒரு வாழ்க்கைப் பாடம். அதை வார்த்தையால் மட்டுமல்ல வாழ்க்கையாலும் வெளிப்படுத்த வேண்டும். அன்பைக் காட்ட எவ்வளவு கடமை உண்டோ அந்த அளவுக்கு அன்பைப் பெற அனைவருக்கும் உரிமை உண்டு. தலைவன் - பணியாள் என்பது பணிக்கான அடையாளத்தில் மட்டுமே. மற்றபடி வாழ்வு முழுவதுமே அன்பின் நிலைப்பாடாக அமையவேண்டும் என்பதை எடுத்துக்கூறும் நற்செய்திக்கு அமைந்த மனத்தோடு செவிமடுப்போம்.

### *2. காலடி கழுவும் சடங்கு*

அன்புக்குரியவர்களே, இப்பொழுது காலடி கழுவும் சடங்கு இடம்பெறுகிறது. இன்று மின்னித் துலங்கும் பலரது வாழ்வுக்குத் தாழ்ச்சியே படிக்கல்லாக அமைந்திருக்கிறது என்றால் அது மிகையன்று. யூதப் பண்பாட்டில் தலைவரின் காலடிகளைக் கழுவுதல் அடிமையின் வேலை. இயேசுவே அதைச் செய்கிறார் என்றால் அவரது உள்ளத்தின் தாழ்மையை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இயல்பாகவே இயேசு கொண்டிருந்த சமத்துவப் பார்வையின் பரிமாண வளர்ச்சியே இக்காலடி கழுவும் சடங்கு. இதன் வழியாக இயேசு நம் இதயங்களில் எழுதுகிறார். எல்லாருக்கும் நிபந்தனையின்றி அன்பு காட்டுங்கள்: ஏனெனில் அனைவரும் அன்புத் தந்தையின் மக்கள். அன்புக் கட்டளையை நமக்கு அளித்த இந்நாளில் நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்வோம். அன்பே தலை சிறந்தது என்பதை வாழ்வில் காட்டுவோம்.

### *3. நற்கருணை வழிபாடு*

"எல்லாரும் என்னிடம் வாருங்கள்: என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள்" (காண் மத் 11:28) என்றார் இயேசு. ஆம் நாம் அனைவரும் இயேசுவிடம் கற்றுக்கொள்ள வேண்டியவை பல உள்ளன. குறிப்பாகப் பகிர்ந்து வாழ்வதும் பாசத்தை வெளிப்படுத்துவதும் உலகம் உள்ளவரை உறவோடும் நட்போடும் தொடர வேண்டியவையாகும். தமது இறுதி இரவு உணவில் இறையாட்சியின் விருந்தாக நமக்களித்த நற்கருணையை இயேசு மாபெரும் கொடையாக நமக்கு அளித்துள்ளார். அந்த அளப்பரிய கொடையைப் பெறும் ஆர்வத்துடன் நற்கருணை வழிபாட்டில் பங்கேற்போம்.

### *4. நற்கருணை இடம் மாற்றப் பவனி*

இப்பொழுது நற்கருணை இடமாற்றப் பவனி தொடங்குகிறது. இதோ ஐந்து நாள்களுக்குமுன் தெய்வீக அரசராய் வாழ்த்தி வரவேற்கப்பட்ட இயேசு, இதோ சற்றுமுன் நற்கருணையை ஏற்படுத்தி வானகத் திருவிருந்தை நமக்கு வழங்கிய இயேசு, இப்போது கெத்சமனித் தோட்டத்திற்கு அழைக்கிறார். அவ்வப்போது சென்று அப்பாவுடன் ஆசையாய் உரையாடிய இடம் அது. திருத்தூதர்கள் புடைசூழ புறப்படும் இயேசுவுடன் நாமும் பவனியாகச் செல்வோம். நொறுங்கிய உள்ளத்துடன் இறைவேண்டல் செய்வோம். இயேசுவாய் மாறி, இயேசுவாய் வாழ அருள்வேண்டுவோம். நள்ளிரவுவரை இயேசுவின் உடனிருப்பில் இறைவேண்டல் செய்வோம். அவர் நம்மேல் காட்டிய அளவுகடந்த இரக்கத்திற்கு நன்றி கூறுவோம்.

## புனித வெள்ளி

**முன்னுரை**

மீட்பர் இயேசுவில் பேரன்புக்குரிய சகோதர சகோதரிகளே!
இன்று கிறிஸ்துவின் பாடுகளையும் இறப்பையும் சிறப்பாக நினைவுகூரும் புனித வெள்ளி. இயேசு சிலுவைச் சாவை ஏற்ற நாள். இறைவனுடைய இரக்கம் இயேசுவில் அளவுகடந்த விதமாக வெளிப்பட்ட உன்னத நாள். அருவருக்கும் அடையாளமான, கொடுங்குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனையான சிலுவையை இயேசு ஏற்கவேண்டியிருந்தது. அரும் அடையாளங்களை நிகழ்த்தி, பெரும் புகழ்பெற்ற இயேசுவின் கீழ்ப்படிதலுக்குப் பரிசுதான் இந்தச் சிலுவைச் சாவு. கீழ்ப்படிதலே அபாயகரமானது என்று கருத முடியாது. கிறிஸ்து மானிடத்தின்மீது கொண்ட மட்டற்ற இரக்கத்தினால் தம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினார். அன்று கல்வாரியில் நடந்த இயேசுவின் கொலைக்கு அரசியல் பின்னணிகள், தனிமனித காழ்ப்புணர்ச்சிகள் இருந்தன. ஆனால் அதே இயேசு இன்றும் கொலை செய்யப்படுகிறார். எப்படியெனில் நமது செயல்கள், செய்ய மறுக்கும் நன்மைகள்.... இதோ இந்த நாளில் இயேசுவின் தியாகத்தை நினைவுகூரும் விதத்தில் சிவப்பு நிற திருவுடைகளை அணிந்துகொண்டு குரு தம் பணியாளருடன் பீடத்துக்கு வருகிறார். அனைவரும் எழுந்து நிற்போம். இன்றைய திருவழிபாடு மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. 1. இறைவாக்கு வழிபாடு, 2. திருச்சிலுவை ஆராதனை, 3. நற்கருணைத் திருவிருந்து என்பன. ஒவ்வொரு பகுதியிலும் உள்ளுணர்வோடு பங்கேற்போம்.

**(குரு பீடத்துக்கு வந்ததும்)**

இப்போது குரு தரையில் குப்புற விழுந்து அமைதியில் செபிப்பார். இது இயேசு கெத்சமனித் தோட்டத்தில் விண்ணகத் தந்தையை நோக்கிச் செபித்ததை நமக்கு நினைவூட்டுகிறது. நாமும் முழந்தாள்படியிட்டு குருவோடு சேர்ந்து அமைதியில் செபிப்போம். பின்னர் குரு எழுந்து நின்று இன்றைய திருவழிபாட்டில் நாம் ஆழ்ந்து பங்கேற்க அழைப்புவிடுத்துச் செபிப்பார். அப்போது அவரோடு இணைந்து நாமும் எழுந்துநின்று செபிப்போம்.

### *1. இறைவார்த்தை வழிபாடு*

**முதல் வாசகம் : எசாயா 52:12-53:12**

உண்மை ஊழியருக்கு துன்பங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கும். அவர் ஏற்கும் நிந்தைகள் அனைத்துக்கும் வெகுமதி உண்டு. கிறிஸ்து உண்மையான ஊழியர். அவர் அடையப்போகும் துன்பங்களை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இறைவாக்கினர் எசாயா முன்னறிவிக்கிறார். நாமும் உண்மை ஊழியராக வேண்டும் என்ற உள்ளக் கிடக்கையோடு இந்த வாசகத்துக்குச் செவிசாய்ப்போம்.

**இரண்டாம் வாசகம்: எபிரேயர் 4:14-16, 5:7-9**

இறைப்பற்று கலந்த அச்சம் எங்குள்ளதோ அங்கு எல்லா நற்செயல்களும் நடைமுறைப்படுத்தப்படும். இயேசுவிடம் விளங்கிய கீழ்ப்படிதலுக்கும் பிற அரும் பண்புகளுக்கும் இந்த இறைப்பற்றுதான் அடிப்படையாக இருந்தது. இறைமகனாயிருந்தும் அவர் கொண்டிருந்த நற்பண்புகளை நாமும் அணிந்துகொள்ளும் ஆர்வத்துடன் இவ்வாசகத்திற்கு செவிசாய்ப்போம்.

**நற்செய்தி வாசகம் : யோவான் 18:1-19,42**

திருத்தூதர் யோவான் எழுதியபடி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள், சிலுவைப் பயணம், இறுதிப் பயணம் ஆகிய நிகழ்வுகள் இப்போது வாசிக்கப்படுகின்றன. பக்தியுடன் கேட்போம். "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறித் தலைசாய்த்து ஆவியை ஒப்படைத்தார் என வாசிக்கப்படும்போது அனைவரும் முழந்தாள்படியிட்டு செபிப்போம்.

**இறைமக்கள் மன்றாட்டுக்கள்**

கிறிஸ்துவில் பேரன்புக்குரியவர்களே, இப்போது திருச்சபையின் பத்து சிறப்பு மன்றாட்டுக்கள் இடம்பெறவுள்ளன. இயேசுவினுடைய பாடுகளின் பலனை உலக மக்கள் அனைவரும் பெறவேண்டும் என்ற நோக்கில் திருச்சபை நம்மைச் செபிக்க அழைக்கிறது. ஒவ்வொரு மன்றாட்டின் தொடக்கத்திலும் அதற்கான மையக்கருத்துச் சொல்லப்படும். பின்னர் குரு அமைதியாகச் செபிக்க நம்மை அழைப்பார். முடிவில் நாம் 'ஆமென்' என்று பதிலளிக்க வேண்டும். எல்லா மன்றாட்டுக்களையும் தந்தை இறைவனிடம் உருக்கமாகச் சமர்ப்பிப்போம்.

### *2. திருச்சிலுவை ஆராதனை*

இன்றைய திருவழிபாட்டின் மிக முக்கிய பகுதியாகிய திருச்சிலுவை ஆராதனை இப்போது தொடங்குகிறது. துணியால் மூடப்பட்ட திருச்சிலுவையை குரு உயர்த்திப் பிடித்துக்கொண்டு பீடத்துக்குப் பவனியாகக் கொண்டுவருவார். அதன் உச்சியிலிருந்து சிறிது சிறிதாக மூன்று தடவை துணியை குரு அகற்றுவார். ஒவ்வொரு முறையும் 'திருச்சிலுவை மரமிதோ இதிலேதான் தொங்கியது உலகத்தின் இரட்சணியம்' என்று பாடுவார். அதற்கு எல்லாரும் 'வருவீர் ஆராதிப்போம்' என்று பதிலுரையாகப் பாடி சிலுவையை தாழ்ந்து பணிந்து ஆராதிக்க வேண்டும்.

**மூன்றாம் முறை ஆராதனை செலுத்தியபின்**

அன்புக்குரியவர்களே, இதோ திருச்சிலுவை நம் அனைவரது சிந்தனையையும் கவர்ந்து நிற்கிறது. இது இப்போது பொது ஆராதனைக்காக வைக்கப்படுகிறது. நாம் இந்தச் சிலுவையை எப்போதும் நமது மீட்பின் சின்னமாகக் கருதக் கடமைப்பட்டுள்ளோம். அன்று பாலைநிலத்தில் உயர்த்தப்பட்ட வெண்கலப் பாம்பைப் பார்த்தோர் பாம்புக் கடியிலிருந்து தப்பித்தனர். இன்று நாம் எல்லாவிதமான தீமைகள், கட்டுகள், மனப்பாரங்கள், பிரச்சினைகள், குடும்பக்குழப்பங்கள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு கடவுளின் உரிமைப் பிள்ளைகளாய் வாழ பக்தியோடு இந்தத் திருச்சிலுவையை உற்றுநோக்கி முத்தி செய்வோம்.

### *3. நற்கருணைத் திருவிருந்து*

இன்றைய திருவழிபாட்டின் மூன்றாவது பகுதியாகிய நற்கருணைத் திருவிருந்து இப்போது தொடங்குகிறது. இயேசு தம்மையே நமக்குப் பலி உணவாகக் கையளித்து நிலைவாழ்வைத் தரும் உயிர்ப்புனலாகத் திகழ்கிறார். ஆம் அவர் உருவாக்கிய நற்கருணை நம் வாழ்வின் அழியா விருந்தாகவும் அருமருந்தாகவும் திகழ்கிறது. அவரது பாடுகளின் நினைவை பக்தியுடன் கொண்டாடிய நாம், அவர் அளிக்கும் திருவிருந்தில் பங்கேற்போம். அவரது பாடுகள், இறப்பு, உயிர்ப்புக்கு சான்றுபகர நம்மையே தகுதியாக்கிக் கொள்வோம். அதன் வெளிப்பாடாக இறைவனோடும் அடுத்திருப்பவரோடும் நல்லுறவில் வாழ்வோம்.

**திருச்சடங்கு முடிவில்**

அன்பிற்குரியவர்களே, இயேசுவின் பாடுகளைத் தியானித்தோம். அனைத்துலக மக்களுக்காக மன்றாடினோம். திருச்சிலுவையில் நம் மீட்பர் இயேசுவை ஆராதித்தோம். நற்கருணைத் திருவிருந்தில் பங்கேற்று அருள்வளம் பெற்றோம். இவற்றின் பலனாக நம் இல்லத்தையே இறை மனித சங்கமத்தின் கோவிலாக மாற்ற நம் இல்லத்திற்குச் செல்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாஸ்காவிழாச் சிறப்புப் பொழிவு

# புனித வார திருச்சடங்கு விளக்கவுரைகள்

## வழிபாடுகளில் விளக்கத்தோடு பங்கெடுப்போம் !





## பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு

### முன்னுரை

பேரொளியாம் கிறிஸ்துவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே! வீழ்ச்சிக்குப்பின் எழுச்சி! அதுவே வெற்றியைக் காட்டும் மாட்சி. சூழ்ச்சியுடன் நிகழும் நிகழ்ச்சி அது சுக்குநூறாகிப் போன காட்சி. ஆம் ஆண்டவர் இயேசு தாம் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். 'இத்தரை மாந்தரின் நித்திரை கலைக்க சித்திரை மதியமாய் இயேசு உயிர்த்தார்' என்று அறிஞர் பெருமக்கள் நயம்படக் கூறிய நன்னாள் கொண்டாட்டத்திற்கு நாம் இன்று அன்னை திருச்சபையால் அழைக்கப்பட்டுள்ளோம். ஆம், இந்த நாள் அடிமை விலங்கொடிக்கப்பட்ட அற்புத நாள். சாவுக்கு சமாதி கட்டப்பட்ட சரித்திரப் பெருநாள். இருளும் தீமையும் இடம்பெயர்ந்தொழிந்த இனிய நாள். இவை அனைத்தும் தொடர்ந்து நம் வாழ்வில் இடம்பெறுவது நம் கைகளில்தான் உள்ளது. உயிர்த்த கிறிஸ்துவோடு ஒன்றித்து, அவரது உரிமைப் பேறான மக்களாக வாழும்போது எல்லா நலன்களும் நம் வாழ்வில் நிறையும். 'அஞ்சாதீர்கள்' என்று கூறிய நம் ஆண்டவர் கிறிஸ்துவின் அருளையும் ஆசிகளையும் பெற்று அகமகிழ்வுடன் அக்களிப்புடனும் என்றும் வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம். இன்றைய திருவழிபாட்டுக் கொண்டாட்டம். நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. 1. திரு ஒளி வழிபாடு, 2. இறைவார்த்தை வழிபாடு, 3. திருமுழுக்கு வழிபாடு, 4. நற்கருணை வழிபாடு. இப்பொழுது திரு ஒளி வழிபாடு தொடங்குகிறது எல்லாரும் தாங்கள் வைத்திருக்கும் ஏற்றப்படாத மெழுகுதிரியுடன் எழுந்து நிற்போம்.

### திரு ஒளி வழிபாடு

இப்போது குரு புதுத்தீயைப் புனிதம் செய்கிறார். புதுத்தீயானது கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிறது. தீமைகளை அழித்து நன்மையை நோக்கி நாளும் வழிநடத்தும் கிறிஸ்து நம் உள்ளங்களில் அன்புத்தீயை மூட்டி பேரொளியாம் தம்மைப் பின்பற்ற அழைக்கிறார்.

### பாஸ்காத் திரியை புனிதம் செய்தல்

உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாக விளங்கும் பாஸ்காத் திரியில் குரு இப்போது சிலுவை அடையாளத்தையும் நடப்பு ஆண்டைக் குறிக்கும் எண்களையும் வரைய இருக்கிறார். அதில் ஐந்து சாம்பிராணி மணிகளையும் குரு பதிப்பார். என்றும் மாறாத்தன்மை கொண்ட குரு கிறிஸ்துதான் என்பதையும், அவர் காலங்களுக்கு அப்பாற்பட்டு தமது பாடுகள் மற்றும் இறப்பால் சிலுவைச் சாவை வென்றவர் என்பதையும் இந்நிகழ்வுகள் குறித்துக் காட்டுகின்றன. இப்போது திரியை புதுநெருப்பிலிருந்து ஏற்றுகிறார். தொடர்ந்து பாஸ்காத்திரி பவனியாகப் பீடத்துக்குக் கொண்டுசெல்லப்படும். இஸ்ரயேல் மக்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து கானான் நாட்டிற்குச் செல்லும்போது மேகத் தூணாகவும், விளக்குத் தூணாகவும் உடனிருந்து வழிநடத்திய கடவுளின் ஆற்றலை இப்பவனி நமக்கு நினைவுபடுத்துகின்றது.

### பாஸ்காத் திரி பவனி

கிறிஸ்துவில் அன்புக்குரியவர்களே, இப்போது பாஸ்காத்திரி பவனி தொடங்குகிறது. பவனியின்போது குரு மூன்று தடவை பாஸ்காத் திரியை உயர்த்திப் பிடித்து, "கிறிஸ்துவின் ஒளி இதோ" என்று பாடுவார். அதற்கு நாம் "இறைவா உமக்கே நன்றி" என்று பதிலுரையாகப் பாடுவோம். முதல் முறை பாடியதும் திருப்பணியாளர்களும் இரண்டாவது முறை பாடியதும் மக்களும் தங்கள் கையில் வைத்திருக்கும் மெழுத்திரிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும். மூன்றாம் முறை பீடத்துக்குமுன் நின்றுகொண்டு பாடப்படும். அப்போது ஆலய விளக்குகள் அனைத்தும் ஏற்றப்படும். பாஸ்காத் திரியை குரு அதற்குரிய தாங்கியில் வைத்து தூபமிடுவார். தொடர்ந்து பாஸ்கா புகழுரை ஆர்ப்பரித்துப் பாடப்படும். இந்தப் பாஸ்காத் திருவிழிப்புச் சடங்கில் பங்கேற்கும் நாம் கடவுளின் பராமரிப்பு நம்மை எவ்விதங்களிலெல்லாம் தொடர்கிறது என்றும் பேரொளியாம் கிறிஸ்துவின் உடனிருப்பால் பிறரது வாழ்வில் எவ்வாறு ஒளி ஏற்றலாம் என்றும் சிந்திப்போம்.

## 2. இறைவார்த்தை வழிபாடு

செயல்திறன் மிக்கதும் பணிசெய்ய அழைப்பு விடுப்பதுமான இறைவார்த்தையை இப்போது முழக்கமிட உள்ளோம். மீட்பின் வரலாற்றில் கடவுள் எவ்விதங்களில் எல்லாம் சிறப்புடன் செயலாற்றி தம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களை வியத்தகு முறையில் வழிநடத்தியிருக்கிறார் என்பதையே இன்றைய வாசகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. கடந்த காலத்தில் காத்த இறைகரம் வரும் காலத்திலும் வாழ்வளிக்கும் என்ற நம்பிக்கை கலந்த எதிர்நோக்கோடு இவ்வாசகங்களுக்குச் செவிமடுப்போம். ஒவ்வொரு வாசக முடிவிலும் பதிலுரைப்பாடலும், அதன் முடிவில் சிறப்பு மன்றாட்டும் இடம்பெறும்.

### முதல் வாசகம் : தொடக்க நூல் 1:1-22

படிப்படியாக உலகப் பொருள்களையும் உயிர்களையும் விலங்குகளையும் படைத்த இறைவன், தம் உருவிலும் சாயலிலும் மானிடரைப் படைத்தார். மேன்மைக்குரிய மனிதர் தமது மேன்மைமிக்க செயல்களால் தாம் படைத்த உலகை அணிசெய்ய வேண்டும் என்ற கடவுளது எதிர்பார்ப்புக்கு வடிவம் கொடுப்பவர்களாய் வாழும் மனத்துடன் இவ்வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

### இரண்டாம் வாசகம்: விடுதலைப்பயணம் 14:15-51:1

படைத்தவர்களைப் பராமரிக்கிறவரான கடவுள் தம் மக்கள் எகிப்தில் படும் இன்னல்களைக் கண்ணுற்றார். அவர்களோடு உடனிருந்து மீட்டார். அதைக் கண்ட பிற இன மக்கள் வியந்தனர். நாம் இறைவனது வல்ல செயல்களைக் கண்டு வியக்கிறவர்களாக மட்டும் வாழாமல் அவரது விருப்பத்தை நிறைவேற்றி வெகுமதிகளைப் பெறும் மக்களாகவும் வாழ்வோம் என்ற மனநிலையுடன் இவ்வாசகத்தைக் கேட்போம்.

### மூன்றாம் வாசகம்: எசாயா 55:1-11

வாக்குக் கொடுத்துவிட்டு போக்கை மாற்றிக்கொள்ளும் பொல்லாத உலகம் இது. ஆனால் இறைவனது வாக்கு ஒருபோதும் பொய்க்காது. அது பலனளிக்கும், பண்படுத்தும், கண்டிக்கும், காப்பாற்றும். அத்தகைய ஆற்றல்மிகு இறைவார்த்தையை ஆர்வத்துடன் கேட்போம்.

### நான்காம் வாசகம்: எசேக்கியேல் 36:16-28

"இக்கரைக்கு அக்கரை பச்சை" என்பது அனுபவமொழி. இஸ்ரயேல் மக்கள் கடவுகளைத் தேர்ந்தெடுப்பதிலும் தெய்வங்களை வழிபடுவதிலும் இக்கருத்தை வாழ்வாக்கிக் கொண்டனர். வெகுண்டெழுந்தார் இறைவன். ஆனால் அவர்களை அழித்துவிடவில்லை. தம் ஆவியை அனுப்பி புதிய இதயத்தை அவர்களில் படைத்தார். கடவுளின் ஆவி காட்டும் வழியில் வாழ்வோம் என்ற உறுதிப்பாட்டுடன் இவ்வாசகத்தைக் கேட்போம். (பிற வாசகங்களைத் தேர்ந்துகொண்டால் அவற்றுக்கும் ஓரிரு வரிகளில் முன்னுரை வழங்கலாம்).

### உன்னதங்களிலே பாடல் தொடங்குமுன்

அன்பானவர்களே, எல்லாரும் எழுந்து நிற்போம். இதோ இயேசுவின் உயிர்ப்பைப் பறைசாற்றும் வானவர் கீதத்தை நாம் முழக்கமிடப் போகிறோம். குரு 'உன்னதங்களிலே' என்று பாடத் தொடங்கிய பிறகு, அவரோடு சேர்ந்து நாமும் பாடி இயேசுவின் உயிர்ப்பின் மகிழ்ச்சியில் பங்குகொள்வோம் (ஆலய மணி ஒலிக்கிறது).

### திருமுகத்திலிருந்து வாசகம்: உரோமையர் 6:3-11

திருமுழுக்கு நமக்கு அருளிய புதுவாழ்வை நாம் என்றும் கட்டிக்காக்க வேண்டும். கிறிஸ்து எவ்வாறு உயிருடன் எழுப்பப்பட்டு உலகின் ஒளியாய்த் திகழ்கின்றாரோ அதுபோல நமது வாழ்வும் அமைய வேண்டும் என்ற மனநிலையோடு திருமுக வாசகத்தைக் கேட்போம். தொடர்ந்து பாடப்படும் அல்லேலூயா கீதத்தை எல்லாரும் அச்சமயத்தில் ஆர்ப்பரித்துப் பாடுவோம்.

### நற்செய்தி: லூக்கா 24:1-12

நற்செய்தியாளர் லூக்கா எழுதிய இயேசுவின் உயிர்ப்பு விபரணம் இன்றைய நற்செய்தியாக நமக்குத் தரப்படுகின்றது. லூக்கா கிறிஸ்துவின் உயிர்ப்பை அழகுபட வர்ணிக்கின்றார். அத்துடன் கல்லறைக்கு வந்த பெண்கள் வழியாய் நாமும் உயிர்ப்பின் நற்செய்தியை அறிவிக்கத் தூண்டுகிறார். நற்செய்தி (வாசகத்தை நமதாக்கிக் கொள்வோம்)

## 3. திருமுழுக்கு வழிபாடு

(பங்கின் சூழலுக்கு ஏற்றபடி 1. புனிதர்களின் மன்றாட்டு மாலை, 2. திருமுழுக்குத் தண்ணீருக்கு ஆசி அளித்தல், 3. திருமுழுக்கு அளித்தல், 4. திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல், 5. தீர்த்தம் மந்திரித்து – தெளித்தல் ஆகிய உட்பகுதிகளுக்கு சிறுசிறு விளக்கம் அளிக்கலாம். இங்கு திருமுழுக்கு வழிபாட்டிற்கும் திருமுழுக்கு வாக்குறுதியைப் புதுப்பித்தலுக்கு மட்டுமே முன்னுரை அளிக்கப்பட்டுள்ளது.)

**அன்புக்குரியவர்களே,** இதோ இன்றைய திருவழிபாட்டின் மூன்றாவது பகுதியாகிய திருமுழுக்கு வழிபாடு தொடங்குகிறது முதலில் திருமுழுக்குத் தண்ணீர் மந்திரிக்கப்படுகிறது. நாம் பெற்ற திருமுழுக்கை இவ்வழிபாடு நமக்கு நினைவூட்டுகிறது. நமது வாழ்வு கிறிஸ்துவோடு இணைக்கப்பட திருமுழுக்கு துணையாக இருந்தது என்பதை எண்ணிப் பார்ப்போம். எனவே இவ்வழிபாட்டில் இடம்பெறும் அனைத்துப் பகுதிகளிலும் சிறப்பாகப் பங்கேற்போம்.

### திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல்

ஒவ்வொரு ஆண்டும் நாம் புதுப்பித்துக்கொண்டுவரும் திருமுழுக்கின் வாக்குறுதிகள் நம் வாழ்வை கிறிஸ்துவுக்குள் சிறப்பாக இணைக்க உதவுகின்றன. இறை மனித உறவுகளை மேப்படுத்துகின்றன. இப்போது குரு கேட்கும் கேள்விகளுக்கு ஒருமையில் பதில் அளிப்போம். எல்லாரும் எழுந்துநின்று மெழுகுதிரிகளை ஏற்றிக்கொள்வோம். இறுதியில் பாஸ்காக் காலத்துக்குரிய 'தேவாலய வலப்புறமிருந்து' என்ற பாடலைப் பாடும்போது குரு தீர்த்தம் தெளித்து மந்திரிப்பார். அவருக்கு நன்கு வழிவிட்டு இறை ஆசிகளை நிறைவாகப் பெற்றுக்கொள்வோம்.

## 4. நற்கருணை வழிபாடு

இப்போது இன்றைய நற்கருணை வழிபாடு தொடங்குகிறது. தம் வார்த்தையால் நம்மை நாள்தோறும் நிறைவை நோக்கி வழிநடத்திக்கொண்டுவரும் இறைவன், தம் திருமகனின் உடலாலும் இரத்தத்தாலும் நமக்கு ஊட்டமளிக்கிறார். பூத்துக் குலுங்கும் புதுவாழ்வுக்காகக் காத்துக் கிடக்கும் மக்களுக்குப் புத்துயிரும் புதுப்பிறப்பும் அளித்து திருவிருந்தால் தேற்றுகிறார். அந்தத் திருவிருந்தில் ஆர்வத்தோடு பங்கொடுக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

### திருப்பலி நிறைவில்

காரிருளில் தொடங்கிய இன்றைய திருவழிபாட்டு நிகழ்வுகள் இதோ பேரொளியில் நிறைவுபெறுகின்றன. இந்தப் பேறுபெற்ற இரவில் உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்து உள்ளம் மகிழ்ந்தோம். நம்பிக்கை கலந்த தவத்தாலும், தவத்துடன்கூடிய செபத்தாலும் செபத்தின் பலனான அருள் கொடைகளாலும் சூழப்பட்ட நாள்கள் இன்று வெற்றியின் நாளாகப் பரிணமிக்க துணைநின்றன. பெற்ற வெற்றியை பாவம், தீமை, இருள், சாவு, நோவு ஆகியவற்றிலிருந்து காத்து பெருவாழ்வு வாழ அருகில் இருப்போருடன் வாழ்த்துக்களைத் தெரிவித்து அகமகிழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவக்காலச் சிறப்பிதழ்



# "தவக்கோலம் தருமா வலிமை?"

வேதியர். தி.ம. சந்தியாகு, நம்வாழ்வு, சென்னை

அந்த ஊர் மக்கள் அவரை 'பழுத்த பழம்' என்றுதான் அழைப்பார்கள். அதற்கேற்றபடியே அவரது அனைத்து செயற்பாடுகளும் தோற்றமும் காணப்படும். ஏறிய நெற்றி, அது நிறைய வாசனை திருநீறு, நீண்ட சடைமுடி: நரைத்த தாடி, கழுத்தை ஒட்டியும் சற்று நீண்டுமாக சில கொட்டை மாலைகள், தீர்க்கமான பார்வையுடைய விழிகள், நிதானமான பேச்சு, இடையிடையே சுற்றிச் சூழமும் கழுத்து, அய்ந்து பதினைந்தை வெளிப்படுத்தும் அகவை.

ஒரு நாள் அந்த முனிவர் தமது ஆசிரமத்தின் திண்ணையில் அமர்ந்திருந்தார். அப்போது முப்பது வயதுடைய அரசகுல இளைஞன் ஒருவன் தனது குதிரையை நிறுத்திவிட்டு இறங்கி அந்தப் பழத்தின்முன் முகங்குப்புற விழுந்து, "ஐயன்மிர்" நான் தவத்தின் முதிர்நிலையை அடைய விரும்புகிறேன்: அடியேனுக்கு வழிகாட்டுக!" என்றான். அதற்கு அப்பெரியவர், "உனக்கு ஏன் இப்படி ஓர் ஆசை உருவாயிற்று?" என்றார். அதற்கு அந்த இளைஞன், "இந்த உலகில் யாருமே என்னைப்போன்று வலிமை உள்ளவராக வாழக்கூடாது. அந்த வலிமையைத் தருவது தவத்தின் முதிர்நிலைதான் என்று என் தாய் ஒருமுறை சொல்லி இருக்கிறார்கள்" என்றான். அதற்கு அந்தப் பழம் இளைஞனிடம், "உன் தாய் உன்னிடம் பேசிய அதே நாளில் என்னிடமும் வந்து, 'எப்போதாகிலும் என் மகன் தவ வலிமை வேண்டி உங்களிடம் வரக்கூடும். அப்படி வரும்போது அவனுக்கு தவத்தின் முதிர்நிலைக்கு வழிகாட்ட வேண்டாம். ஏனென்றால் பொதுவாக எல்லா அரசர்களுமே வலிமையை வேண்டிப் பெறுவது மனிதத்தை மாய்ப்பதற்காகவே" என்று கூறிவிட்டு, எனது பதிலுக்குக் காத்திராமல் போய்விட்டார். இப்போது நீரே முடிவு செய்யும் என்றார். அதைக் கேட்ட அரச இளைஞன், "என் தாய் கூறியது சரியே." வலிமை என்றைக்குமே பிறரை வாழவைக்க உதவ வேண்டுமே தவிர தன்னைப் பறைசாற்றுவதாகவோ பிறரைப் பழிவாங்குவதாகவோ அமையக்கூடாது" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

## *தவம் பற்றி நூலோர் தரும் தகவல்கள்*

**(அ) கத்தோலிக்கத் திரு அவையின் மறைக்கல்வி**

**(1) திருஅவை தவக்காலத்தில் நினைவுகூரவேண்டிய மறைபொருள்:**

- பாலைநிலத்தில் இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளையும்
- ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கு ஏற்பட்ட சோதனைகளையும்
- பாலைநிலத்தில் இஸ்ரயேலருக்கு ஏற்பட்ட சோதனைகளையும் நினைவூட்டுகின்றன.

தந்தையால் கொடுக்கப்பட்ட பணிக்கு இயேசு காட்டிய கீழ்ப்படிதலைத்தான் அலகை சோதித்தது. புதிய ஆதாமாகிய கிறிஸ்து அதை வெற்றிகொண்டார். குறிப்பாகக் கிறிஸ்து தந்தைக்குக் காட்டிய மேன்மைமிக்க கீழ்ப்படிதலை வெளிப்படுத்துகிறது. இதை அனைவரும் தவக்காலத்தில் நினைவுகூர்ந்து கொண்டாடவேண்டும் (காண். CCC 106).


**2. கிறிஸ்தவ வாழ்வில் தவம் பல்வேறு முறைகளில் வெளிப்படுத்தப்படுகிறது:**
நோன்பு, இறைவேண்டல், ஈகை இவற்றை ஒரு கிறிஸ்தவர் தமது அன்றாட வாழ்விலும் தவக்காலத்திலும் குறிப்பாக வெள்ளிக்கிழமையிலும் கடைப்பிடிக்கலாம். (காண். CCC 301).

**ஆ. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்**

1. திருமுழுக்கை நினைவிற்குக் கொணர்தல் அல்லது இதற்கென ஆயத்தப்படுத்தல், ஒப்புரவாதல், இறைவார்த்தையை ஊன்றிக் கேட்டல், இறைவேண்டலில் பங்கெடுத்தல் வழியாக பாஸ்கா மறைபொருளைக் கொண்டாட தவக்காலம் நம்மைத் தயாரிக்கிறது (திவ 109).
2. "…. பாவம் கடவுளுக்கு எதிரான குற்றம் என்னும் முறையில் அதை வெறுத்துத்தள்ளும் ஒப்புரவின் தனி இயல்பையும்… பதியச் செய்யவேண்டும் (திவ 109).
3. "……. ஆண்டவர் துன்பப்பட்டு இறந்த தூய வெள்ளியன்று பாஸ்கா நோன்பைத் தூய்மையாய் எங்கும் கடைப்பிடிக்க வேண்டும். இயலுமென்றால் தூய சனியன்றும் தொடர்ந்து நோன்பிருக்கலாம் (திவெ 110).

**இ. திருக்குறள்**

1. தவநெறிக்கு ஏற்ற மனவியல்பு கொண்டவர்க்கே தவக் கோலமும் பொருந்துவதாகும். தவ ஒழுக்கம் இல்லாதவர்கள் அக்கோலத்தை மேற்கொள்வது வீணான முயற்சியாகும் (திருக்குறள் 262-ன் தெளிவுரை).
2. பொருந்தாத பகைவரை அடக்குதலும் தம்மை விரும்பும் நண்பரை உணர்த்துதலும் நினைத்த அளவில் தவவாழ்வின் பயனால் கைகூடும் (திருக்குறள் 264-ன் தெளிவுரை).
3. தவம் செய்கின்றவரே தமக்குரிய கடமைகளைச் செய்கின்றவர் ஆவார் (காண். திருக்குறள் 266).
4. புடமிடப்பட்ட பொன் சுடச்சுட ஒளிவிடுதல்போல, தவம் செய்கின்றவரைத் துன்பம் வருத்த வருத்த, உண்மையான மெய்யுணர்வு ஒளிபெற்று வரும் (திருக்குறள் 264-ன் தெளிவுரை).
5. தான் என்னும் செருக்கு தன்னிடமிருந்து நீங்கிய தவவலிமை பெற்றவனை மற்ற உயிர்கள் எல்லாம் தொழுது போற்றும் (திருக்குறள் 268-ன் தெளிவுரை).
6. தவ நெறியால் ஆன்ம வலிமை பெற்ற ஞானிகட்குத் தம்மிடமிருந்தே வருகின்ற சீற்றத்தையும் எதிராக நின்று வெல்லுதலும் இயலும்.



7. உலகில் மெய்யறிவற்றவர்கள் பலராக இருப்பதற்குக் காரணம் தவம் செய்கின்றவர்கள் சிலராகவும் செய்யாதவர்கள் பலராகவும் இருப்பதேயாகும்.
8. நமக்கு உற்ற துன்பத்தைப் பொறுத்தலும் பிறவுயிருக்குத் துன்பம் இழைக்காதிருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்திற்கு உள்ளதான வடிவமாகும்.
9. உலகம் பழிக்கும் தீச்செயல்களைத் தவிர்த்துவிட்டால் மொட்டையடித்துக்கொள்ளலும் சடையைச் செயற்கைமுறையில் வளர்த்துக்கொள்ளலும் வேண்டா (திருக்குறள் 280-ன் தெளிவுரை).

## *திருவிவிலியம்*

திருவிவிலியத்தின் தொடக்கமுதல் முடிவுவரை தவத்தின் மேன்மையைப் பல்வேறு வார்த்தைகளில் விளிப்பதை நாம் நன்று காணலாம். குறிப்பாக தவத்தின் வெளிப்பாடுகளான
1. இறைவேண்டல், 2. நோன்பு, 3. அறச்செயல்களில் ஈடுபடல், 4. குற்றங்களிலிருந்து விடுபட முயற்சித்தல், 5. இயற்கைக்கு மேற்பட்ட செயல்கள் என நிரூபிக்கும்படி செயற்படுதல் ஆகியவற்றின் நிகழ்வுகளை ஏராளமாகக் காணலாம்.

1. மோசேயின் இறை வேண்டலும் - அமலேக்கியரோடு போரும் (விப 17:8-16).
2. பாறையிலிருந்து தண்ணீர் (விப 17: 1-7).
3. இஸ்ரயேலர் யோர்தானைக் கடத்தல், எரிக்கோவைக் கைப்பற்றுதல் (யேசு 3,6).
4. சிம்சோன் பெலிஸ்தியரைத் தோற்கடித்தல் (நீத 15: 9-20)
5. சாமுவேலின் பிறப்பு (1சாமு 1:19-20).
6. பேய் சாராவை விட்டு நீங்குதல் (தோபி 8:1-3).
7. கடவுளின் பராமரிப்பு (தானி (இ)1:23-27).
8. நோன்பு இருத்தல் (மத் 6:16-18).
9. இறைவேண்டலினாலும் நோன்பினாலும் பேய் ஓடும் (மாற் 9:25-29). எடுத்துக்காட்டுகள் மேலும் தொடர்கின்றன.

## *தவம் பற்றிய தவறான புரிதல்கள்*

அந்தக் குறும்புக்காரச் சிறுவன் தனது தாத்தாவிடம், "எங்க அப்பாவைத் தவமிருந்து பெற்றதாகச் சொன்னீங்களே: அப்படி என்ன தவம் செஞ்சீங்க தாத்தா?" என்றான். அதற்கு தாத்தா, "ஒங்க பாட்டிக்கு தொடர்ந்து 4 குழந்தைகள் கருச்சிதைவில் பாதிக்கப்பட்டதாலே நானும் உன் பாட்டியும் போவாத கோயில் இல்லெ, வேண்டாத சாமியில்லே, முழுகாத கொளமுமில்லே என்றார்." அதுக்கு அந்தச் சிறுவன் "அதுதான் என் தந்தை எப்ப பாத்தாலும் குடியிலே மூழ்கிக் கெடக்குறாரோ?" என்றான். அதாவது அந்தத் தவம் சரியில்லை என்பது அவனது வாதம். தவம் மாந்திரீகம் இல்லை. மாறாக அது அறியமுடியாத அற்புத சக்தியின் ஊற்று. பலர் தவம் என்றதும்:

- அமுத சுரபி போன்று அள்ளித் தருவது
- வேண்டாதவரை அழித்துப்போடும் அநீத சக்தி
- தேவை எதுவோ அதைத் தேவையான அளவுக்குத் தரும்
- அதை பாதுகாப்பு அறையில் வைத்துக்கொண்டு பயன்படுத்திக் கொள்ளலாம்
- அது தங்கு தடையில்லாமல் ஆபத்து வேளையில் சகாயனாக அசுர வேகத்தில் செயல்படும்.
- ஏவுதல், பில்லி சூனியம், ஏவல் போன்ற எதிர்வினைகளின் புகலிடம் என்பன போன்ற கற்பனைகளில் மிதக்கின்றனர். தவத்திரு, தவக் 'களை' தவமணி- என்னவெல்லாம் நேர்மறை வினைப் பயனை பயன்படுத்தும் பெயர்கள்தானே தவிர, தன்னிலே ஆற்றலைத் தாங்கியுள்ள அருளடையாள வாய்ப்பாட்டு – உச்சாரண (Matter)ங்களல்ல.

## *தவக்கோலம் தரும் போதனைகள்*

ஒரு பண்பாட்டுச் சூழல் தனி ஒருவருக்குச் சொந்தமில்லை. அது நுகர்வுவெறி போன்று ஒருவரிடமிருந்து மற்றவருக்கு தொற்றிக்கொள்ளும் பண்புடையது. எனவேதான் ஒரு சாரார் (பிரிவினர்) தம் வழிபாட்டு முறையில் பின்பற்றும் உடை, நடை, உடல் அமைப்பு, தியானம் வெளி - உள் செயல்கள் ஆகியவை தேர்வுசெய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. அதிலும் பலர் பாலப்பருவத்திலிருந்தே இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்றனர். குறிப்பாக தவப் (திருப்) பயணம் மேற்கொள்ளுதல், நெற்றியில் திருநீறு, கழுத்தில் மணிமாலைகள், காவி நிற உடைகள், தொழுகையில் விழுந்து வணங்குதல், இயற்கைப் பொருள்களைத் தொட்டு வணங்குதல், தீபாராதனை செய்தல்-காட்டுதல் போன்றவை பின்பற்றப்படும் நடைமுறைச் செயல்கள்.

## *உள்ளம்தான் உரைகல், மற்றதெல்லாம் மாய்மாலம்!*

உள்ளத்தால் 'தீர்மானிக்கப்படாத, உணர்வால் ஒன்றிக்காத, சரியான புரிதல் இல்லாத, மந்தை மனப்பான்மை கொண்ட எந்தச் செயலும் அதனால் முழுப்பயன் விளைவது இல்லை என்பதே நிதர்சன உண்மை. அதிலும் தவம் சார்ந்த செயல்கள் தற்செயலாக, எதிர்பாராதவிதத்தில் செய்யப்படும் எந்தச்செயலும் அது உள்ளத்தால் திட்டமிடப்பட்டதில்லை. எனவே அதனால் சமூகத்தில் அவை நல்ல வரவேற்புப் பெறுவதில்லை. அதனையே மாய்மாலை அதாவது மிகைப்படுத்தப்பட்ட, உண்மைக்கு ஆதாரமற்ற, அடித்தளமற்ற வெறும் வார்த்தைகளாக அவை தனித்து விடப்படுகின்றன.

## *எப்படித்தான் எதிர்கொள்ளலாம் தவக்காலத்தை?*

தவக்காலத்தைப் பார், ஆடித்தள்ளுபடி போன்றும் குறிப்பிட்ட நலன்களை குவிக்க ஏற்ற காலம் என்றும் கருதி அக்காலத்தில் மட்டும் புனிதப் போர்வையை போர்த்திக் கொள்வதாகக் காட்டிக் கொள்வது துர்அதிஷ்டவசமானது. அதே சமயத்தில் அக்காலத்தில் அவர்கள் கடைப்பிடிக்கும் தவ ஒழுங்குகள் போற்றப்படும் விதத்தில் அமைந்துள்ளன என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் தவக்காலம் முடிந்ததும் 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற உலக சொல்லடைக்கு ஏற்ப கட்டிக்காத்த கண்ணியங்கள், தருமங்கள், அறச்செயல்கள், அன்பு பாராட்டல்கள் என எல்லாவற்றையுமே காற்றில் பறக்கவிட்டு, அதற்குள் மனதை சமரசம் செய்துகொண்டு பின்னோக்கிப் பயணிப்பதுதான் ஆபத்தானது. எனவே,

## *சிறப்புக் கவனத்தோடு தவக்காலத்தை அணுக வேண்டும்:*

- இறைவார்த்தை வாசிப்புக்கு ஏற்ற இடமளித்து, வாசிக்கும் பகுதி குறைவாயினும் அவற்றை வாழ்க்கை அனுபவமாக்கும் விதத்தில் அமைத்துக்கொள்ளுதல்.
- இறைவேண்டலின் அனைத்துக் கூறுகளையும் நுணுக்கமாய் ஆராய்ந்து, அவற்றைத் தானும் கடைப்பிடித்து, பிறரும் கற்றுக் கொள்ளும் விதத்தில் செயல்பாட்டுக்குக் கொண்டுவரல்.
- தன்னால் முறியவில்லை தானாக வரட்டும் என்று காத்திராமல் முறிந்த உறவுகளைச் சீராக்குவதில் முனைப்புடன் செயல்படல்.
- முன்சார்பு எண்ணத்தால் பிறரைத் தானும் புரிந்துகொண்டு, பிறருக்கும் தவறாக அறிமுகம் செய்துவைக்கும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் சரியான தீர்வுகாண விழைதல்.
- என்னுடைய இப்படிப்பட்ட பாவத்தை எப்படி மன்னிப்பார் இறைவன் என்று பயந்து, அகன்று, இறைவனோடு இணைப்பைத் தவிர்த்து தனிமரமாய் நிற்க வழிவகுக்கும் பெருங்குற்ற மனப்பான்மையிலிருந்து விடுபடுதல்.
- சாதனையை மனக்கண்ணால்கூடக் காணவிடாமல், அணு அணுவாகச் சாகடிக்கும் தாழ்வு மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி வைத்தல்.
- செய்யத்தவறிய நன்மைகளைப் பட்டியலிட்டு, அவற்றுக்காக மனம் வருந்தி… நன்மைசெய்ய வாய்ப்பினை வேண்டியும், வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்தியும் சமன்செய்தல்.
- தவறு செய்யும்போது சுட்டிக்காட்டும், சுட்டிக்கேட்கும் உள்ளங்கள் தங்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட 'காலக் கண்ணாடிகள்' எனக் கருதி, அவர்களை காய்ச்சி எடுப்பதை விடுத்து, அவர்களோடு கைகோர்த்துப் பயணித்தல்.
- ஈன்றோருக்கு இழைக்கும் கொடுமைகளை எண்ணிப்பார்த்து, கண்ணீர் வடித்து, அவர்கள் இதயம் இலேசாகி அவர்கள் ஆசிவழங்க என்னவெல்லாம் வழிமுறைகள் உள்ளனவோ அவற்றைக் கையாளுதல்.
- பிள்ளை வளர்ப்பு, பாராட்டு, நன்றிகூறல் போன்ற சிறப்புக் கடமைகளைச் செய்வதில் தவறிவிட்டு 'இதெல்லாம் என்ன பாவம்?' என்று தவறு செய்யும் மனத்திற்குச் சார்பாக இருக்கும் அலட்சியப் போக்கை அகற்ற முயலுதல்.
- விட்டுக்கொடாததால், சந்தேகப்படுதலால், அடிமைப் படுத்துதலால் மனமுறிவுக்கு உள்ளாகி இருக்கும் குடும்ப உறுப்பினர்களது உள்ளத்தைப் புரிந்துகொண்டு தானே முன்சென்று கலந்துரையாடி இயல்புநிலைக்குத் திரும்புதல்.
- தவறான கணக்கிடுதலால் குடும்ப வருமானத்தை கற்பனையாக அதிகப்படுத்திப் பார்த்து, செலவைத் தாராளமயமாக்கி, கையை மட்டுமல்ல உடல் முழுவதையுமே சுட்டுக்கொள்ளும் முரண்பட்ட போக்குக்கு முற்றுப்புள்ளி வைத்தல்.
- இந்த ஆண்டு எட்டு மடங்காகப் பெருகிவிட்ட செல்போன், வாட்ச்சப், டுவிட்டர், மின்சாரம் போன்ற ஊடகச் செலவுகளால் எதிர்காலத்தில் தலையில் கைவைத்துக் கதறாமலிருக்க இத்தவக்காலத்தில் அமர்ந்து திட்டமிடல்.
- கல்வி கொஞ்சம் படித்திருப்பதும் பட்டம் பெற்றிருப்பதும் உண்மைதான். அதற்கு உரிய வேலை உடனே கிடைக்காது என்பதும் தெரிந்ததுதான். அதுவரை White Caller Jobக்காகக் காத்திருப்பதை விடுத்து, கிடைக்கும் வேலையை 'பண்பை' வெளிப்படுத்தும் விதத்தில் பயன்படுத்தி உழைத்து, சிறு அளவிலேனும் ஊதியம் பெற்று உவப்புடன் வாழத் தொடங்குவோம்.
- முட்டையிடும் நேரத்தில் மட்டும் இடத்தைத் தேடும் பெட்டைக் கோழி போன்று கடைசிவரை முடிவெடுக்கத் திணறும் நிலையிலிருந்து விடுபட, தூய ஆவியாரின் துணையை நாடி சிறப்பாகத் திட்டமிடத் தொடங்குவோம்.
- கோவில் காரியமா? அருளடையாள வாழ்வா? அன்பிய ஒன்று கூடலா? ஆன்மிகத் தேடலா? 'ஐயையோ வேண்டாம்' என்று அவலமாய் நாள் கடத்துதலை நிறுத்திக்கொள்வோம்.
- திட்டமிட்டுப் பிறர்மேல் குற்றப்பழி சுமத்துவதில் அடையும் தற்காலிக சந்தோசத்தைத் தியாகம் செய்வோம்.
- எல்லாருக்கும் பாடமாக அமைந்த கடந்தகால மழை, வெள்ளப் பேரிடர் சமயத்தில் கற்றுக்கொண்ட பாடங்களை (தன்னலமின்றி உதவிய இளையோர் நலப்பணிக் குழுக்களிடமிருந்து, குழுவிடமிருந்து -நினைவுகூர்வோம்!
- தேவையானவற்றுக்காக மன்னிப்பு பெறுவதும் வழங்குவதும் வீரச்செயல் என்பதை நினைவில்கொள்வோம்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குடும்பநல பொதுநிலையினர் பணி மையத்தினால் நடாத்தப்பட்ட

# விசேட விழிப்புணர்வுக் கருத்தமர்வு







கடந்த பெப்ரவரி 04ஆம் திகதி குடும்பநல பொதுநிலையினர் பணி மையத்தினால் விசேட விழிப்புணர்வுக் கருத்தமர்வு ஒன்று சிறப்பாக நடாத்தப்பட்டது. இதில் பொதுநிலைப்பணியாளர்கள் 350ற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் அதிவந்தனைக்குரிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், சிறப்பு விருந்தினராக கொழுப்பு அன்பின் பரிமாணமச் சங்கத்தின் ஸ்தாபகர் பேராசிரியர் எஸ். ஜே. யோகராஜா அவர்களும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள். இச்செயலமர்வானது மூன்று விடயங்களை மையமாக வைத்து நடத்தப்பட்டது.

- பொதுநிலைப் பணிக்குழுக்களின் செயற்பாட்டறிக்கையும் ஆண்டுத்திட்டமும் சமர்ப்பித்தல்.
- மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் அவர்கள் பொதுநிலைப் பணியாளர்களைத் தரிசித்தலும் கலந்துரையாடலும்.
- "குடும்ப ஆன்மீகம்" தொடர்பான சிறப்புரை வழங்கல். (பேராசிரியர் எஸ். ஜே. யோகராஜா)

(இந்நிகழ்வு பற்றிய விரிவான தகவல்களை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்)

# மேலைத்தேய, கீழைத்தேய கிறிஸ்தவத் தலைவர்கள் சந்திப்பு

சுமார் ஆயிரம் ஆண்டுகள் பிளவுபட்டிருந்த, கிறிஸ்தவ மதத்தின் மேலைத்தேய மற்றும் கீழைத்தேய கிளைகளின் தலைவர்களின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பாப்பரசர் பிரான்சிஸ் மற்றும் ரஷ்யாவின் மிகப்பழைய பழைமைவாத கிறிஸ்தவப்பிரிவுத் திருச்சபையின் தலைவரான பாட்ரியார்க் கிரில் ஆகியோருக்கிடையே, முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கூறப்படும் இந்தச் சந்திப்பு கியூபாவில் இடம்பெற்றது.

ஹவானா விமான நிலையத்தில், இவர்களிடையேயான சந்திப்பு இரண்டு மணி நேரம் நீடித்தது. இச்சந்திப்பின் ஆரம்பத்தில், இரண்டு தலைவர்களும் ஆரத்தழுவி முத்தமிட்டுக்கொண்டனர்.

மேற்கத்தேய மற்றும் கீழைத்தேய கிறிஸ்தவ கிளைகள், 11ஆம் நூற்றாண்டில் பிரிந்துபோனது முதல், பாப்பரசருக்கும் ரஷ்யத் திருச்சபையின் தலைவர் ஒருவருக்கும் இடையே நடைபெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

மத்திய கிழக்கு நாடுகளில் இன்னல்களை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்களை பாதுகாக்குமாறு, இரண்டு தலைவர்களும் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக்கொண்டனர். உலகிலுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களையும் ஒன்றுபடுமாறும், இவர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர்.

பாப்பரசரை சகோதரன் எனக் கூறிய ரஷ்யத் திருச்சபையின் தலைவர் பாட்ரியார்க் கிரில், அவரை சந்தித்தது பெரும் மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்தார்.

கலந்துரையாடல்கள் வெளிப்படையானதாகவும் சகோதரத்துவமானதாகவும் இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரக்கத்தின் மறைப்பணியாளராக ஜெயசீலன் (செ. தா.) அடிகளார் திருத்தந்தையால் நியமனம்



இரக்கத்தின் யூபிலி ஆண்டை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இரக்கத்தின் மறைப்பணியாளர்களை (Missionaries of Mercy) நியமனம் செய்து பல்வேறு இடங்களுக்கும் அனுப்பியுள்ளார். இவர்களுள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செபமாலைத்தாசர் சபைக்குருவும், தற்போது கனடாவில் செபமாலைத்தாசர் ஆச்சிரமத்தில் பணிசெய்கின்றவருமான அருட்பணியாளர் பிரான்சிஸ் ஜெயசீலன் அடிகளாரும் திருத்தந்தையால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருத்தந்தைக்கு அடிகளார் கைலாகு கொடுப்பதை படத்தில் காணலாம்.

# சிறப்புற நடைபெற்ற கச்சதீவு அந்தோனியார் திருவிழா

## 6 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கை உ இந்திய பக்தர்கள் பங்கேற்பு

ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை - இந்திய பக்தர்கள் கலந்துகொண்டு தங்களுடைய வேண்டுதல்களை நிறைவேற்றிய கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி மாலை ஆரம்பமாகி 21ஆம் திகதி காலை 8.30 மணியளவில் நிறைவடைந்தது.

20ஆம் திகதி மாலை கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இதனை அடுத்து சிலுவைப்பாடுகளின் காட்சிகளும், வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன. 21ஆம் திகதி 6.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும், பக்தர்களுக்கான திருச்சொரூப ஆசீரும் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து ஆயருடைய ஆசிச்செய்தியும் இடம்பெற்று திருவிழா நிறைவடைந்தது.

இந்தத் திருவிழாவில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், அரச அதிகாரிகள், 300இற்கும் மேற்பட்ட கத்தோலிக்க அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை இந்திய பக்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஓமந்தைப் பங்கில் திருவிழாவும் கௌரவிப்பும்



கடந்த 31.01.2016 ஞாயிறு காலை 7.00 மணிக்கு வவுனியா ஓமந்தைப் பங்கின் பறன்நட்டகல் கிராமத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ள குழந்தை இயேசு சுரூபத்தின் கெபியில் 5வது வருடாந்தத் திருவிழாத் திருப்பலியானது அருட்பணி. சூ. டக்ளஸ் லோகு அடிகளார் தலைமையில் பங்குத்தந்தை அருட்பணி. சூ. லக்கோன்ஸ் பிகிறாடோ அடிகளாரின் பங்குபற்றலுடன் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பற்றிமா நகர், பறன்நட்டகல், பணிக்கர் புளியங்குளத்தைச் சேர்ந்த சிறார்கள் இவ்விழாவை திருப்பாலர் மறைபரப்பு தினமாகவும் சிறப்பித்துக் கொண்டாடினர்.

திருவிழாத் திருப்பலியின் நிறைவில் 2015ஆம் ஆண்டில் மன்னார் மறைமாவட்ட விவிலிய ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட விவிலிய வினாவிடைப் போட்டியில் மறைமாவட்ட ரீதியில் முதலாம் மூன்றாம் இடங்களைப் பெற்று ஓமந்தை பங்கிற்கு பெருமை சேர்த்துத் தந்த:

1. செல்வி. ஆன் மனஸ்வினி சொபின்சன் ஜுனஸ்
2. செல்வி. அனெக்சியா ஜோய்

ஆகிய சிறுமிகள் வெற்றிச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். -

தகவல் : பங்குத்தந்தை, ஓமந்தை.

மன்னாவை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்

# வவுனியாப் பங்கில் புனித செபஸ்தியார் திருவிழா

வவுனியா தெற்கிலுப்பைக்குளம் வாழ் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள புனித செபஸ்தியார் ஆலயத்தில் கடந்த தை மாதம் 24ம் திகதி திருவிழா கொண்டாடப்பட்டது. கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி இந்து சமய மக்களுக்கும் இப்புனிதர் அருள்பாலித்து வருகின்றார்.

வவுனியா பங்குத்தந்தை அருட்பணி ச. சத்தியராஜ் அடிகளார் கடந்த 21.01.2016 மாலை புனிதரின் கொடியை ஏற்றி திருவிழாவிற்கான ஆயத்த நாட்களை ஆரம்பித்துவைத்து பெற்றோருக்கான வழிபாட்டையும் நடத்தினார்.

2ஆம் நாள் இளைஞர்களுக்கான வழிபாடுகளை உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. றொனிஸ் வாஸ் அடிகளார் முன்னின்று நடாத்தினார்.

3ஆம் நாள் வேஸ்பர் திருப்பலியையும் நற்கருணை வழிபாட்டையும் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் அருட்பணி. பேணாட் அடிகளாரும், அருட்பணி. கிருபாகரன் அடிகளாரும், அருட்பணி ரவிராஜ் அடிகளாரும், வவுனியாப் பங்கின் மூத்த குருவான அருட்தந்தை ஜே. பி. தேவராஜா அடிகளாரும், அருட்பணி றெறன்ஸ் பெணான்டோ அடிகளாரும் சேர்ந்து ஒப்புக்கொடுத்தார்கள்.

திருவிழாத் திருப்பலியை 24ம் திகதி காலை 7.30 மணிக்கு கூட்டுத்திருப்பலியாக அருட்தந்தை கிருபாகரன் தலைமையில் ஏனைய அருட்தந்தையர்களும் சேர்ந்து ஒப்புக்கொடுத்தனர்.

இறுதியில் புனிதரின் திருச்சுரூபப் பவனியும் புனிதரின் ஆசீரும் பங்குத்தந்தை அவர்களால் வழங்கப்பட்டது.

*தகவல் : சு. கலிஸ்ரா*

## புனித வியாழன் பாதம் கழுவும் ..... 1ஆம் பக்கத் தொடர்ச்சி

இதன்வழியாக, எருசலேம் மாடியறையில் இறுதி இரவு உணவின்போது, இயேசு ஆற்றிய அடையாளச் செயல், இன்னும் அதிகமாக முழுமையான அர்த்தம் பெறும் என்றும், இயேசுவின் வரையறையற்ற அன்பாக, அவர் இவ்வுலகின் மீட்புக்காகத் தம்மையே வழங்கினார் என்றும் திருத்தந்தை தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து, கர்தினால் சாரா அவர்களுக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய கடிதத்தில், கவனமுடன் ஆலோசித்தபின்னர், உரோமானிய வழிபாட்டு முறையில், இம்மாற்றங்களைக் கொண்டுவருவதற்குத் தான் தீர்மானித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

உரோமானிய வழிபாட்டு முறையில் பாதம் கழுவும் சடங்கில், ஆண்கள் மட்டுமே பங்குகொள்வது குறிக்கப்பட்டுள்ளது. தற்போது அது மாற்றப்பட்டு, இதில் அருள்பணியாளர்கள், திருஅவையின் அனைத்து உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கலாம் என்று அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறையிரக்கத்தின் திருமுகம்

## இறையிரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவிக்கும் முகமாக

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய ஆணை மடல் - தொடர் 3



(சென்றவார தொடர்ச்சி)

25 எண்களைக் கொண்ட இந்த ஆணை மடல் மன்னாவில் தொடராக வெளியிடப்படும். இறைஇரக்க ஆண்டில் பயணம் செய்யும் நாம் அனைவரும் இதை வாசித்துப் பயனடைவோம்.

**14.** திருப்பயணம், இவ்வுலகில் நாம் ஒவ்வொருவரும் போகும் பயணத்தை சுட்டிக்காட்டுவதால் இந்தப் புனித ஆண்டில் இது சிறப்பு இடம் பிடிக்கின்றது. வாழ்வே ஒரு திருப்பயணம். மானிடர் யாவரும் விரும்பும் இலக்கை நோக்கிப் பயணிக்கும் திருப்பயணிகள். இவ்வாறே உரோமையிலோ உலகின் வேறெங்கோ உள்ள புனிதக் கதவுகளை அடைய ஒவ்வொருவரும் தத்தமது சக்திக்கு ஏற்றவாறு திருப்பயணம் மேற்கொள்ள வேண்டும். இந்தச் செயற்பாடு என்பது அடையவேண்டிய இலக்கு என்றும் அதற்கு அர்ப்பணமும், தியாகமும் தேவை என்பதன் அடையாளமாக அமைகின்றது.

திருப்பயணம் மனமாற்றத்திற்கு கருவியாய், உந்துசக்தியாய் அமைவதாக. புனித கதவு நிலைகளுக்குள் நுழைவதன் வழியாக கடவுளின் இரக்கத்தை தழுவிக்கொள்ளவும், இறைத்தந்தை நம்மீது இரக்கம் உள்ளவராய் இருந்ததுபோல, நாமும் பிறரிடம் இரக்கமுள்ளவராய், இருக்க நம்மையே அர்ப்பணித்துக்கொள்ள நாம் ஆற்றலைக் கண்டடைவோம்.

"பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள். அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள், அப்போதுதான் நீங்களும் கண்டனத்திற்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள், மன்னிப்புப் பெறுவீர்கள். கொடுங்கள், உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கிக், குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக்6:37-38) என்னும் வார்த்தைகள் வழியாக நமதாண்டவர் இயேசு நமது இலக்கை அடைவதற்கான திருப்பயணத்தின் பாதையைக் காண்பிக்கின்றார்.

நமதாண்டவர் அனைத்திற்கும் மேலாக நம்மை தீர்ப்பளிக்கவேண்டாம் எனவும், கண்டனம் செய்யக்கூடாது எனவும் கேட்டுக்கொள்கின்றார். ஒருவர் கடவுளின் தீர்ப்பிலிருந்து தப்பிக்க விரும்பினால் அவர் தனது சகோதர சகோதரிகளின் நீதிபதியாய் தன்னை ஆக்கிக்கொள்ளக் கூடாது. பிறருக்கு தீர்ப்பளிக்கும்போது மானிடர் மேல்மட்டத்தைத் தாண்டிப் பார்ப்பதில்லை. ஆனால் இறைத்தந்தை ஆன்மாவின் ஆழத்தையே ஊடுருவிப் பார்க்கின்றார். பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும் ஆகிய உணர்ச்சிகளால் உந்தப்படுகின்ற வார்த்தைகள் எவ்வளவு தீமையை விளைவிக்கின்றன.

பிறரைப்பற்றி இழிவாகப் பேசும்போது அவரைத் தவறாகக் காட்டுகின்றது. அவரின் புகழைக் குறைக்கின்றது, எத்தகைய புறணி பேசுவதற்கும் அவர்களைப் பலியாக்குகின்றது. தீர்ப்பளிப்பது மற்றும் கண்டனம் செய்வதிலிருந்து ஒதுங்கியிருப்பது என்பது நேர்மறையாகச் சிந்திக்கின்றபோது ஒவ்வொருவரிலும் இருக்கின்ற நல்லதை எப்படி ஏற்றுக்கொள்வது என்பதை அறிவதாகும். அடுத்தவரைப்பற்றி எல்லாம் தெரியும் என்றும், நமது ஆராயாத எண்ணத்தினாலும், நமது ஒருதலைப்பட்ச தீர்ப்பினாலும் வரும் துன்பங்களிலிருந்து அவரைக் காப்பதாகும். ஆனால் இரக்கத்தை வெளிப்படுத்துவதற்கு இதுவும் போதுமானதன்று. இயேசு நம்மை மன்னிக்கவும், கொடுக்கவும் கேட்டுக்கொள்கிறார். நாம் முதலில் கடவுளிடமிருந்து இரக்கத்தைப் பெற்றுக்கொண்டதனால் நாம் இரக்கத்தின் கருவியாக இருக்க வேண்டும். கடவுள் தனது நன்மைத்தனத்தைத் தாராளமாகப் பொழிகிறார் என்பதை அறிந்து நாம் பிறருடன் தாராளமாய் இருக்க வேண்டும். எனவே, "இறைத்தந்தைபோல இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்" என்பதே இப்புனித ஆண்டின் "விருது வாக்கு."

கடவுள் நம்மை எவ்வாறு அன்புசெய்கிறார் என்பதற்கான ஆதாரத்தை இரக்கத்திலே நாம் காணுகின்றோம். கடவுள் தன்னை முழுமையும், எப்போதும், இலவசமாக பதிலுக்கு எதுவும் கேட்காமல் தருகின்றார். நாம் அவரை கூவியழைக்கும் போதெல்லாம் அவர் நமக்கு உதவ வருகின்றார். "கடவுளே! என்னை விடுவித்தருளும், எனக்கு உதவிசெய்ய விரைந்து வாரும்!" (திபா70:1) என்னும் வார்த்தைகளைக்கொண்டு திருச்சபை தனது அன்றாட செபத்தைத் தொடங்குவது எவ்வளவு அழகானது. இறைவனின் உதவியை நாம் கேட்பது என்பதே கடவுள் நம்மீது கொண்ட இரக்கத்தின் முதல் படி. அவர் நமது பலவீனத்தில் நமக்கு உதவ வருகின்றார். இறையிரக்கத்தையும், கடவுள் நம் அருகில் இருப்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள உதவுவதில்தான் கடவுளின் உதவி அடங்கியிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் அவரது பரிவிரக்கத்தினால் தொடப்பட்டு நாம் மற்றவர்மீது பரிவு கொண்டவர்களாய் மாற முடியும்.

**15.** இப்புனித ஆண்டில், நவீன சமூகம் உருவாக்கிய சமூகத்தின் வெளி விளிம்பில் வாழ்வோருக்கு நமது இதயத்தைத் திறந்துவிடும் அனுபவத்தைப் பெறவேண்டுமென எதிர்பார்க்கின்றோம். இன்றைய உலகில் எத்தனை நிச்சயமற்ற வேதனையான சூழ்நிலைகள் உள்ளன! செல்வந்தர்களின் கண்டுகொள்ளாமையால் தங்களின் குரல்கள் அடக்கப்பட்டு அழிந்துபோனதால் தங்களின் குரல் இழந்தவர்கள் தங்கள் உடலில் தாங்கியுள்ள காயங்கள் எத்தனை! இந்த யூபிலி ஆண்டில் இந்தக் காயங்களைக் குணப்படுத்தவும், ஆறுதல் எனும் எண்ணெயால் தடவிக் கொடுக்கவும், இரக்கத்தினால் அவர்களைக் கட்டி, தோழமையான, விழிப்பான, அக்கறையினால் அவர்களைக் குணப்படுத்த திருச்சபை இன்னும் அதிகமாய் அழைக்கப்படுகின்றது. மற்றவரை சிறுமைப்படுத்துகின்ற, கண்டுகொள்ளாத்தன்மைக்கோ, புதியதைக் கண்டுகொள்ளாமல் நம்மைத் தடுக்கின்ற இயந்திரத்தன்மையான வழக்கத்திற்கோ நாம் விழுந்துவிடக்கூடாது. அழிவுக்குரிய வெறுப்பு மனப்பான்மையை நாம் விரட்டுவோமாக! நமது கண்களைத் திறந்து உலகின் இழிநிலையையும், தங்களின் மாண்பு மறுக்கப்பட்ட நமது சகோதர சகோதரிகளின் காயங்களையும் காண்போம். நாம் அவர்களின் உதவிவேண்டி எழும் குரலுக்கு செவிமடுக்க கடமையுண்டு என்பதை உணர்வோம்! நாம் அவர்களை அணுகி அவர்களுக்கு உதவுவோமாக! இவ்வாறு அவர்கள் நமது உடனிருப்பையும், நட்பையும், தோழமையையும் உணர்வார்களாக! அவர்களின் கூக்குரல் நமது கூக்குரலாவதாக! நமது வெளிவேடம் மற்றும் சுயநலம் ஆகியவற்றை மூடி நம்மில் உயர்ந்தோங்கியுள்ள கண்டுகொள்ளாத் தன்மை எனும் தடைகளை நாம் ஒன்றாய் இணைந்து தகர்த்தெறிவோமாக!

இந்த யூபிலி ஆண்டில், கிறிஸ்தவர்கள் மனிதநேய மற்றும் ஆன்மீக இரக்கச் செயல்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பது எனது தணியாத ஆவலாய் உள்ளது. ஏழ்மையின்முன் பலநேரங்களில் சோர்ந்து போகின்ற நமது மனச்சாட்சியை மீண்டும் எழுப்புகின்ற ஒரு வழியாய் அது அமையும். ஏழையர் கடவுளின் இரக்கத்தை சிறப்பாய் அனுபவிக்கின்ற நற்செய்தியின் இதயத்தின் ஆழத்திற்குள் நுழைவோமாக. இயேசு தனது போதனையில் இந்த இரக்கச் செயல்களை நமக்கு அறிமுகம் செய்கின்றார். இதனால் நாம் அவரது சீடர்களாக வாழ்கிறோமா இல்லையா என்று அறிய முடிகின்றது. இந்த மனிதநேய இரக்கச் செயல்களை நாம் கண்டுபிடிப்போமாக: பசியுற்றோருக்கு உணவளிப்பது தாகமுற்றோருக்குக் குடிக்கக் கொடுப்பது, ஆடையற்றவரை உடுத்துவது, அந்நியரை வரவேற்பது, நோயாளரை நலமாக்குவது, சிறையிலிருப்போரைச் சந்திப்பது, இறந்தோரை அடக்கம் செய்வது. ஆன்மீக இரக்கச் செயல்களையும் நாம் மறத்தலாகாது. குழப்பத்திலிருப்போருக்கு வழிகாட்டுவது, அறியாதவருக்கு அறிவுறுத்துவது, பாவிகளை மனமாற அழைப்பது, துன்புறுவோருக்கு ஆறுதல் தருவது, குற்றங்களை மன்னிப்பது, தீங்கு செய்வோரை பொறுமையுடன் சகித்துக்கொள்வது, வாழ்வோருக்காகவும் இறந்தவருக்காகவும் செபிப்பது.

நாம் பசித்தோருக்கு உணவளித்தோமா? தாகமாயிருந்தவருக்கு தாகம் தணித்தோமா? அன்னியரை வரவேற்றோமா? ஆடையின்றி இருந்தவரை உடுத்தினோமா? நோயுற்றும் சிறையில் இருந்தோருடனும் நேரம் செலவிட்டோமா? (காண் மத் 25:31-45) என்னும் ஆண்டவரின் வார்த்தையிலிருந்து நாம் தப்பிக்க முடியாது. நாம் தீர்ப்பிடுவதற்கான அளவுகோலாக அவை செயல்படும். மேலும் நம்பிக்கை இழப்பிற்கும் அதனால் தனிமைக்கும் காரணமாகும் குழப்பத்தில் இருப்போரை அதிலிருந்து விடுபட உதவி செய்தோமா? என்று நாம் கேட்கப்படுவோம். ஏழ்மையின் கட்டுகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள போதுமான வசதி இல்லாத குழந்தைகளையும் அறியாமலே வாழும் இலட்சக்கணக்கான மக்களையும் அதிலிருந்து வெளியேற நாம் உதவி செய்தோமா? தனிமையிலும், துயரத்திலும் இருப்போருக்கு அருகில் இருந்தோமா? நமக்குத் தீங்கிழைத்தோரை நாம் மன்னித்தோமா? வன்முறைக்கு இட்டுச்செல்லும் கோபத்தையும் வெறுப்புணர்வையும் நாம் வெறுத்தொதுக்கினோமா? நம்மிடம் இரக்கம் காட்டும் கடவுளைப்போல நாம் இரக்கம் கொண்டிருக்கின்றோமா? ஆண்டவரிடம் நம் செபத்தில் சகோதர சகோதரிகளுக்காகச் செபித்தோமா? மிகச்சிறியோராகிய இவர்கள் ஒவ்வொருவரிலும் கிறிஸ்துவே பிரசன்னமாயிருக்கிறார். துன்புறுத்தப்படுவோர், நொறுக்கப்படுவோர், சாட்டையால் அடிக்கப்படுவோர், ஊட்டச்சத்தின்றி வாடுவோர், நாடு கடத்தப்படுவோர் ஆகியோரின் உடல்களில் கிறிஸ்துவின் உடலைக் காணக்கூடியதாய் இருக்கிறது. இவை நம்மால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், தொடப்பட வேண்டும், கவனிக்கப்படவேண்டும். "இந்த வாழ்விலிருந்து நாம் பிரிந்துசெல்ல நம்மைத் தயாரிக்கும் வேளையில் நம் அன்பின் அடிப்படையிலே தீர்ப்பிடப்படுவோம். எனும் புனித திருச்சிலுவை யோவானின் வார்த்தைகளை நாம் மறக்கக் கூடாது.

**16.** யூபிலியை இறை நம்பிக்கையுடன் வாழ உதவும் இன்னொரு கருத்தை புனித லூக்கா நற்செய்தியில் காண்கின்றோம் ஓய்வு நாளன்று இயேசு நாசரேத்துக்கு திரும்பிச் சென்றார். அவரின் வழக்கப்படி தொழுகைக் கூடத்திற்குள் நுழைந்தார் என லூக்கா எழுதுகின்றார். திருநூலை வாசித்து விளக்கமளிக்குமாறு அவர்கள் அவரை அழைத்தார்கள். அந்தத் திருநூல் பகுதி எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது. அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது, "ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உள்ளது: ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு
விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும், என்னை அனுப்பியுள்ளார். ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழங்கவும் என்னை அனுப்பியுள்ளார், (எசா 61:1-2)

"ஆண்டவரின் அருள் தரும் ஆண்டு" அல்லது "இரக்கத்தின் ஆண்டு"- இதைத்தான் நமதாண்டவர் முழங்கினார். இதைத்தான் நாம் இப்போது வாழ ஆசைப்படுகின்றோம். ஏழைகளுக்கு ஆறுதலின் வார்த்தை அல்லது செயற்பாடுகளைச் செய்வது, நவீன உலகில் புதிய வகை அடிமைத்தனங்களால் கட்டுண்டு இருப்போருக்கு விடுதலையை அறிவிப்பது, தங்களுக்குள்ளாகவே புதைந்து போயிருப்பதால் பார்க்க முடியாதவர்களுக்கு பார்வையளிப்பது, மாண்பு பறிக்கப்பட்ட அனைவருக்கும் அதைத் திரும்ப அளிப்பது ஆகிய இறைவாக்கினரின் வார்த்தையில் எதிரொலிக்கும் இயேசுவின் பணியில் உள்ள வளத்தை இந்த புனித ஆண்டு முன்னிறுத்தும். இயேசுவின் போதனை தங்களின் சான்று வாழ்வால் கிறிஸ்தவர்கள் இறை நம்பிக்கைக்கு தரும் பதிலிறுப்பால் மீண்டும் காணக்கூடியதாக்கப்படும். "இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும், தாம் பெற்ற அருள் கொடைகளைப் பயன்படுத்த வேண்டும்". (உரோ 12:8) எனும் திருத்தூதரின் வார்த்தைகள் நம்மைத் தொடர்ந்து வருவனவாக.

**17.** இந்த யூபிலி ஆண்டில் வரும் தவக்காலம் கடவுளின் இரக்கத்தை அனுபவிக்கவும் கொண்டாடவும் உதவும் தனிச்சிறப்பு நேரமாக அர்த்தமுள்ள முறையில் வாழப்படவேண்டும். இறைத்தந்தையின் இரக்கமுள்ள திருமுகத்தை மீண்டும் கண்டடைவதற்கு நமக்கு உதவும் தவக்கால வாரங்களின் தியானத்திற்கு ஏற்ற திருநூலின் பக்கங்கள் எவ்வளவோ உள்ளன. "உமக்கு நிகரான இறைவன் யார்? எஞ்சியிருப்போரின் தீச்செயலை மன்னிக்கின்றீர்: உமக்கு நிகரானவர் யார்? அவர் தம் சினத்தில் என்றென்றும் நிலைத்திரார். ஏனெனில் அவர் பேரன்பு கூர்வதில் விருப்பமுடையவர். அவர் நம்மீது இரக்கம் காட்டுவார். நம் தீச்செயல்களை மிதித்துப் போடுவார். நம் பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்திடுவார்" (மீக்கா 7:18-19) எனும் இறைவாக்கினர் மீக்காவின் வார்த்தைகளை மீண்டும் கூறி அவற்றை நம்முடையதாக்கிக் கொள்வோம்.

"கொடுமைத்தளைகளை அவிழ்ப்பதும் நுகத்தின் பிணையல்களை அறுப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு! பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்துகொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்துவருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக்கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு! அப்போது உன் ஒளி விடியல்போல் எழும். விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும். உன் நேர்மை உனக்குமுன் செல்லும். ஆண்டவரின் மாட்சி உனக்குப்பின் சென்று காக்கும். அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய். அவர் உனக்குப் பதிலளிப்பார். நீ கூக்குரல் இடுவாய். அவர் "இதோ! நான்" என மறுமொழி தருவார். உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ் சாட்டுவதையும். பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும். இருண்ட உன் நிலை நண்பகல்போல் ஆகும். ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார். வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார். உன் எலும்புகளை வலிமையாக்குவார், நீயும் நீர் பாய்ந்த தோட்டம்போலும் ஒருபோதும் வற்றாத நீரூற்றுப் போலும் இருப்பாய்" (எசாயா58:6-11) என்னும் இறைவாக்கினர் எசாயாவின் பக்கங்களை செபம், உண்ணா நோன்பு, இரக்கச் செயல் ஆகியவற்றிற்கான இக்காலத்தில் நாம் தியானிக்கலாம்.

தவக்காலத்தின் நான்காம் வாரத்திற்கு முன்வரும் வெள்ளி மற்றும் சனிக் கிழமைகளில் கொண்டாடப்படும் "ஆண்டவருக்காக இருபத்திநான்கு மணிநேரம்" என்னும் புதுமுயற்சி எல்லா மறைமாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

இளையோர் உட்பட நிறைய மக்கள் ஒப்புரவு அருட்சாதனத்தை நோக்கி திரும்ப வருகின்றார்கள். இந்த அனுபவத்தின் வாயிலாக கருத்தூன்றிய செபவேளையை வாழ்ந்தும், தங்களின் வாழ்வின் பொருளை மீண்டும் கண்டு, அவர்கள் ஆண்டவரிடம் திரும்ப வரும் வழியை அவர்கள் மீண்டும் கண்டுபிடிக்கிறார்கள். மக்கள் தங்களின் கரங்களினால் கடவுளின் இரக்கத்தின் மாட்சியைத் தொட்டுணருமாறு நாம் மீண்டும் ஒப்புரவு அருட்சாதனத்தை மையப்படுத்துவோமாக. மனம் மாறும் ஒவ்வொருவருக்கும் இது உள்ளார்ந்த உண்மையான அமைதியின் ஊற்றாய் விளங்கும்.

ஒப்புரவு அருட்சாதனம் வழங்குவோர் இறைத்தந்தையின் இரக்கத்தின் உண்மையான அடையாளங்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதில் நான் சோர்வடைய மாட்டேன். நாம் தன்னிச்சையாகவே நல்ல ஒப்புரவு அருட்சாதனம் வழங்குபவராக ஆவதில்லை.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# மெக்சிகோ நாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ்





ஹவானாவிலிருந்து மூன்று மணி நேரம் பயணம் செய்து மெக்சிகோ நாட்டுத் தலைநகர் பெனித்தோ வாரெஸ் பன்னாட்டு விமான நிலையத்தில் திருத்தந்தை சென்றிறங்கினார். விமான நிலையத்தில், மெக்சிகோ அரசுத்தலைவர் அவரின் மனைவியுடன் திருத்தந்தையை வரவேற்று சிவப்புக் கம்பளத்தில் நடத்திவந்தார். மெக்சிகோ பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்ச்சி விமான நிலையத்தில் நடைபெற்றது. பல வகையான பாரம்பரிய இசைக் கருவிகளுடன் அந்நாட்டு மரபுத் தொப்பிகளை ஆண்கள் அணிந்துகொண்டும் பெண்கள் சிவப்புநிற ஆடைகளுடனும் நடனமாடி வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து மெக்சிகோ நகர் திருப்பீடத் தூதரத்திற்கு 19 கிலோ மீட்டர் தூரம் காரில் சென்றார் திருத்தந்தை. வழியெங்கும் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் மஞ்சள் கொடிகளை ஆட்டிக்கொண்டு மின்னும் ஒளிவிளக்குகளில் "திருத்தந்தையே, இந்த உலகம் முழுவதும் உம்மை அன்புகூர்கின்றது" என்று பாடிக்கொண்டு நின்றனர்.

இலத்தீன் அமெரிக்காவில் அதிகமான கத்தோலிக்கரைக் கொண்டுள்ள நாடு மெக்சிகோ ஆகும். இம்மக்களின் ஆரவாரத்தைக்கொண்டே இதனை அறிந்துகொள்ளலாம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பீடத் தூதரகத்தில் இரவு உணவருந்தி உறங்கச்செல்வதற்கு முன்னர் அந்த இடத்திற்கு முன்பாகக் கூடியிருந்த மக்களிடம், "இந்த வார நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு உங்களுக்கு ஓய்வு தேவை" என்று சொல்லி, அங்கிருந்த மக்கள் கொடுத்த இரண்டு வெள்ளை ரோஜாக்களைப் பெற்றுக்கொண்டார். பின்னர். அம்மக்களுடன் சேர்ந்து, "அருள் நிறைந்த மரியே" என்ற செபத்தைச் சொன்னார். பின்னர் அவர்களிடம் "அன்னை மரியாவைப் பார்த்து, நம்மை அன்புகூர்பவர்கள், நாம் அன்பு கூர்பவர்கள், நமக்குப் பிடிக்காதவர்கள், நம்மைப் பிடிக்காதவர்கள், நம்மீது பொறாமைப்படுபவர்கள் ஆகியோரின் முகங்களை நினைவுகூருங்கள்" என்று கூறினார்.

## செபம், திருஅவையின் வாழ்வுக்கு உண்மையான உந்து சக்தி

செபம் வியத்தகு வேலைகளைச் செய்கின்றது மற்றும் பக்தியை மறந்து இதயம் கடினமடைவதைத் தடுக்கின்றது என்று சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் கடந்த 12.01.2016 அன்று நிறைவேற்றிய திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

விசுவாசிகளின் செபம் திருஅவையை மாற்றுகின்றது. திருத்தந்தை, ஆயர்கள், அருள்பணியாளர், அருள்சகோதரிகள் ஆகிய நாம் திருஅவையை முன்னோக்கி நடத்தவில்லை, ஆனால் அவ்வேலையை புனிதர்கள் செய்கின்றார்கள் என்றும் திருப்பலி மறையுரையில் திருத்தந்தை கூறினார்.

ஆலயத்தில் கடவுளிடம் குழந்தை வரம் கேட்டுப் புலம்பி கண்ணீர் சிந்திய அன்னா என்ற பெண், மது மயக்கத்தில் இவ்வாறு புலம்புகிறார் என்று அன்னாவை ஆலயக் குரு ஏலி தவறாகக் கணித்தது பற்றிய அன்றைய திருப்பலியின் முதல் வாசகத்தை (1 சாமு 1: 9-20) மையப்படுத்தி திருத்தந்தை மறையுரையாற்றினார்.

செபம் அற்புதங்களை ஆற்றுகின்றது. தங்களின் பக்தியை இழந்த கிறிஸ்தவர்களுக்கு, பொதுநிலையினரானாலும் சரி, ஆயர், அருள்பணியாளர்களானாலும் சரி எல்லாருக்கும் செபம் புதுமைகளை நிகழ்த்துகின்றது என்றும் திருத்தந்தை கூறினார்.

நீதியின் சாம்பலில் பக்தி உணர்வை இழக்கிறோம். எனவே நாம் விசுவாச மனிதர்களாக மாற வேண்டும் என்றுரைத்த திருத்தந்தை, அன்னா தனது இதயத்தில் செபித்தார், அவரின் உதடுகள் மட்டுமே அசைந்தன, துயரத்தோடு, கண்ணீரோடு ஆண்டவரிடம் வரம் கேட்பது விசுவாச மனிதரின் துணிச்சலைக் காட்டுகின்றது என்றும் கூறினார்.

புனிதர்கள் கடவுளால் அனைத்தையும் ஆற்ற இயலும் என்று நம்புவதற்குத் துணிச்சலைக்கொண்டிருந்தவர்கள் என்று கூறிய திருத்தந்தை, ஆண்டவரே செபத்தில் நம்பிக்கை வைப்பதற்கு எங்களுக்கு வரம் தாரும் என்று செபித்து மறையுரையை நிறைவு செய்தார்.

மேலும் நாம் ஆண்டவரிடம் நம்மையே அர்ப்பணிக்கும்போது நம் வாழ்வுப் பாதையில் நாம் சந்திக்கும் அனைத்து இடர்களையும் நம்மால் மேற்கொள்ள முடியும் என்பது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியாக கடந்த 12.01.2016 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

## முன்னறிவிப்பின்றி முதியோரைச் சந்திக்கச் சென்ற திருத்தந்தை



இரக்கத்தின் யூபிலி ஆண்டின் ஒரு நடவடிக்கையாக கடந்த 16.01.2016 வெள்ளி மாலை, உரோம் நகரின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள முதியோர் இல்லம் ஒன்றை, எவ்வித முன்னறிவிப்புமின்றி சென்று திருத்தந்தை பிரான்சிஸ் சந்தித்தார்.

இந்தச் சிறப்பு யூபிலி ஆண்டில், மாதத்திற்கு ஒரு முறையாகிலும், இரக்கத்தின் வெளிப்படையான, எடுத்துக்காட்டான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளபடி, உரோம் நகரின் புறநகர்ப் பகுதியிலுள்ள புருனோ போஸ்சி முதியோர் இல்லத்திற்கு, திடீரென சென்று, அங்குள்ள 33 வயதானவர்களை தனித்தனியாகச் சந்தித்து, அவர்கள் விருப்பப்படி புகைப்படங்கள் எடுத்துக்கொண்டதுடன், அவர்களுடன் அமர்ந்து உரையாடினார்.

முதியோர்களைச் சந்தித்தபின், அதே பகுதியில் உள்ள Iride என்ற நோயாளிகள் இல்லத்திற்கும் சென்றார். படுத்த படுக்கையாக செயலற்ற நிலையில் இருக்கும் 6 நோயாளிகளையும் அவர்களைக் கவனித்துக்கொள்ளும் உறவினர்களையும் சந்தித்து ஆறுதல் கூறினார் திருத்தந்தை. இரக்கத்தின் எடுத்துக்காட்டாக, எவ்வித முன்னறிவிப்புமின்றி இடம்பெற்ற இந்த இரு இல்ல சந்திப்புகள் குறித்து அங்கு வசிக்கும் முதியோரும், நோயாளிகளும், அவர்களின் உறவினர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக செய்தி நிறுவனங்கள் கருத்துத் தெரிவித்தன.

## இரக்கத்தின் ஆண்டில் மரண தண்டனைகள் இரத்து செய்யப்பட அழைப்பு

மரண தண்டனைகள் இரத்துசெய்யப்பட வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த பெப்ரவரி 21ஆம் திகதி ஞாயிறு மூவேளை செப உரையில் விடுத்திருக்கும் அழைப்பு, தெளிவாகவும், மரண தண்டனைகள் இரத்து செய்யப்பட வேண்டுமென்பதை மேலும் வலியுறுத்துவதாகவும் உள்ளது என்று ஜேர்மன் கர்தினால் றெயின்கார்ட் மார்க்ஸ் (Reinhard Marx) கூறினார்.

மரண தண்டனைகள் இரத்துசெய்யப்பட வேண்டும் என்பதற்கு எடுக்கப்பட்டுள்ள இம்முயற்சி, மனித வாழ்வைப் பாதுகாப்பதற்குப் பரந்த அளவில் இடம்பெற்றுவரும் நடவடிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது என்று அந்தக் கர்தினால் கூறினார்.

"மரண தண்டனை இல்லாத உலகம்" என்ற தலைப்பில், உரோம் சான் எஜிதியோ கத்தோலிக்க அமைப்பு, கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி தொடங்கிய அனைத்துலக கருத்தரங்கு குறித்து செனித் (Zenit) செய்தி நிறுவனத்திடம் பேசிய, மியூனிக் பேராயர் கர்தினால் மாக்ஸ் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

சான் எஜிதியோ அமைப்பின் இம்முயற்சியையும் பாராட்டிப் பேசிய கர்தினால் அவர்கள், வாழ்வு இன்றி நீதி கிடையாது என்றும், இந்த இரக்கத்தின் ஆண்டில் மரண தண்டனைகள் இரத்து செய்யப்பட்டால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்றும் கூறினார்.

கர்தினால் மார்க்ஸ் அவர்கள், திருப்பீடத் தலைமையகச் சீர்திருத்தத்தில் திருத்தந்தைக்கு ஆலோசனை வழங்கும் 9 கர்தினால்கள் குழுவின் தலைவராவார்.

## ஆன்மீக உடலியல் ரீதியிலான இறைவனின் இரக்கச் செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்

### *திருத்தந்தையின் தவக்காலச் செய்தி*

1ஆம் பக்கத் தொடர்ச்சி

அதனோடு இணைந்து "யூபிலியை நோக்கிய பாதையில் இறைவனின் இரக்கச் செயல்கள்" என்ற கருப்பொருளும் சிந்தனைக்காக வழங்கப்பட்டுள்ளது. உண்மையான ஏழைகளாக இருப்போர் தாம் செல்வந்தர்கள் என்று தம்மிலே நம்பிக்கை கொள்வர். இதற்குக் காரணம் அவர்கள் பாவத்திற்கு அடிமையாகி இருப்பதேயாகும். இதனால் தமது செல்வங்களையும், அதிகாரத்தையும் அநியாயமாக - இறைவனின் செயற்பாட்டுக்காக, அயலவர்களுக்காக - செயற்படுத்தாமல் விரயமாக்குவர். தமது உள்ளத்திலே பிடிவாத குணம் நிறைந்தவர்களாக இருப்பர். ஆனால் இவர்கள் மிகவும் வறியவர்களாகவே இருப்பர். எந்தளவிற்கு இவர்கள் செல்வந்தர்களாகவும், அதிகாரம் உள்ளவர்களாகவும் இருக்கின்றார்களோ அந்தளவுக்கு அவர்கள் உலகு பற்றிய பார்வையற்றவர்களாக, எல்லோரையும் ஏமாற்றுபவர்களாகக் காணப்படுவர்.

மீண்டும் திருத்தந்தை ஏழை இலாசரும் செல்வந்தனும் பற்றிய உவமையைக் குறிப்பிட்டார். இலாசர் இயேசுவைப் பிரதிபலிக்கின்றார். எனவே மனமாற்றம் அவசியமாகின்றது. இதனைக் கண்டுகொள்ளாமல் நாம் வாழ்கின்றோம். பார்வையற்ற தன்மை எம்மை ஆட்டிப்படைத்துள்ளது. இந்த மாயையினால் நாம் சமூக, அரசியல் ரீதியிலான செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

இவற்றை நாம் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இடம்பெறும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் காணலாம். இதனால் ஏழைகள் மட்டில் நாம் அக்கறை காட்டுவது இல்லை. கதவுகளை மூடிவிட்டு அவர்களைப்பற்றிய செய்திகளையே கேட்காமல் இருக்கின்றோம். எனவே இதிலிருந்து விடுபடவே இந்தத் தவக்காலம் எமக்குத் தரப்பட்டுள்ளது. எனவே இறைவார்த்தைக்குச் செவிமடுத்து இறைவனின் இரக்கச் செயல்களை உடனடியாக செயற்படுத்த முயற்சி எடுப்போம்.

உடல், ஆன்மீக ரீதியிலான செயற்பாடுகளை வேறுபடுத்தாமல் செயற்படுத்த முயற்சி எடுப்போம். சிலுவையில் அறையுண்ட இயேசுவின் சதையை துன்பவேளையில் தொடுவதன் மூலம் பாவிகள் அனைவரும் தாம் தேவையில் இருப்போர் ஏழைகள் என்ற நிலையை உணர்ந்துகொள்வார்கள். இயேசு வந்து உங்கள் உள்ளக்கதவைத் தட்டும்போது திறப்பதற்கு ஆயத்தமாக இருங்கள். மறுத்தீர்களோ நீங்கள் தீர்ப்புக்குள்ளாவீர்கள். இவ்வாண்டு மாசி மாதம் 10ம் திகதி புதன்கிழமை தவக்காலத்தை ஆரம்பிக்கின்றோம். அன்னை மரியாள் திருச்சபையின் மறைபரப்பாளராக இருக்கின்றார். காரணம் அவளே நற்செய்தியாளர், மறைபரப்பாளர், வானதூதரின் நல்ல செய்தியைக் கேட்ட அன்னை மரியாள் புகழ்ந்து பாடுகின்றாள். அதிலே இறைவாக்கினர் போன்று இறைவனின் கனிவுக் கண்கள், இரக்கக் கண்கள், தன்மேல் விழுந்ததை எடுத்துக்கூறி புகழ்ந்து பாடுகின்றாள். இன்றும் அந்தப் பணியை தூய ஆவியின் மூலம் செய்துவருகின்றார்.

அடுத்து அன்புக்கு எடுத்துக்காட்டான கதை ஒன்று. இங்கு இறைவன் காட்டிக் கொடுக்கப்பட்ட தந்தையாக, கணவனாகக் காணப்படுகின்றார். இஸ்ராயேல் மக்கள் கீழ்ப்படிவற்ற பிள்ளையாக. மணப்பெண்ணாகக் காணப்படுகின்றனர். இவர்களை காப்பாற்றவே இறைவனின் இரக்கம் இறைமகன் இயேசுவின் மனிதாவதாரமாக இடம்பெற்றது. இறைமகன் இயேசு மணமகனாக, அன்புக்காக எதையும் தியாகம் செய்பவராக காணப்படுகின்றார். இவர் ஏழைகள் மட்டில் பரிவு காட்டுகின்றார். இதனால் சிலுவையில் அறையப்பட்டார். இதன் மூலம் ஏழைகளின் அருகில் வாழ்ந்தார். இறுதியாக மரியன்னையின் பரிந்துரையை இந்தத் தவக்காலத்தில் வேண்டி இத்தவக்காலத்தை பிரயோசனமான முறையில் மனமாற்றத்தின் காலமாகப் பயன்படுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுக்கின்றார்.

தமிழில்: அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

## ஸிகா வைரஸ் தொற்று அபாயத்திலுள்ள பெண்கள் கருத்தடை செய்துகொள்வதற்கு திருத்தந்தை ஆதரவு


ஸிகா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் அபாயத்திலுள்ள பெண்களுக்கு கருத்தடை செய்துகொள்வதற்கு அனுமதி அளிக்கப்படுவதற்கு ஆதரவளிக்கும் கருத்தை பாப்பரசர் முன்வைத்துள்ளார்.

கருத்தடை செய்துகொள்வது குற்றச்செயல் ஒன்றாகத் தொடர்ந்து கருதப்படுகின்றபோதும், கர்ப்பத்தை தவிர்ப்பது என்பது முற்றுமுழுதாக சாத்தானின் செயல் ஒன்றல்ல என அவர் கூறினார்.

மெக்ஸிக்கோவிற்கான தனது விஜயத்தை பூர்த்திசெய்துகொண்டு உரோமிற்கு விமானத்தில் திரும்புகையிலேயே பாப்பரசர் இவ்வாறு கூறினார்.

இலத்தீன் அமெரிக்காவெங்கும் பரவிவரும் ஸிகா வைரஸ் தாக்கத்தால் குழந்தைகள் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டு பிறப்பது குறித்து பாப்பரசரிடம் வினவப்பட்டபோதே அவர் மேற்படி கருத்தை முன்வைத்துள்ளார். உரோமன் கத்தோலிக்க மதமானது தற்போது கருத்தடை முறைகளைப் பிரயோகிப்பதற்கு தடை விதிக்கிறது. கருக்கலைப்புக்குள்ளாக வேண்டிய கர்ப்பத்தைக் கலைப்பதை சாத்தானின் செயலாக கருதி குழப்பமடையக் கூடாது என பாப்பரசர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 50

## வீடுபோய்ச் சேர்வதிலும் பார்க்க வீடுபேறடையச் செய்யும் பேருந்துப் பயணங்கள்!

### *அன்றொரு விடியற்காலைப் பொழுதில்!*

2011ஆம் ஆண்டு ஆடித்திங்களின் ஒரு நாளில் திருகோணமலையில் இருந்து வவுனியாவுக்கு அதிகாலை 04 மணியளவில் புறப்பட்ட தனியார் பேருந்தில் நானும் ஒரு பயணியாக ஏறிக்கொண்டேன். அப்பேருந்தில் 10, 15 பேர் வரை இருந்தார்கள். நகரிலிருந்து புறப்பட்ட ஒரிரு நிமிடங்களில் இன்னுமொரு தனியார் பேருந்து நாங்கள் பயணித்த பேருந்தைப் பின்தொடர்ந்து வந்து எங்கள் பேருந்தை முந்துவதுபோல பாசாங்கு செய்து எங்கள் பேருந்தை முட்டுவதும் உரசுவதும் தள்ளுவதுமாகச் சென்றுகொண்டிருந்தது. அவ்விடியற்காலைப் பொழுதில் பயங்கரத்தின் மத்தியில் எங்கள் பயணம் சற்று நேரம் தொடர்ந்தது.

எங்கள் பேருந்தைச் செலுத்தியவர் இடையிடையே சடுதியான பிறேக் அடிப்பதும் அதனால் 02, 03 பயணிகளின் மூக்கிலும் முகத்திலும் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் ஓடுவதுமாக இருந்தது. யாரை யார் பார்ப்பது? அடுத்து என்ன செய்வது? என்ற அங்கலாய்ப்பு அனைத்துப் பயணிகளிலும் தெரிந்தது. நான், எதற்கும் ஆயத்த நிலையில் கெட்டியாக முன்னிருக்கையில் இறுக்கிப் பிடித்துக்கொண்டேன். அதனால் காயங்கள் இன்றி தப்பித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

இதற்கிடையில் 02 பேருந்து சாரதிகளுக்கும் நடத்துனர்களுக்கும் வாய்த்தர்க்கம் முற்றி தாறுமாறான மும்மொழி வார்த்தைப் பிரயோகங்கள் அவ்விடியற்காலைப் பொழுதில் எங்கள் காதுகளுக்கு தேனாமிர்தம் ஆயின! இந்நேரத்தில் எதிர்பாராதவாறு மற்றய பேருந்து மறைந்துபோனது. இதனோடு இத்துன்பம் தொலைந்தது என விட்ட பெருமூச்சு தொடரவில்லை!

### *தொடர்ந்த அத்துன்பம்!*

"பட்ட காலிலே படும்" என்பார்களே! அதுபோல எங்கள் துயரப்படலம் தொடர்ந்தது. எங்கள் பேருந்தின் சாரதி உருவேறியவன்போல பேருந்தை செலுத்தத் தொடங்கினான். துப்பறியும் ஆங்கிலப் படங்களில் காட்டு அதர்களுக்குள் வாகனங்கள் மிக வேகமாக செலுத்தப்படுவதுபோல அப்போது திருத்தப்படாமல் உடைந்துபோய் கிடந்த ஓணானின் முதுகுபோன்ற அப்போதைய திருகோணமலை கொறவபொத்தான வீதியில் அதிவேகமாகச் செலுத்தினான் அந்தப் பாவிமனுசன்!

இப்போது, இப்பேருந்து போகவேண்டிய இடம் போய்ச் சேருமா? என்ற சந்தேகம் எழுந்தது தவிர்க்க முடியாது போனது! அப்படிச் சேரவேண்டிய இடம் சேர்ந்தாலும் அதில் பயணிக்கின்ற பயணிகளாகிய நாங்கள், "எங்கள் சொந்த உருவங்களோடு போய்ச்சேர மாட்டோம்" என்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

இதற்கிடையில் சாரதியிடமும் நடத்துனரிடமும் உரையாட முற்பட்ட எங்கள் முயற்சியும் தோற்றுப்போக பேருந்திலிருந்து இறங்கிவிடலாம் எனத் தீர்மானித்தேன். இருப்பினும் சரியாக விடியாத காலைப்பொழுதில் காட்டுப்பகுதியில் எங்கே இறங்குவது என்று தெரியாத நிலையில் கொறவப்பொத்தான நகரை பேருந்து அண்மித்ததும் பேருந்திலிருந்து இறங்கிக்கொள்ள ஆயத்தமானேன்.

### *வீடுசெல்வோமா அல்லது வீடுபேறு அடைவோமா?*

பேருந்திலிருந்து இறங்குகின்றபோது, "நீங்கள் எல்லாரும் சுகமாக வீடுபோய் சேரவேண்டும் (அவர்கள் வீடுபேறு அடைதலை நினைத்தார்களோ என்னவோ! உண்மையில், நான் அவ்வாறு கருதவில்லை)! ஆனா, நான் இப்பேருந்தில் தொடர்ந்து வருவதற்கு விரும்பவில்லை!" எனக் கூறிவிட்டு பேருந்தில் இருந்து இறங்கினேன். எனது இச்செயலை சற்றும் எதிர்பாராத சாரதியும் நடத்துனரும் தங்கள் தவறினை உணர்ந்துகொண்டதுபோல என்னைச் சமரசம் செய்து பேருந்தில் தொடர்ந்து பயணிக்க முயற்சித்தனர். நான் சற்றும் அதற்கு இடம்கொடுக்காமல் என் தீர்மானத்தில் உறுதியாயிருந்தேன்.

அப்பேருந்து, தொடர்ந்து, வவுனியா நோக்கிப் புறப்பட்டு என் கண்களில் இருந்து மறைகின்ற பொழுதில் வழமையாக அப்பேருந்தில் பயணம்செய்யும் ஓர் அன்பர் அப்போதுதான் அப்பேருந்தைப் பிடிக்க அவசர அவசரமாக ஓடி வந்தார். இருப்பினும் அது போய்விட்டதை அறிந்துகொண்ட அவர் அங்கு



பேருந்துக்காகக் காத்துநின்ற என்னுடன் உரையாட ஆரம்பித்தார். "நீங்கள், எங்க போறீங்க?" எனக்கேட்க நான், "வவுனியாவுக்கு" என்றேன். அவர், "வவுனியாவுக்குத்தானே அந்த பஸ் போகிது!" என்றார். நான் அவரிடம், "அதில்தான் வந்து, இறங்கி நிற்கிறேன்!" என்றதும் அவர், "விளங்குது சேர்! என்ன செய்யிறது! இந்த பஸ்சில போக யாருக்கும் விருப்பம் இல்ல. ஆனா, வேற வழியில்லாம இதில போகவேண்டி இருக்கு! உயிரைக் கையில பிடிச்சிக்கொண்டு ஒவ்வொரு நாளும் போய்வருகிறோம்!" எனக் கவலையோடு பகிர்ந்துகொண்டார். இவ்வாறான பேருந்துகளில் ஒருநாள் பயணம் செய்வதே இவ்வளவு துன்பமாக இருக்குமென்றால் ஒவ்வொருநாளும் தொழில் காரணமாகப் பயணம்செய்யும் மேற்சொன்னவரைப் போன்றவர்கள் எவ்வாறான துன்பத்தை ஒவ்வொரு நாளும் அனுபவிப்பார்கள்!

### *நேரத்தோடு செல்ல எண்ணி நேரமாகிச் சென்றது !*

2015 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் விடுமுறையில் கனடா நாட்டில் இருந்து வந்த நண்பர்கள் என் பெற்றோரைப் பார்க்கவேண்டும் என்று என் வீட்டுக்கு வரயிருந்தார்கள். அவர்களை நேரடியாக வீட்டிற்கு மதியம் 12 மணிக்கு வரும்படி கூறிவிட்டு நான் மன்னார் வருவதற்காக பூநகரியில் பேருந்திற்காகக் காத்திருந்தேன். தனியார் பேருந்து ஒன்று வந்தது. ஒருசில கசப்பான அனுபவங்களின் நிமித்தம் கொஞ்ச நாட்களாக தனியார் பேருந்தில் ஏறுவதில்லை என்றிருந்தேன்! ஏறக்குறைய அரை மணித்தியாலயத்திற்கு, முக்கால் மணித்தியாலயத்திற்கு ஒரு பேருந்தே அவ்வீதியில் பயணிப்பதால் அத்தனியார் பேருந்தில் ஏறிக்கொள்ள அரைமனதோடு ஆயத்தமானேன். பூநகரியில் இருந்து ஆமைவேகத்தில் பயணித்து ஏறக்குறைய ஒன்றரை மணித்தியாலயத்தில் முழங்காவில்லை அடைந்தது அத்தனியார் பேருந்து!

இவ்வாறு சென்றுகொண்டிருந்த அப்பேருந்து திடீரென அதியுச்ச வேகத்தில் பறக்க ஆரம்பித்தது. ஊர்ந்துகொண்டு சென்ற பேருந்து பறக்க ஆரம்பிக்கிறதே என எண்ணிவிட்டு திரும்பிப் பின்வழியைப் பார்த்தபோது இ.போ.ச. பேருந்து கடுகதியில் வந்துகொண்டிருந்தது. இப்போது இரண்டு பேருந்துகளுக்கும் இடையில் வழமைபோல சவாரி ஆரம்பமானது. இரு பேருந்துகளும் ஒன்றை ஒன்று மாறிமாறி முந்தியடித்துக்கொண்டு சென்றுகொண்டிருந்தது. இத்தனையையும் பொறுமையாக ஏற்றுக்கொண்டு எடுத்துச்சென்ற சிறிய பயணப் பையினை ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு இரண்டு கைகளாலும் வழமைபோல இருக்கையினைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். பயணிகள் அதுவரை தங்கள் வாயால் சொல்லாத கடவுள்களை எல்லாம் பெயர்சொல்லி அழைத்து வேண்டுதல் செய்வதை அன்றைய தினம் என்னால் உணர்ந்துகொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

இந்தச் சவாரியில் இ.போ.ச. பேருந்து வெற்றிபெற்று சென்றுவிட்டதை உணர்ந்துகொண்ட சாரதியும் நடத்துனரும் இலுப்பக்கடவையில் முற்பகல் 11.50க்கு மதிய உணவுக்காக ஒரு கடையில் நிறுத்திக்கொண்டார்கள். ஏனெனில் இ.போ.ச. பேருந்தை துரத்திப் பிடிக்கமுடியாததுடன், இன்னும் ஒரு அரை மணித்தியாலயம் தாமதமாகச் சென்றால் வழியில் 200, 300 ரூபாவை சேர்த்துக்கொள்ளலாம் என்பதால் இவ்வாறான திட்டத்தினை வகுத்திருந்தார்கள் போலும்! "ஏனடா, இந்த பஸ்சில் ஏறினேன்!" என்ற கவலை ஒருபுறம். "ஏனடா, இவர்கள் இப்படி மிகக்கேவலமாக நடந்துகொள்கிறார்கள்?" என்ற கோபம் மறுபுறம். காரணம் 1. இ.போ.ச. பேருந்து ஆகக்குறைந்தது அரை மணித்தியாலம் தாமதமாக பயணத்தை ஆரம்பித்து நான் பயணித்த தனியார் பேருந்தை முந்திச் செல்கிறது. காரணம் 2. சுமார் அரைமணித்தியால ஓட்டத்தில் போய்ச்சேர வேண்டிய தூரத்தினை (பூநகரியில் இருந்து முழங்காவில் வரை) ஒன்றரை மணித்தியாலயங்கள் எடுத்துச் செலுத்தியது! காரணம் 3. அப்பேருந்தை மதிய உணவுக்கு என்ற போர்வையில் முற்பகல் 11.50க்கு நிறுத்தியது. இதில் பயணிகளில் யாருக்கும் எவ்வித உடன்பாடும் இருக்கவில்லை.

இதனையும் பொறுத்துக்கொண்டு அப்பேருந்தில் இருந்து மன்னார் பேருந்து நிலையத்தில் இறங்கிய நான் "தனியார் பஸ்சில் இனிமேல் பயணிப்பதில்லை என்ற என் தீர்மானத்திற்கு வலுச்சேர்த்ததற்கு நன்றிகள் பல! அடிக்கடி பஸ்சில் பயணம் செய்யும் என் போன்றோரின் வருவாய் இனிமேல் உங்களைப் போன்றோருக்கு வந்துசேராது! "எனக்கூறிவிட்டுச் சென்றுவிட்டேன். 12 மணிக்காவது வீட்டுக்கு வந்துசேர்ந்துவிடலாம் என திட்டமிட்டுப் புறப்பட்ட நான் பிற்பகல் 02 மணிக்கே அப்புண்ணியவான்களால் வீட்டை வந்தடைந்தேன்.

### *தனியார் பேருந்துகளின் தான்தோன்றித்தனமான போக்கு!*

"இனிமேல் தூரப் பிரயாணங்களுக்குத் தனியார் பேருந்தில் ஏறுவதில்லை" என்ற முடிவுக்கு வந்த நான் போனமாதம் மாங்குளத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக 03 தனியார் பஸ்களை கடந்துசெல்ல விட்டுவிட்டு இ.போ.ச. பேருந்திற்காகக் காத்துநின்றேன். இதனை அவதானித்துக்கொண்டு நின்ற என்னோடு



பணிசெய்யும் பணியாளன் ஒருவர், "வந்த பஸ்களை எல்லாம் விட்டுவிட்டு கால் நடையாகத்தான் யாழ்ப்பாணம் போகப் போகிறார்போல!" என்று கூறியதைக் கேட்டதும், "உண்மைதான், மூன்று பஸ்களை விட்டுவிட்டு நிற்கிறேன்! மூன்றாவதிலாவது ஏறியிருக்கலாம்!" என்று சற்று மனதிற்குள் கவலைபட்டுக் கொண்டேன். ஏறக்குறைய 35 நிமிடங்கள் காத்து நின்றதின் பின்னர் இ.போ.ச. பேருந்து வந்தது. ஆச்சரியம் என்னவென்றால் என்னைக் கடந்து சென்ற மூன்று தனியார் பேருந்துகளில் ஒன்றை மிருசுவில்லிலும், இரண்டாவதை சாவகச்சேரியிலும், மூன்றாவதை யாழ். கச்சேரிச் சந்தியிலும் கடந்துகொண்டு நான் பயணித்த இ.போ.ச. பேருந்து சென்றது. இத்தனைக்கும் அவ் இ.போ.ச. பேருந்து நியாயமான வேகத்தில் சென்றது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறாயின் இத்தனியார் பேருந்துகளின் சாரதிகளும் நடத்துனர்களும் தாங்கள் நினைத்த வேகத்தில் பேருந்தைச் செலுத்துவதும், தாங்கள் நினைத்த இடங்களில் நிறுத்திவைத்துக் காத்திருப்பதும் என இவர்களின் "திருவிளையாடல்கள்" இடம்பெறுவதால் இத்தகைய துன்பப் படலங்கள் தொடர்கின்றன என்பது தெளிவாகிறது.

### *மன்னாரில் இருந்து மாந்தைக்கு 40 நிமிடங்கள்!*

மேற்சொன்ன அனுபவத்தைப் போன்ற இன்னுமோர் சம்பவம் கடந்த ஆண்டில் ஏற்பட்டது. மன்னார் நகரில் இருந்து மாந்தைச் சந்திவரையான தூரம் ஏறக்குறைய 07 கிலோமீற்றர் ஆகும். இத்தூரத்தினை ஒரு தனியார் பேருந்து 30 நிமிடங்கள் எடுத்துப் பயணித்தது மட்டுமல்லாமல் ஏறக்குறைய 07 நிமிடங்கள் மாந்தைச் சந்தியில் சும்மா தரித்துநின்றது. தரித்து நின்றதோடு அல்லாமல் அதன் சாரதி அலைபேசியில் அடுத்த பேருந்தின் வருகை - அதனோடு சம்பந்தப்பட்ட விடயங்களை பேசிக்கொண்டிருந்தார்.

"இதற்குமேலும் பொறுமை காக்கக்கூடாது!" என எண்ணிக்கொண்டு, இருக்கையில் இருந்து எழுந்துசென்று, வலு நிதானமாக, "எதற்காக இப்போது பஸ் நிற்கிறது?, மன்னார் நகரில் இருந்து நான் கால்நடையாக நடந்து வந்திருந்தாலும் உங்கள் பஸ்சை கடந்து சென்றிருப்பேன்!" என்ற என் சூடான வார்த்தைகளை சாரதி சற்றும் எதிர்பார்க்கவில்லை. உடனே, சட்டென்று பேருந்தை செலுத்த ஆரம்பித்தவர் மிக வேகமாக "பேயோட்டம்" ஓட்டத் தொடங்கினார். வேறென்ன? மீண்டும் இருக்கையை இறுகப் பிடித்துக்கொண்டேன்.

### *தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும்*

மேற்சொன்ன அனுபவங்களை கூறுவதன் நோக்கம், "தனியார் பேருந்துகளில் மக்கள் பயணம் செய்யவேண்டாம்" என்று சொல்வதற்கல்ல! தனியார் பேருந்து சாரதிகளும், நடத்துனர்களும், உரிமையாளர்களும் போக்குவரத்து ஒழுங்கின் மட்டில் தாங்கள் இழைக்கின்ற தவறுகளை உணர்ந்துகொண்டு, பயணிகளின் பாதுகாப்பான – மகிழ்வான பயணத்திற்கு துணைசெய்யாமல் இனிமேலும் தான்தோன்றித்தனமாக செயற்படுவார்களேயானால் வெறுமையான – காலியான பேருந்துகளோடு, கிராமப்புறங்களில் சொல்வதுபோல சுடுதண்ணி குடிச்ச நாய்கள்போல, ஒன்றுக்கும் ஒருதருக்கும் பிரயோசனம் இல்லாமல் ஓடித்திரிவது தவிர்க்க முடியாததாகிவிடும்! இச்செய்தியினை வாசகர்கள், அறிந்த தனியார் பேருந்து சாரதிகள், நடத்துனர்கள், உரிமையாளர்களுக்கு அறியப்படுத்துவது அவர்கள் தங்கள் தொழிலை இழந்துபோகாமல் இருக்க பெரும் உதவியாக இருக்கும்.

### *உடனடியாகச் செயற்படவேண்டும்!*

இப்பொழுதெல்லாம் பேருந்தில் பயணிக்கும்போது இ.போ.ச. மற்றும் தனியார் (தனியார் பேருந்துகளில் பயணம் செய்யவேண்டிய நிலை உருவானால்) பேருந்துகளின் எந்தச் சாரதியாவது அளவுக்குமீறி மிகவும் மோட்டுத்தனமாக பேருந்தைச் செலுத்தினால் உடனடியாகவே நான் செயலில் இறங்கிவிடுவது உண்டு. காரணம் அடிக்கடி நடந்தேறும் படுமோசமான வீதி விபத்துக்கள் வாகனங்களின் அதீத வேகத்தால் ஏற்படுபவை என்பதை புள்ளிவிபரங்களும் பொலிஸ் நிலையங்களும் தெரிவிக்கின்றன.

எனவே, பேருந்து சாரதிகள் பாதுகாப்பான பயணத்தின் மட்டில் எவ்வித அக்கறையும் காட்டாமல் வாகனங்களை மோட்டுத்தனமாகச் செலுத்துகின்றபோது அப்பேருந்துகளில் பயணிக்கின்ற பயணிகள் உடனடியாகவே செயலில் இறங்கிவிடவேண்டும். அல்லது முட்டிமோதி விபத்துக்கு உள்ளாகி நான்கு ஐந்து பேரைப் பலியெடுத்த பின்னர், "உவன் கொண்டுபோய் முட்டுவான் எண்டு, எங்களுக்கு ஏற்கனவே தெரியும்!" என்ற "சுடலை ஞானத்தில்" எந்தப் பலனும் கிடையாது.

மேற்சொல்லப்பட்ட அசாதாரண சூழலில் எவ்வாறு செயற்படலாம் என்பதற்கு சில சாத்தியக்கூறுகளைப் பற்றிச் சிந்தித்ததன் விளைவு: 1.இயலுமானால் நான்கு ஐந்து பேர் சேர்ந்து தங்கள் அதிர்ப்தியை பக்குவமாக சாரதிக்கும், நடத்துனருக்கும் தெரிவிக்கவேண்டும். 2. செவிமடுக்கத் தவறும் பட்சத்தில் அடுத்தகட்ட நடவடிக்கையாக அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குத் தெரியப்படுத்தலாம். உதாரணமாக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்யும்போது (இப்பாதையில்தான் அடிக்கடி சவாரி நடைபெறுவதுண்டு!)

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவக்காலச் சிறப்புப் பொழிவு

# இரு மகன்களின் மனமாற்றம்

அருள்பணி. ஏ. ஜான் பாப்ரிஸ்ட்,
முப்பணி நிலையம், திண்டிவனம்.

### முன்னுரை

இறையிரக்கத்தின் யூபிலி ஆண்டிலே இருக்கிறோம். "இந்த யூபிலி ஆண்டில் வரும் தவக்காலம் கடவுளின் இரக்கத்தை அனுபவிக்கவும் கொண்டாடவும் உதவும் தனிச்சிறப்பு நேரமாக அர்த்தமுள்ள முறையில் வழங்கப்பட வேண்டும். (இறையிரக்கத்தின் திருமுகம் 17) எனத் திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுக்கின்றார். எனவே, இறையிரக்கத்தையும் மன்னிப்பையும் 'கொண்டாடும்' இறை இரக்கத்திற்கென அர்ப்பணிக்கப்பட்ட மூன்று உவமைகளான 'காணாமற் போன ஆடு, தொலைந்த நாணயம், இரு மகன்களின் தந்தை' (காண். லூக் 15:1-32) ஆகியவற்றுள், இரு மகன்களின் தந்தை உவமையை (காண். லூக் 15-11-32) 'மனமாற்றம்' எனும் கண்ணோட்டத்தில் விவரிக்க முயல்கின்றது இக்கட்டுரை.

### 1. இளைய மகனின் மனமாற்றம்

இளைய மகனின் மனமாற்றம், அவன் தந்தையைவிட்டு தொலைவில் இருந்தபோது, பன்றி மேய்க்க வயல் வெளியில் இருந்தபோது, உணவுக்கும் வழியின்றி இருந்தபோது ஏற்படுகின்றது. அவன், தான் பாவம் செய்துவிட்டதை உணருகின்றான் (வச.18) அதன் விளைவாக, மகன் என்ற தகுதி தனக்கு இல்லாமல் போய்விட்டது என்பதையும் ஏற்றுக்கொள்கின்றான் (வச.19அ) எனவே, இங்கு அவன் உரிமை கொண்டாட விருப்பமில்லை, தந்தையின் இரக்கத்தை கெஞ்சி மன்றாடுகின்றான். அவருடைய கூலியாள்களுள் ஒருவனாக ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடுகின்றான் (வச.19ஆ).

இயேசுவின் காலத்தில் இருவகையான கூலியாட்கள் இருந்தனர். முதலாவது வகையினர் ஊரில் வேற்று இடத்தில் தங்கி காலையில் தலைவனது வீட்டிற்கு வந்து வேலை செய்துவிட்டு, மாலையில் தங்கள் வீடுகளுக்கு திரும்புபவர்கள் (காண். மத்20:1). அவர்களுக்கு நாள் சம்பளமே கொடுக்கப்படும். இரண்டாம் வகையினர், தலைவனது இல்லத்திலேயே தங்கி வேலை செய்பவர்கள். அவர்களுக்கு நாள் கூலிகளைவிட இன்னும் அதிக உரிமைகள் இருந்தன (காண். மத் 24:45-51).


ஊதாரி மைந்தன் முதலாம் வகை வேலையாளாக இருக்கவே விரும்பினான். ஏனெனில் தந்தையின் இல்லத்தில் வாழ்ந்து, அவரது சொத்தை அனுபவிக்க தனக்கு எத்தகைய உரிமையும் இல்லை. அவரது முகத்தைப் பார்க்கவும் தனக்கு தகுதியில்லை என ஏற்றுக்கொள்கின்றான். தனக்கு உள்ள 'தகுதியெல்லாம்' அன்றன்றைக்கு தான் செய்யும் வேலைக்கான 'சம்பளமே' என்று எண்ணித்தான் தந்தையிடம் வருகின்றான். மகனின் இந்தத் தீர்மானத்திலும் செயல்பாட்டிலும் அவன் தனது பாவத்தை உணர்ந்துவிட்டதையும், மன்னிப்புக் கேட்க தயாராக இருப்பதையும், மகனுக்குக் கீழான வேலையாளாக இருப்பதைத் தண்டனையாக ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருப்பதையும் வெளிப்படுத்துகின்றது. ஒப்புரவு அருளடையாளத்தை அணுகும் ஒவ்வொரு நம்பிக்கையாளரின் மனநிலையும் இப்படித்தான் இருக்க வேண்டும்.

இத்தகைய மனநிலையோடு திரும்பி வந்த மகனை தந்தை எப்படி நடத்தினார் என்பதை 20 முதல் 24 வரையிலான வசனங்கள் விவரிக்கின்றன: "அவர் தந்தை அவரைக்கண்டு, ஓடிப்போய் அவரைக் (மகனை) கட்டித் தழுவி முத்தமிட்டார்" (வச. 20அ) எனும் ஒரு செயலுக்கு தந்தை 'கண்டு', 'பரிவுகொண்டு' 'ஓடி' 'கட்டித்தழுவி' 'முத்தமிடுதல்' எனும் அய்ந்து செயல்களை ஆற்றுகின்றார். அடுத்து, மகன் தன் தந்தையிடம் சொல்ல வேண்டும் என்று தயாரித்த வசனங்களைச் (வச 18-19) சொல்லத் தொடங்குகின்றான் (வச. 21). ஆனால் தந்தை அவனை அதை முழுவதுமாகச் சொல்ல விடவில்லை. அதை இடையிலேயே நிறுத்தி விடுகின்றார். அவன் சொல்லி முடித்தபிறகு மன்னிக்க வேண்டும் என்ற பொறுமையும் இல்லை. அவனுடைய நீண்ட பாவ அறிக்கை அவருக்கு தேவையில்லை. அவனை அவர் உடனடியாக மன்னித்து விடுகின்றார்.

மூன்றாவதாக, திரும்பி வந்த மகன் எதிர்பார்த்ததெல்லாம் நாள் கூலியாக தான் நியமிக்கப்பட்டாலே போதும் என்பதுதான். ஆனால் தந்தை அவனை மகனின் நிலைக்கு உயர்த்துகின்றார். அவருக்கு அவன் மகனாயிருந்தான். சொத்தை பிரித்துச் சென்றுவிட்டான். எனவே சட்டப்படி அவன் மகனல்ல என்ற விவாதமும் எண்ணமும் எழவில்லை. அவரைப் பொறுத்தமட்டில் அவர் தந்தை, தன் மகனுக்கு எப்போதுமே தந்தையாக இருப்பார். அவர் மகன் எப்போதும் அவருக்கு மகனாகவே இருப்பான். இவ்வாறு அவர் தன் தந்தை நிலைக்கும், தன் மகனுக்கும் விசுவாசமாய் விளங்கினார். எனவே மனமாற்றம் ஒரு கொண்டாட்டமாகின்றது. ஒப்புரவு அருளடையாளம் வழங்கும் அருள்பணியாளர்கள் இத்தகைய இறைத்தந்தையின் பிரதி பிம்பங்களாக இருக்க வேண்டும் என்பது நம் திருத்தந்தையின் எதிர்பார்ப்பு (காண். இறையிரக்கத்தின் திருமுகம், எண் 17).

### 2. மூத்த மகனின் மனமாற்றம்?

இளைய மகனின் மனமாற்றம், தந்தை அவனை ஏற்றுக்கொள்ளல், இவற்றுடன் உவமை முடிந்துவிடவில்லை. அது தொடர்கின்றது. இயேசு இப்போது கவனத்தை மூத்த மகனின்மீது திருப்புகின்றார். இளைய மகனின் மனமாற்றத்தை முடித்துவைத்த மகிழ்ச்சியான கொண்டாட்டம் மூத்த மகனைப்பற்றிய கதைக்குத் தொடக்கப் புள்ளியாய் அமைகின்றது.



வயலிலிருந்து வந்த மகன், ஆடல் பாடலின் காரணத்தை அறிந்தபோது சினம்கொள்கின்றான். தந்தை இளைய மகனை மகனாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, செய்தி சொன்ன ஊழியனும் அதை ஏற்றுக்கொண்டார். அவருடைய பார்வையிலும் இளைய மகனை 'உன் தம்பி' என்றும் தந்தையை 'உன் தந்தை' (வச. 27) என்றே அழைக்கின்றார். ஆனால் மூத்த மகன் தன்னுடைய வாதம் எதிலும் (வச.29-30) 'என் தம்பி' என்றோ 'தந்தையே' என்றோ கூறாதது அவனது மனநிலையைக் காட்டுகின்றது. மாறாக, இளைய மகனை 'உன் மகன்' (வச. 30) என்று கூறுவது அவனுக்கு உள்ள வெறுப்பைக் காட்டுகின்றது.

உவமையின் தந்தை இளைய மகன் திரும்ப வந்தபோது ஓடிச் சென்றதுபோலவே, இப்போது மூத்த மகனிடமும் ஓடிச்செல்கின்றார் (வச. 28). அவனை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்கிறார் (வச. 28). திருத்தந்தை இதைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'அவனுடைய நிலைப்பாடு கடுமையானது, அநீதியானது, பொருளற்றது' என்பதை விளக்குவதற்காக சென்றதாகக் கூறுகின்றார் (காண். இறையிரக்கத் திருமுகம் 17).

மூத்த மகனின் வாதமெல்லாம் நீதியின்படி அமைந்துள்ளது. அவனது எண்ணப்படி அவன் நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் உள்ளவனாக இருந்த தனக்கு இத்தகைய கொண்டாட்டம் ஏதுமில்லை. தவறுசெய்து சொத்தை அழித்தவனுக்குக் கொண்டாட்டமா? கீழ்ப்படிதலுக்கு கைம்மாறு இல்லை, கீழ்ப்படியாதவன் எல்லாவற்றையும் அனுபவிப்பதா? தந்தை தன்னுடைய நிலைப்பாட்டை விளக்குகின்றார். அவர் நீதியை மறுக்கவில்லை: 'நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய்: என்னுடையதெல்லாம் உன்னுடையதே' (வச. 31). உண்மையில் அதிகம் அனுபவித்தவன் மூத்த மகன்தான். ஏனெனில் தந்தையோடு இருப்பதுதான் பேரானந்தம். அவரின் அனைத்துக்கும் உரிமை உடைய மகன். இளைய மகனோ 'தந்தையின் இருத்தலை' இழந்திருந்தான், மகன் எனும் உரிமையை இழந்திருந்தான், அவனுக்குத்தான் அதிகம் இழப்பு, மூத்த மகனுக்கு அல்ல என்பது தந்தையின் முதல் வாதம்.

இரண்டாவதாக, மேலே குறிப்பிட்டதுபோல, 'தந்தை எப்போதும் தந்தையாகவே இருக்கின்றார். 'மூத்த மகனுக்கும் தந்தையாக இருக்கிறார். எனவே அவனை 'மகனே' (வச. 31) என்று அழைக்கின்றார். இதே ஒரு நிலைப்பாட்டை மூத்த மகனையும் எடுக்கச் சொல்கின்றார். அவன் இளைய மகனுக்கு 'அண்ணன்', இளையவன் அவனுக்கு 'தம்பி' என்பதை நினைவுபடுத்துகின்றார். தான் தந்தையாக நடந்துகொண்டது போல, அவன் தம்பிக்கு அண்ணனாக இருக்க அழைக்கின்றார். இவ்வாறு 'அப்பா - அண்ணன் - தம்பி' என்னும் உறவு நிலைக்குள் வீட்டிற்குள் - தந்தை அவனை அழைக்கின்றார். இயேசு இந்த உவமையை மூத்த மகனின் வாதத்திற்கு (வச29-30) தந்தையின் பிரதிவாதத்தோடு (வச 31-32) முடித்துக்கொள்கின்றார். தந்தை கெஞ்சிக் கேட்டுக்கொண்டதற்கு மூத்த மகனின் பதில் என்ன? அவன் வீட்டிற்குள் வந்தானா? தந்தையையும், தம்பியையும் ஏற்றுக்கொண்டானா? என்பதெல்லாம் இன்றுவரை விடை கூறப்படாத வினாக்களாகத் தொக்கி நிற்கின்றன. எனவே உவமை முடியும்போது இளைய மகன் மனம்மாறியது உறுதியாக்கப்பட்டுவிட்டது, மூத்த மகனின் மனமாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

### இறுதியாக

இறையிரக்கத்திற்கே அர்ப்பணிக்கப்பட்ட இந்த யூபிலி ஆண்டில் பாவ நிலையில் உள்ளோரின் உண்மையான மனமாற்றம் மிக அவசியம். அவர்கள் இறையிரக்கத்தைக் கண்டடைய வேண்டும். அதோடு தங்களை 'கீழ்ப்படிதலுள்ளவர்கள்,' 'நீதியின்படி நடப்பவர்கள்' என்று எண்ணிக்கொண்டு அடுத்தவரைத் தீர்ப்பிட்டு முணுமுணுப்பவர் (காண். லூக் 15:2) களின் மனமாற்றமும் மிக அவசியம் என்பதையும் உணர வேண்டும். இவை இரண்டுக்கும் மேலாக இறைத் தந்தையிடமிருந்து ஊற்றெடுக்கும் இறையிரக்கம் எனும் பேராற்றிலிருந்து எத்தனை பேர் முகந்துகொண்டாலும், இந்த ஆறு எப்போதுமே வற்றாது (காண், இறையிரக்கத்தின் திருமுகம் 25) என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். "ஏனெனில் என்றும் உள்ளது அவரது பேரன்பு" (திபா. 136).

தவக்காலத் தியானம்

# என்னோடு ஒரு மணி நேரம்

- பீ. கிறிஸ்பி குரூஸ், பேசாலை -

"அதன் பின்பு அவர் (இயேசு) சீடர்களிடம் வந்து, அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு பேதுருவிடம், 'ஒரு மணி நேரம்கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?' என்று கேட்டார் (மத் 26:40).

மீண்டுமாக ஒரு தவக்காலம் வழமைபோல் வந்துவிட்டது. எம்மில் எத்தனை பேர் இந்தத் தவக்காலத்தை அன்போடு வரவேற்கிறோம். அல்லது நெற்றியில் பூசிய திருநீற்றை அழிய விடாது பாதுகாக்கின்றோம். அன்போடு வரவேற்கும்போது நான் மனம்மாறி மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொள்ளுகிறேன் என்றாகும். திருநீற்றை அழியவிடாது காப்போமெனில் 40 நாட்களுக்கு மட்டுமே திருநீறு நெற்றியில் இருக்கும், அதன்பிறகு அழிந்துவிடும். கடவுள் மனிதனைக் கொத்தி எருப்போடும் காலம்தான் தவக்காலம். நான் கனி கொடுப்பதையே கடவுள் எதிர்பார்க்கிறார். கனி கொடுத்தால் சரி, இல்லையேல் அக்கினிக் கடலில் எறியப்படுவோம் (மத் 4:10). "ஏற்கனவே மரங்களின் வேரருகே கோடரி வைத்தாயிற்று. நற்கனி தராத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு தீயில் போடப்படும்". இதை உணர்ந்தவர்களாக இந்தத் தவக்காலத்தை எமதாக்கி எமது பாவங்களை இயேசுவின் சிலுவையில் அறைந்துவிட்டு பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுவோம். "எவரது குற்றம் மன்னிக்கப்பட்டதோ, எவரது பாவம் மறைக்கப்பட்டதோ அவர் பேறுபெற்றோர்" (தி.பா32:1).

இரத்தம் சிந்துதல் இன்றிப் பாவ மன்னிப்பு இல்லை. இயேசுக் கிறிஸ்துவின் இரத்தம் மன்னிக்க முடியாத எந்தப் பாவமும் இல்லை. இது திருமறைக் கூற்று. ஆகவே என்னோடு ஒரு மணி நேரம் விழித்திருக்க உங்களால் முடியவில்லையா என்று கேட்கும் இயேசுவைச் சந்தித்து பாவ விமோசனம் பெறுவோம். பாவ மன்னிப்பு என்றால் என்ன? நாம் ஆண்டவரோடு ஒப்புரவாகுவதே பாவ மன்னிப்பு. பாவ உணர்வில் இருந்து விடுதலை பெறுவதே பாவ மன்னிப்பு. சிலுவையில் கிறிஸ்து நம்முடைய பாவங்களைத் தம்மேல் ஏற்றுச் சுமந்தார் என்று விசுவசித்து, அவரிடத்தில் வந்து நம் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்கும்போது பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற முடியும்.

ஆனால் இன்று மனிதனுக்கு இதுதான் பிரச்சினை. தன்னுடைய பாவத்தை முற்றுமுழுதாகக் கையளிக்க முடிவதில்லை. வாழ்க்கையில் தேடல்கள் அதிகமாகிக்கொண்டே போவதால் பாவங்களும் அதிகமாகிக்கொண்டே போகின்றது. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் உறவு முறிவடைந்துள்ளது. மனிதன் வாழ்வை தொலைத்துவிட்டு அதை எங்கோ தேடுகின்றான். அவன் தொலைத்த இடத்தில் தேடுவானாக இருந்தால் கண்டுபிடித்து விடுவான். இதற்காகவே இயேசுக்கிறிஸ்து சிலுவையில் மரித்தார்.

பாவமன்னிப்புக்காக இயேசு சிலுவையில் மரிக்கவேண்டியது அவசியமாக இருந்தது. சுலபமாக பாவத்தை மன்னித்து விடமுடியாது. பாவத்தை மன்னிக்கக் கூடியவர் கடவுள் ஒருவரே. வேறு ஒரு வழியை கடவுள் கையாண்டிருந்தால் அப்படிப்பட்ட பாவ மன்னிப்பை நமது உள்ளம் ஏற்க மறுக்கும். ஆனால் சிலுவையில் இயேசுக்கிறிஸ்து நம்முடைய பாவங்களை நம்மேல் சுமந்து, பாடுகள் அனுபவித்து சிலுவையில் உயிர்விட்டார் என்று விசுவசித்து, அவரிடத்தில் வந்து நம் பாவங்களை அறிக்கை செய்து மன்னிப்புக் கேட்கும்போது நம் பாவங்களை அவர் மன்னித்தார் என்கிற நிச்சயத்தைப் பெறமுடியும்.

நம் பாவங்களுக்கான தண்டனையை அவர் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவருடைய நீதி நிறைவேறாது. கடவுள் நீதியுள்ளவர். மனிதனைப் படைத்த கடவுளால் பாவத்தில் வீழ்ந்துவிட்ட மனிதனை அப்படியே விட்டுவிட முடியாது. அது நீதியான செயல் அல்ல! பாவம் செய்த மனிதன் தன்னுடைய பாவங்களுக்காகத் தானே பாடு அனுபவிக்க வேண்டுமே ஒழிய மற்றவர்களுடைய பாவங்களுக்காக அவன் பாடு அனுபவிக்க முடியாது. "ஏனெனில் எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்துபோயினர்! என்று (உரோ 3:23) சொல்லப்படுகின்றது. பாவமற்ற ஒருவர்தான் நம்முடைய பாவங்களுக்காகப் பாடு அனுபவிக்க முடியும். கடவுள் ஒருவரே பாவம் அற்றவர்.

ஆகையால்தான் கடவுள் மனிதராக இந்த உலகத்துக்கு வந்து நம்முடைய பாவங்களை தம்மேல் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அது மட்டுமல்ல அப்படிப்பட்ட பாவ பிராயச்சித்த பலியானது நித்தியமான வாழ்வை மனுக்குலத்துக்குத் தருவதாய் இருக்க வேண்டும். கடந்தகால மனிதரின் பாவம், நிகழ்கால மனிதரின் பாவம், எதிர்கால மனிதரின் பாவங்கள் எல்லாமே அந்தப் பலியில் அடங்கியிருக்க வேண்டும். மனுக்குலத்தின் முழுப் பாவமும் அடக்கப்பட வேண்டும். அப்போதுதான் மீட்புத்திட்டம் நிறைவேறும். அப்படியானால் பலியாகக் கொடுக்கப்பட்ட ஜீவன் நித்தியமானவராய் இருக்க வேண்டும். சாவுக்கு உட்படாதவராய் இருக்க வேண்டும். நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்க வேண்டும். அது கடவுள் ஒருவரால் மட்டுமே சாத்தியமாகும்.

தந்தையின் சித்தப்படி மனுக்குல மீட்புக்காக நமது பாவங்களை சுமந்து, நம் அனைவர் சார்பாகவும் தந்தையிடம் இருந்து இயேசுக் கிறிஸ்து பாவ மன்னிப்பைப் பெற்றுத் தந்துவிட்டார். நமது பாவங்கள் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டுவிட்டது. அதற்கு அடையாளமாய் இயேசுக்கிறிஸ்து சிலுவையில் இறந்துவிட்டார். நமது பாவங்களுக்கு மன்னிப்பும் கிடைத்து விட்டது. தந்தையின் கோபமும் தணிந்துவிட்டது. ஆனால் அவர் கடவுள் ஆனதால் சாவு அவரை தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை. வெற்றி வீரனாய் உயிர்த்தெழுந்தார். உயிர்த்த கிறிஸ்துவிடம் வந்து, பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியும். பாவ மன்னிப்புக்கான ஓரே வழி இதுதான். இதற்கான அருள் பெற இயேசுக்கிறிஸ்து தனித்திருந்த இடத்துக்கு சென்று விழித்திருந்து ஜெபிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## காலத்தின் கண்ணாடியில் படிந்த வேதனைகள்

தொட்டிலிலே நீ கிடந்து அழுவதேனோ?
சுமக்கின்ற சிலுவையை நீர் நினைத்துத்தானோ?
கட்டுகளை அறுக்காமல் காலமெல்லாம்
கதறி அழும் நாடுகளைக் கண்டதாலே?
பட்டினியாய் உணவோடு உடையுமின்றி
பரிதவிக்கும் மனிதரிலே பாசம் கொண்டோ?

மண்பட்டால் நோகுமென்று தாயார் தூக்கும்
மேனியிலே ஆணிவைத்து
பண்பட்ட சுத்தியலால் அடித்தபோது
புண்பட்டுப் பாய்ந்தது செவ்விரத்தம்.

நீண்டகாலம் நீதிநெறி புரண்டு
ஆசை எனும் போர்க்களத்தில் உனை மறந்து
கண்கெட்ட இவ்வுலகின் கயமைதனை
களைந்தெறியும் மருந்தெனவே வந்தீர் ஐயா!

வல்லமையின் ஆயுதமும் சிலுவைதானே?
மாசகற்றும் பரிசுக்கு மரணம் தானோ
சொல்லரிய கள்வர்களோ உமக்குச் சோடி
சொர்க்கத்தை வாக்களித்தீர் கள்வனுக்கே

காறி முகத்தில் துப்பியதோ வாழ்த்தும் கவி
புரியில்லா ஆணிகளோ தங்கக் காப்பு
நல்லானே நீ மொழிந்த வசன மெல்லாம்
நாசமாகும் பூமிக்கு நஞ்சாய் போமோ?

கண்ணுக்குக் கண்புடுங்கும் காலம்தனில்
கன்னத்தில் அடித்தோர்க்கு மறுகன்னத்தையும்
எண்ணியே காண்பி நீ என்றே சொன்னீர்.

தண்ணீரை மொள்ளவந்த சமாரியப் பெண்ணுக்கு
தாகமற்ற தண்ணீரைத் தருவேனென்றீர்.
புண்ணியனே மற்றோரை நேசிக்கின்ற
பொன் பூவே தொங்குகின்றீர் சிலுவையிலே!

F. நிக்கல்சன்
மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.

## எங்கே சமாதானம்?

துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்தில் - நாம்
கிள்ளி விடப்படுகிறோம்!
அறிவைக் கற்கும் பருவத்தில்
அமைதிதேடி அலைகின்றோம்.
குயிலோசை கேட்கும் காலத்தில்
குண்டோசை கேட்டோம்.
கவியோசை கேட்கும் காலத்தில்
கண்ணி வெடியோசை கேட்டோம்.

சோலைகளைத் தேடி நாடியபோது
பாலைகளே எமக்குப் பரிசாய்க் கிடைத்தது.
அப்போது வரண்டுபோனது பூமி மட்டுமல்ல
எங்கள் புன்னகையும்தான்.
இருண்டு போனது தேசம் மட்டுமல்ல
எங்கள் இதயமும்தான்.
புரண்டுபோனது மலைகள் மட்டுமல்ல
எங்கள் மனங்களும்தான்!
சமாதானமே நீ எங்கே?
சீக்கிரமாய் வா இங்கே!

அ. சர்மிலா, கீரி, மன்னார்

## இவளே தாய்!



தாலாட்டும் தாய் மடியில்
தாங்கும் கரங்களில்
தாயிவள் காலடியில்
இன்னுமொரு இடம் கேட்டேன்.

இளகிப் போய்விட்டாள்,
இதயமுண்டு அவளுக்கு
துயரத்தில் ஆழ்ந்தவள்
துடிதுடித்து பதறியென்னைக்
கட்டி அணைத்துக்கொண்டாள்
கவலை மறந்து கண்ணீரோடு
அவள் மடியில் துயில்கொண்டேன்.

அ. சர்மிலா, கீரி, மன்னார்

# சித்த மருத்துவக் குறிப்புகள்



- *வாந்தி நீக்கும் நெல்லி :*
  நெல்லியீர்க்கு, கருவேம்பீர்க்கு, வேப்பீர்க்கு மூன்றையும் சேர்த்து இடித்து, நீர்விட்டுக் காய்ச்சிக் கொடுக்க வாந்தி உடனே நிற்கும்.
- *படர்தாமரைக்கு :*
  அறுகம்புல்லும், மஞ்சளும் சேர்த்து அரைத்து படர்தாமரையில் பூச தீரும்.
- *பல் ஈறு, வீக்கம், வலிக்கு :*
  கிராம்பு, கற்பூரம், ஓமம் எடுத்து நன்றாகத் தட்டி, வீக்கம் உள்ள ஈறுகளில் வைத்து சிறிது நேரம் சென்றபின் வாய் கொப்பளிக்க பல் ஈறு வீக்கம் தீரும்.
- *மலச்சிக்கலுக்கு :*
  பிஞ்சு கடுக்காய் - 100 கிராம், சுக்கு – 100 கிராம் எடுத்து தட்டி, 1 குவளை நீரில் போட்டு காய்ச்சி, இரவு படுக்கப் போகும்பொழுது குடித்துவிட்டு படுக்கவும். நன்றாக மலம் இளகும்.
- *முகப் பொலிவிற்கு :*
  உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சிறிது பன்னீரும் சந்தனமும் அரைத்து முகத்தில் தடவ தோலின் பொலிவு பெறும்.
- *சூட்டினால் உண்டாகும் இருமலுக்கு:*
  மிளகை தூள் செய்து சம அளவு பனைவெல்லம் கலந்து சுண்டைக்காய் அளவு ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட வேண்டும்.
- *குழந்தைகள் பேதிக்குப் பிட்டு வகை :*
  புளியாரை, வாழைப்பூ சமனெடை எடுத்து இடித்து பிட்டவியல் செய்து தேன் சேர்த்து பிசைந்து கொடுக்க பேதி நிற்கும்.
- *பசி உண்டாக :*
  புதினா சாறு 1 பங்கு, எலுமிச்சம் பழச்சாறு 3 பங்கு கூட்டி கொஞ்சம் சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.
- *வாய்ப்புண் தீர்க்கும் மருதாணி :*
  மருதாணி இலையைப் பஞ்சுபோல் இடித்து அரைப்படி தண்ணீர் விட்டு காய்ச்சி வடித்து வாய் கொப்புளிக்கத் தீரும்.
- *நீர்த்துவார எரிவு தீர :*
  வால்மிளகு 5 கிராம், நல்ல நீர்விட்டு அரைத்து தண்ணீரில் கலந்து 1 நாளைக்கு 4 முறை கொடுக்கவும்.
- *அஜீரண பேதிக்கு :*
  மிளகை வறுத்துப் பொடி பண்ணி திரிகடி பிரமாணம் தேனில் கொள்ளத் தீரும்.
- *உடல் இளைத்தவருக்கு :*
  பூசினி வித்தின் பருப்பை எடுத்து பொடித்துக் காய்ச்சிய பாலில் கலந்து சாப்பிட்டுவந்தால் உடல் எடை கூடும்.
- *வெளுத்த மயிர் கறுக்க :*
  கரிய போளத்தை நெல்லிக்காயின் சாற்றால் அரைத்துப் பூசி வந்தால் மயிர்கள் கறுத்து வளரும்.

# கொஞ்சம் சிரிங்க

*மனைவி :* என்னங்க இன்னிக்கு நம்ம கலியாண நாள்... கோழி அடிச்சி குழம்பு வைக்கட்டுமா?
**கணவன் :** நான் செஞ்ச தப்புக்கு அதுக்கு ஏன் தண்டனை கொடுக்கறே...?

.................................

*அப்பா :* கண்ணா, ராத்திரி தூங்கும்போது செல்போனை சார்ஜ்ல போடதப்பா!
*மகன் :* ஏம்பபா...?
*அப்பா :* பேட்டரி சூடானா எப்போவாவது வெடிக்கவும் செய்யலாம்!
*மகன் :* அது தெரியும்ப்பா... அதனாலதான் சார்ஜ்ல போடும்போது பேட்டரியை கழட்டி வெச்சுடுவேன்!

.................................

*பெண் :* ஹலோ இது கஸ்டமர் கெயார் தானே?
**கஸ்டமர் கெயார் :** ஆமாம் சொல்லுங்க மேடம்
*பெண் :* என் அஞ்சு வயசுப் பையன் சிம் கார்டுஐ விழுங்கிட்டான்.
*கஸ்டமர் கெயார் :* அப்படினா டாக்டர் கிட்ட கூட்டிகிட்டு போங்க மேடம்.
*பெண் :* இல்லை அது 95 பைசா பலன்ஸ் இருந்துச்சி அவன் பேசும்போது காசு போகுமா சார்?
*கஸ்டமர் கெயார்:* ?????

# சமையல் குறிப்பு

## வெங்காய பகோடா



### தேவையானவை:

கடலை மாவு - 1கிலோ,
கடலை எண்ணை - 300 மி.லீ
பெரிய வெங்காயம் - 1 1/2 கிலோ
சோடா உப்பு - 1/2 டீ ஸ்பூன்
பச்சை மிளகாய் - 5 (நீளமாக நறுக்கியது)
உப்பு - ருசிக்கேற்ப
எண்ணைய் - பொரிக்க

### செய்முறை :

வெங்காயத்தை நீளமாக பொடியாக வெட்டவும். கடலை மாவில் சோடா உப்பு, உப்பு, கடலை எண்ணைய், வெட்டி வைத்திருக்கும் வெங்காயம், பச்சை மிளகாய் கலந்து சிறிது தண்ணீர் சேர்த்து உதிரியாக பிசைந்து வைத்துக்கொண்டு எண்ணையில் உதிரத்துப் போட்டு சிவந்ததும் எடுக்கவும்.
*வெங்காய தூள் பகோடா ரெடி.*

# சமையல் குறிப்பு

## வெந்தயக் குழம்பு



### தேவையானவை:

புளி - நெல்லிக்காய் அளவு
கறிவேப்பிலை - கொஞ்சம்
*தாளிக்க:*
நல்லெண்ணெய் - 4 தே.க, மிளகாய் வற்றல் - 4
பெருங்காயம் - 1/4 தே.க, வெந்தயம் - 1/2 தே.க.
கடலைப்பருப்பு - 1/2 தே.க
உளுத்தம் பருப்பு - 1/2 தே.க,
துவரம்பருப்பு - 1/2 தே.க, கடுகு - 1/4 தே.க.
உப்பு - தேவைக்கேற்ப, தண்ணீர் - 2 கப்

### செய்முறை :

தண்ணீரில் புளியை நன்றாகக் கெட்டியாக கரைத்து வைக்கவும். தாளிக்க உள்ளதை தாளித்ததும் அதில் இந்தப் புளிகரைசலைவிட்டு நன்றாகச் சுண்ட கொதிக்க வைக்கவும். குழம்பு பாதியளவு வந்தவுடன் இறக்கி வைத்து, மேலே கொஞ்சம் பச்சை கறிவேப்பிலை போடவும். நல்ல எண்ணெய் மணத்துடன் சாதத்தோட சாப்பிட ரொம்ப நன்றாக இருக்கும்.

# மன்னா விளம்பரப் பலகை

நேற்று என்பது முடிந்துவிட்டது! நாளை என்பது இனிவரும் நாள்! இன்று என்பது உள்ளங்கையில்!

இந்த உலகம் நீ நன்மை செய்யும்போது கவனிக்காது! நீ தீமை செய்யும்போது உன்னை விமர்சிக்காமல் இருக்காது!

.........................

எதுவரை சென்றேன் என்பது முக்கியமில்லை. எதை நோக்கி எதற்காகச் சென்றேன் என்பது எனக்கு முக்கியம்.

.........................

எல்லோருடைய வாழ்க்கையும் மெழுகுவர்த்திதான் ....
தூரத்தில் இருந்து பார்த்தால் ஒளி தெரியும்!
அருகில் இருந்து பார்த்தால் கண்ணீர் தெரியும்....

எந்தப் பிழையை நீ எங்கே கண்டாலும், அது உன்னிடம் இருந்தால் திருத்திக்கொள்.

.........................

பிறர் முதுகுக்கு பின்னால் நாம் செய்யவேண்டியது தட்டிக் கொடுப்பது மட்டும்தான்.

.........................

அறிவு என்பது நதியைப் போன்றது. அது எவ்வளவு ஆழமாக இருக்கிறதோ! அந்த அளவுக்கு அமைதியாக இருக்கும்.

சிரிக்கும்போது வாழ்க்கையை ரசிக்க முடியும். ஆனால் அழும்போதுதான் வாழ்க்கையைப் புரிந்துகொள்ள முடியும்

ஒருவர் உன்னை தாழ்த்திப் பேசும்போது ஊமையாய் இரு. புகழ்ந்து பேசும்போது செவிடனாய் இரு. எளிதில் வெற்றி பெறுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

### தொடர் 4 -

## 2.4. திருவழிபாட்டுக்கு உரிய நூல்கள்

"மோசே உடன்படிக்கையின் ஏட்டை எடுத்து மக்கள் காதுகளில் கேட்கும்படி வாசித்தார்." (விப 24:7)

**71. திருவழிபாட்டுக்கு உரிய நூல்கள் என்றால் என்ன?**

திருச்சபை ஏற்படுத்தியிருக்கும் விதிமுறைகளும் இறை வேண்டல்களும் திருச்சபை கொண்டாடும் திருவழிபாட்டுச் சடங்குகளும் அவற்றில் பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறைகளும் அடங்கிய நூல்களே திருவழிபாட்டுக்கு உரிய நூல்கள் ஆகும்.

**72. திருவழிபாட்டிற்கான முக்கியமான நூல்கள் எவை?**

திருப்பலி நூல் (Missal), ஆயரின் சடங்கு நூல் (Pontifical), திருச்சடங்கு நூல் (Ritual), நற்செய்தி வாசக நூல் (Book of the Gospels), வாசக நூல் (Lectionary), திருப்புகழ்மாலை (Breviary or Liturgy of the Hours), பாடல் நூல் ஆகியவை.

**73. திருப்பலி நூல் என்பது என்ன?**

திருத்தூதரக அமைப்பு விதிமுறைகளும், திருப்பலிக்கு உரிய ஒழுங்குமுறைகளும், திருப்பலி அமைப்பு முறையும் கால வேற்றுமை, புனிதர்களின் திருச்சடங்குகள், அருளடையாளங்கள், பல்வேறு தேவைகள், நேர்ச்சிகள், இறந்தோர் முதலானவற்றிற்கு உரிய திருப்பலி மன்றாட்டுகளும் அடங்கிய நூல் ஆகும்.

குறிப்பு: இந்நூல் திருப்பலி நிறைவேற்றுபவர்க்கும் கூட்டுத் திருப்பலியாளருக்கும் உரிய நூல் ஆகும்.

இந்நூல் 'உரோமைத் திருப்பலி நூல்' என்று அழைக்கப்படுகிறது.

**74. திருப்பலியில் இறைவார்த்தையைப் பறைசாற்ற பயன்படுத்தப்படும் நூல்கள் எவை?**

அ) வாசக நூல் (Lectionary): பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டு பகுதிகள் அடங்கியது:

ஆ) நற்செய்தி வாசக நூல் (Book of the Gospeles): நற்செய்தி பகுதி மட்டும் அடங்கியது.

**75. வாசக நூல் என்பது என்ன?**

இறைவார்த்தை வழிபாட்டை நிறைவேற்றப் பயன்படும் ஓர் இறைநூல். இந்நூலில் பழைய ஏற்பாட்டிலிருந்தும் புதிய ஏற்பாட்டிலிருந்தும் பல பகுதிகள் தேர்வுசெய்யப்பட்டு, அந்தந்த நாளுக்கும் திருவிழாக் கொண்டாட்டத்திற்கும் ஏற்றவாறு வாசகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: திருப்பலியில் இறைவார்த்தை வாசிப்புக்கு இந்நூலே பயன்படுத்தப்பட வேண்டும்.

**76. வாசக நூல் எவ்வாறு வடிவமைக்கப்பட்டு உள்ளது?**


வாசக நாள்களுக்கு இரண்டு ஆண்டு கால சுழற்சி முறையிலும் ஞாயிற்றுக் கிழமைகளுக்கு மூன்று ஆண்டு கால சுழற்சி முறையிலும் இது வடிவமைக்கப்பட்டு உள்ளது.

முதல் வாசகம் நற்செய்தி வாசகத்தைப்பற்றி முன்னறிவிக்கின்றது; பதிலுரைத் திருப்பாடல் முதல் வாசகத்திற்கு மக்கள் தரும் பதில் மொழியாக அமைகிறது; இரண்டாம் வாசகம் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்தோ புதிய ஏற்பாட்டு திருமுகத்திலிருந்தோ எடுக்கப்பட்டுள்ளது.

திருவருகைக் காலம், கிறிஸ்து பிறப்புக் காலம், தவக்காலம், பாஸ்காக் காலம் ஆகிய சிறப்புக் காலங்களில் வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் 'மூன்று' வரிசை வாசகங்களும் வாரநாள்களில் 'ஒரு' வரிசை வாசகங்களும் உள்ளன.

ஆண்டின் பொதுக்கால ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெருவிழாக்களிலும் மூன்று வாசகங்கள் உண்டு: பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, நற்செய்தி, அதாவது முதல் வாசகம் பழைய ஏற்பாட்டிலிருந்தும் பதிலுரைத் திருப்பாடல் அதற்கு ஏற்றதாகவும் இருக்கும். முதல் வாசகத்தின் மையக்கருத்தையொட்டியதாக நற்செய்தி வாசகம் அமைந்திருக்கும். முதல் ஆண்டில் மத்தேயு நற்செய்தியும் 2-ஆம் ஆண்டில் மாற்கு, யோவான் நற்செய்திகளும் 3-ஆம் ஆண்டில் லூக்கா நற்செய்தியும் இடம்பெறுகின்றன. நற்செய்தி வாசகம் தொடர்ச்சியாக அமைந்திருக்கும். இரண்டாம் வாசகம் புனித பவுலின் திருமுகங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கும். எனவே பொதுக்கால ஞாயிறுகளில் இரு வேறுபட்ட மையக் கருத்துக்கள் இழையோட வாய்ப்பு உண்டு.

விழா நாள்களில் பொதுவாக இரு வாசகங்கள் குறிக்கப்பட்டுள்ளன. சில விழாக்களுக்கு மூன்று வாசகங்கள் உண்டு. வார நாள்களில் முதல் வாசகம் இரண்டு ஆண்டுகளுக்கென்று தனித்தனி வாசகமும், நற்செய்தி வாசகம் இரண்டு ஆண்டுகளுக்கும் ஒரே வாசகமாகவும் அமைக்கப்பட்டுள்ள: இந்த ஒரே நற்செய்தி வாசகம் மூன்று நற்செய்தி நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒன்றாம் வாரமுதல் 9-ஆம் வாரம்வரை மாற்கு நற்செய்தியும் 10-ஆம் வாரம்முதல் 21-ஆம் வாரம்வரை மத்தேயு நற்செய்தியும் 22-ஆம் வாரம் முதல் 33-ஆம் வாரம்வரை லூக்கா நற்செய்தியும் வாசிக்கப்படுகின்றன.



ஒரு சிறப்பான வாசக அமைப்பு இங்கே சுட்டிக் காட்டப்படுகிறது: பாஸ்காக் காலத்தில் பழைய ஏற்பாட்டிலிருந்து வாசகங்கள் இருக்காது. நற்செய்தி வாசகம் 'ஆன்மிக நற்செய்தி' என்று அழைக்கப்படுகின்ற யோவான் நற்செய்தியிலிருந்து பறைசாற்றப்படுகிறது. ஏனெனில் கிறிஸ்துவில் நாம் அனைவரும் புதுப்படைப்பு என்பதை திருவழிபாட்டு மரபு வலியுறுத்துகிறது. மேலும் கிறிஸ்துவில் நாம் அனைவரும் புதுப்படைப்பு என்பதை திருவழிபாட்டு மரபு வலியுறுத்துகிறது. மேலும் கிறிஸ்துவில் நாம் எவ்வாறு ஒன்றித்திருக்கிறோம், அவர் வழியாக எவ்வாறு நாம் கடவுளில் வாழ்கிறோம் போன்ற ஆன்மிகச் சிந்தனையை ஊட்டுகிறது. முதல் வாசகம் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. எதற்காக என்றால், உயிர்த்தெழுந்த கிறிஸ்து எவ்வாறு தொடக்கத் திருச்சபையிலும் நம்மிலும் செயலாற்றுகிறார் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக. பாஸ்காவின் ஐம்பது நாள்களிலும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் நம் வாழ்வின் அனுபவத்தை இன்னும் ஆழப்படுத்தும் விதத்தில் இவ்வாசகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: மேலும் விவரங்களுக்கு திருப்பலி வாசக நூல் பொது முன்னுரையைப் பார்க்கவும்.

**77. 'நற்செய்தி வாசக நூல்' என்பது என்ன?**

திருப்பலியில் நற்செய்தியைப் பறைசாற்றுவதற்காக நற்செய்திப் பகுதிகளை மட்டும் கொண்ட நூல் ஆகும். இது வருகைப் பவனியின்போது திருத்தொண்டராலோ பிற பணியாளராலோ கொண்டுவரப்பட்டு பீடத்தின்மீது வைக்கப்படும். திருப்பலியின் தொடக்கச் சடங்கின்போது இந்நூல் மட்டுமே பீடத்தின்மேல் இருக்கும். நற்செய்தி வாசிக்கும்முன் இந்நூலானது பீடத்திலிருந்து பவனியாக வாசகமேடை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டு அங்கே நற்செய்தியானது பறைசாற்றப்படும்.

குறிப்பு: நற்செய்தியைப் பறைசாற்றியபின், அங்கே ஆயர் திருப்பலியின் முதல்வராக இருந்தால், அந்நூலை முத்தமிடுவதற்காக அவரிடம் எடுத்துச்செல்லலாம்.

- இந்நூல் இந்தியாவில் இன்னும் உருவாக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரவில்லை.

**78. ஆயரின் சடங்கு நூல் என்பது என்ன?**

திருவழிபாட்டுக்குரிய சடங்குகளை ஆயர் நிறைவேற்றும்போது, அவர் மட்டும் பின்பற்றக்கூடிய சடங்கு முறைகள் அடங்கிய நூல் ஆகும்.

**79. திருச்சடங்கு நூல் என்பது என்ன?**

அருளடையாளங்களை நிறைவேற்றும்போது அடக்கம், புனிதப்படுத்துதல் போன்ற இன்னும் பிற திருவழிபாட்டுச் சடங்குகளின்போதும் சொல்லவேண்டிய இறைவேண்டல்களும் பின்பற்றக்கூடிய சடங்கு ஒழுங்குமுறைகளும் அடங்கிய நூல் ஆகும்.

**80. 'திருப்புகழ் மாலை' நூல் என்பது என்ன?**

இது திருச்சபையின் இறைவேண்டல் நூல். எனவே இந்நூல் 'திருச்சபையின் திருப்புகழ்மாலை' என்றே அழைக்கப்படுகிறது. இத்திருப்புகழ்மாலை பல பெயர்களால் அழைக்கப்படுகிறது: திருச்சபையின் இறைவேண்டல் (Prayer of the Church), இறைமக்களின் இறைவேண்டல் (Prayer of the People), கட்டளை இறைவேண்டல் (Divine Office), சீரமைத்துச் சிறியதாக்கப்பட்ட இறைவேண்டல் (Breviary), நாழிகை வழிபாடு அல்லது திருமணி வழிபாடு (Liturgy of the Hours).

இது அருள்பணியாளர்களும் துறவியரும் மட்டும் இறைவேண்டல் செய்ய பயன்படுத்தும் நூல் அல்ல: பொதுநிலையினரும் இந்நூலைப் பயன்படுத்த திருச்சபை பெரிதும் பரிந்துரைக்கிறது. இந்நூலின் சிறப்பும் நோக்கமும் நேரத்தைப் புனிதப்படுத்துவது ஆகும்.

**81. மேற்சொன்ன நூல்களையெல்லாம் திருவழிபாட்டில் பயன்படுத்துவதற்காக நமக்குத் தந்தவர் யார்?**

திருச்சபையின் தந்தையர்கள் காலத்திலிருந்து திரெந்து சங்கம் வரைக்கும் பல்வேறு காலங்களில் திருச்சபையின் ஆட்சியாளர்களால் இவை நமக்குத் தரப்பட்டன. ஆயினும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் குறிக்கோளின் - விருப்பத்தின்படி திருவழிபாட்டுப் பேராயத்தின் பணியின் வழியாக இந்நூல்கள் புதிதாகச் சீரமைக்கப்பட்டு நமக்குத் தரப்பட்டுள்ளன.

**82. இவை தவிர திருவழிபாடு தொடர்புடைய நூல்கள், கொள்கைக் கோட்பாடுகள் கொண்ட ஆவணங்கள் எவை?**

**காண்க. பிற்சேர்க்கை – 1 பக்கம் 161.**

**83. 'உரோமைத் திருப்பலி நூலின் பொதுப் போதனை' (General Instruction of the Roman Missal – GIRM) என்பது என்ன?**

- இது திருப்பலி நூலுக்கான முன்னுரையைக் கொண்டது:
- திருப்பலி எவ்வாறு கொண்டாடப்பட வேண்டும் என்ற அருள்பணி விதிமுறைகளைக் கொண்டது:
  - இது திருவழிபாட்டுக்கு உரிய ஒழுங்குமுறைகளைக் கொண்ட தொகுப்பு எனக் கருதப்படுகிறது.
  - இது திருச்சபைச் சட்ட ஒழுங்குகளைப் போன்று அதிகாரபூர்வமானது.

## 2.5 திருவழிபாட்டுக்கு உரிய மொழிகள்

"நாம் நம் மொழிகளிலே கடவுளின் மாபெரும் செயல்களை இவர்கள் பேசக் கேட்கிறோமே" (திப 2:10').

**84. தொடக்கத்தில் திருத்தூதர்கள் திருப்பலியையும் திருவழிபாட்டுச் சடங்குகளையும் எந்த மொழிகளில் நடத்திவந்தார்கள்?**

யூதர்களின் மொழியும் இயேசுவின் மொழியுமான அரமேயிக் மொழியில் நடத்திவந்தார்கள். பின் அவர்கள் யூதேயாவை விட்டுப் பிற இடங்களுக்குச் சென்றபிறகு அக்காலத்தில் உலகம் எங்கும் பரவியிருந்த கிரேக்க மொழியைப் பயன்படுத்தியுள்ளனர். அந்த மொழி மூன்றாம் நூற்றாண்டுவரை திருச்சபையின் பொதுவான மொழியாக இருந்தது: பின்னர் அதற்குப் பதிலாக இலத்தீன் மொழி திருவழிபாட்டில் பயன்படுத்தப்பட்டது.

**85. பிற்காலத்தில் திருவழிபாட்டில் பயன்படுத்தப்பட்ட பிற மொழிகள் யாவை?**

கிரேக்கம், இலத்தீன் இவற்றோடு ஹீப்ரு, சீரியாக், கொப்திக், ஸ்லாவோனிக் ஆகியன.

**86. திருவழிபாட்டு மொழிகளைக் குறித்து திருச்சபை வகுத்திருக்கும் சட்டம் என்ன?**

உலகளாவிய திருச்சபையின் மொழி இலத்தீனாக இருந்தாலும் 'தழுவியமைத்தல்' – 'பண்பாட்டுமயமாக்கல்' இவற்றின்படி அந்தந்த நிலப்பகுதிகளின் மொழிகளில் திருவழிபாட்டை நடத்த திருச்சபை அனுமதி வழங்கி உள்ளது. (திவ 37-40).

**87. இலத்தீன் வழிபாட்டு முறையில் திருச்சபை இலத்தீன் மொழியை தாய்த் திருச்சபையின் மொழியாக ஏன் இன்னும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது?**

சில காரணங்கள் உள்ளன:

**ஒன்று:** திருச்சபை இலத்தீன் மொழியை ஒன்றிப்பின் அடையாளமாகவும் பிணைப்பாகவும் கருதுகிறது: எனவே உலகின் அனைத்துப் பகுதிகளிலும் இம்மொழி கொண்டே அதிகாரபூர்வமாகத் தொடர்பு கொள்ள:

**இரண்டு:** இம்மொழி மிகவும் பண்பட்ட மொழியாகையால் கொண்டாடப்படுகின்ற மறைநிகழ்வுகளுக்கு தகுதியான விளக்கங்களைக் கொடுக்க:

**மூன்று:** இலத்தீன் மொழி மக்கள் பேச்சு இல்லாதால் அது அதிகம் மாறாத மொழி: எனவே என்றும் மாறாத கத்தோலிக்க நம்பிக்கை உண்மைகளை எந்த ஒரு வேற்றுமையுமின்றி காப்பாற்றுவதற்கு:

**நான்கு:** ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவர் எந்த நாட்டிற்குச் சென்றாலும் ஒருவேளை இலத்தீன் மொழியில் வழிபாடு நடைபெறுமேயானால் இதில் கலந்துகொள்கிறபோது தனது சொந்த நாட்டில் இருப்பது போன்ற ஓர் உணர்வைத் தருவதற்கு: அந்த மொழியில் அருளடையாளங்களைப் பெறுவதற்கு.

குறிப்பு : எவ்வாறாயினும், இலத்தீன் மொழி நமக்கு ஓர் அந்நிய மொழியே.


**மன்னா**

**சந்தாதாரர் கவனத்திற்கு!**

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் - கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.164

## யூதித்து 8 - 16, எஸ்தர் கிரேக்கம் 1-10

உங்கள் விடைகளை மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 02 | | 03 | 04 | | | 05 | |
| | | | | ❖ | | | | | 06 |
| | | | | | 08 | | | 07 | |
| | | 09 | | | ❖ | | 10 | | |
| | 12 | 11 | | | | | | | |
| ❖ | | | 13 | ❖ | | | | | ❖ |
| | 16 | | | | 15 | 14 | | | |
| | | | | 17 | | | | | 18 |
| | | | | 19 | | | | | |
| 23 | 22 | 21 | | ❖ | | | | 20 | |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### இடமிருந்து வலம்

1. தாம் அணிந்திருந்த ............ உடையை அகற்றினார்.
4. ................ ஒலொபெரின் அவரிடம், "மது அருந்தி எங்களுடன் களிப்புற்றிரு" என்றான்.
5. இதைத்தவிர ............ வழியே இல்லை.
9. யூதித்து ............... யின் மகள்.
11. மக்கள் அனைவரும் .................. சேர்ந்து உரத்தக் குரலில் பாடினார்கள்.
14. ஆனால் தமக்கு நெருக்கமாய் ............... எச்சரிக்கும்படி தண்டிக்கிறார்.
17. அவர்களிடம் .............. வாயிலை எனக்குத் திறந்துவிடுமாறு கட்டளையிடுங்கள்.
19. இதனால் மன்னர் .................. முற்றும் சினங்கொண்டார்.

### வலமிருந்து இடம்

3. .............. நமக்காக மன்னரிடம் பரிந்துபேசு;
6. மொர்தெக்காய் அரசவையில் பணிபுரிந்து ........................
7. "இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரே, "........... இன்று வலிமை அளித்தருளும்."
8. நம்பிக்கை இழந்த எங்களது .......... குச் செவிசாயும்.
14. ஆண்டவரே .............. கைவன்மையால் எங்களைக் காப்பாற்றும்;
18. நீர் வீழ்ச்சி அடைவது ......... அவரை எதிர்த்து வெல்ல உம்மால் முடியாது.
20. அதற்கு ............... "இன்று எனக்கு ஒரு பொன்னாள்."

### மேலிருந்து கீழ்

1. யூதித்து குப்புற விழுந்தார், தலையில் ...... தூவிக் கொண்டார்.
2. ................ அளவுமீறிப் போயிற்று
4. கடவுளே, ........... கடவுளே கைம்பெண்ணாகிய எனக்கும் செவிசாய்த்தருளும்.
6. .............. தானியம், உலர்ந்த பழங்கள், நல்ல அப்பங்கள் ஆகியவற்றை ஒரு பையிலிட்டு நிறைத்தார்.
7. நான் சென்ற பாதையில் .............. காப்பாற்றியவர் அவரே.
10. என் ............ படும் துன்பத்தை நான் எவ்வாறு பார்த்துக் கொண்டிருக்க முடியும்.
11. அவர்கள் ......... அழகைக் கண்டு வியந்தார்கள்.
13. எல்லோரும் ........... உண்ணா நோன்பிருங்கள்.
14. அவர்கள் எல்லோரும் கடவுளாகிய ஆண்டவரை நோக்கி ............. குரலில் மன்றாடினார்கள்.
18. ஏனேனில், நம் மக்களினத்தார் ஒடுக்கப்பட்டபோது நீ உன் ...........ப் பணயம் வைத்தாய்.

### கீழிருந்து மேல்

12. அதைச் சூரையாடிப் பெருஞ்செல்வங்களைச் .............. கொண்டனர்.
13. வியத்தகு வலிமைகொண்டவர் ............ வெல்லமுடியாதவர்.
14. "நீ கேட்பதெல்லாம் .............. கொடுப்பேன்" என்றார்.
15. ஒலோபெரின் அவரிடம் தன் மனத்தைப் பறிகொடுத்து ......... மீறிக் குடித்தான்.
16. யூதித்தின் கணவர் ................ அவர்கள் இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.
20. "ஆமான்தான் முற்றத்தில் நின்றுகொண்டிருக்கிறார்." .......... பணியாளர்கள் மன்னரிடம் கூறினார்கள்.
21. இன்று இரவும் இனியும் உனக்கு ஆபத்து எதுவும் ............
22. இந்த .......... மாதத்தில்தான் அவர்களின் துன்பம் இன்பமாக மாறியது.
23. மக்கள் யாவரும் பெரிதும் ............ப் போயினர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 162

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
டினேஜினி,
பெரிய கட்டைக்காடு,
நானாட்டான்



**இரண்டாம் பரிசு:**
P. பாணு,
நறுவிலிக்குளம்,
வங்காலை.

**மூன்றாம் பரிசு:**
A. தீபிக்கா குருஸ்,
சவேரியார் வீதி,
தாழ்வுபாடு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 79 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 162ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. பி. லக்ஷனா, அச்சங்குளம், நானாட்டான்.
02. நோ. மெறிக்ஷன் கூஞ்ஞ, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
03. M. பிளண்ரீனா, கன்னியர்மட வீதி, மன்னார்.
04. F. கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
05. அ. ஸ்ரெலா மேரி, துட்டுவாகை, நேரியகுளம்.
06. அ. பிறாங், மாதகல், யாழ்ப்பாணம்.
07. S. மேவின், பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
08. ம. தர்மிகா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
09. நீ. கிருஸ்ணம்மா, இலுப்பைக்கடவை, மன்னார்.
10. S. டயானா, பறப்பாங்கண்டல், பெரியகுளம்.
11. து. துசாளன், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
12. யோ. யூடி டலிமா, தோமஸ்புரி, வங்காலை.
13. அ. யசிந்தா, சாளம்பன், ஆண்டான்குளம்.
14. றா. கிறிஜனா, காத்தான்குளம், கருங்கண்டல்.
15. க. மடோனா, சிதம்பரபுரம், வவுனியா.
16. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
17. S. சுலைக்ஷன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
18. நு. கிளின்ரன், நறுவிலிக்குளம், வங்காலை.
19. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
20. கமலா கிறிஸ்தோப்பர், பெற்றா, மன்னார்.
21. S. சுபாராணி, தபால் கந்தோர்வீதி, மன்னார்.
22. A. M. பிரியதர்சினி, 2ம் வட்டாரம், புங்குடுதீவு.
23. தொ. கொறீனா, திருக்கேதீஸ்வரம், மன்னார்.
24. S. அசுந்தா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
25. ஹ. கீர்த்திகா, சாந்திபுரம், மன்னார்.
26. N. ஜஸ்மின், முதலியார்குளம், செட்டிகுளம்.
27. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப் பண்டிவிரிச்சான், மடு.
28. அ. இசக்கியேல், ஜோசப்வாஸ்நகர், தோட்டவெளி.
29. S. கவிந்து சனோஜ், கல்பிட்டிவீதி, மாம்புரி.
30. ச. விவேக்கா, அடம்பன்.
31. சு. கிருஷா, சிறுத்தோப்பு, பேசாலை.
32. ஜீ. ஜீவறொமா, பரிகாரிகண்டல், முருங்கன்.
33. S. வினோதினி, பெரியகட்டைக்காடு, நானாட்டான்.
34. திரு. பிரசன்னா சேவியர், பெற்றா, மன்னார்.
35. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள் நகர், வங்காலை.
36. யூ. நிசாந்தினி, திருநாவற்குளம், வவுனியா.
37. யூ. ஷிபானி, காத்தாங்குளம், வட்டக்கண்டல்.
38. T. S. லீலாவதி, சாந்திபுரம், மன்னார்.
39. சு. மேரி சுபனியா, காத்தான்குளம் வட்டக்கண்டல்.
40. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
41. கி. ஆன் றொக்ஷகா, கொண்னையன், குடியிருப்பு.
42. கே. துளசிகன், சிதம்பரபுரம், வவுனியா.
43. து. மேரி துஜேந்தினி, புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
44. A. யசிந்தா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
45. J. நிதர்சினி, சாந்திபுரம், மன்னார்.
46. டொ. ஜோர்ச் கெனடி, சிறுத்தோப்பு, பேசாலை.
47. கி. விதுஷா, கொன்னையன் குடியிருப்பு, தலைமன்னார்.
48. நீ. நிர்மலா, இலுப்பைக்கடவை, மன்னார்.
49. S. தறோமி, ஆட்காட்டிவெளி, அடம்பன்.
50. யே. அஸ்மிக்கா, சாளம்பன், ஆண்டான்குளம்.

## அதிர்வுகள் .....

10ஆம் பக்கத் தொடர்ச்சி

ஓமந்தை, கனகராயன்குளம், மாங்குளம், கிளிநொச்சி, பளை, கொடிகாமம், சாவகச்சேரி போன்ற பொலிஸ் நிலையங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் (இவ்விலக்கங்களை ஏற்கனவே உங்கள் அலைபேசியில் பதிவுசெய்து வைத்திருத்தல் நன்று) தொடர்புகொண்டு பேரூந்தில் இருந்தவாறே நடவடிக்கை எடுக்கமுடியும்.

3. இதுவும் சரிவராத நிலையில், பேரூந்தில் வாட்டசாட்டமான எட்டுப் பத்துப் பேர் பயணிக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் ஒன்றுசேர்ந்து பேரூந்தில் இருந்து யாராவது இறங்கவேண்டும் என்பதுபோல ஒலியெழுப்பி, பேரூந்து நிறுத்தப்பட்டதும், இயலுமான வாட்டசாட்டமான கொஞ்சப் பேர் சாரதியையும் நடத்துனரையும் பிடித்து வீதியோரத்தில் உள்ள மரங்களில் கட்டிவைத்து பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாகவே தெரியப்படுத்தலாம்.

இதில் கவனிக்கப்படவேண்டிய – கடைப்பிடிக்கவேண்டிய மிகமிக முக்கியமான விடயம் ஒன்றுண்டு! அதாவது சாரதிக்கோ, நடத்துனருக்கோ யாரும் தண்டனை வழங்கமுடியாது. அப்படி சட்டத்தை பொதுமக்கள் கையில் எடுத்துக்கொள்ள நாட்டின் சட்டம் அனுமதிக்காது. எனவே, "மக்களை பஸ்சில் ஏற்றி, தான்தோன்றித்தனமாக பஸ்சினை செலுத்தி, பொதுமக்களை கொலை முயற்சிக்கு உள்ளாக்க முயன்ற ஒரு சாரதியையும் நடத்துனரையும் நாங்கள் எங்கள் தற்பாதுகாப்பை முன்னிட்டு கட்டிவைத்திருக்கிறோம்! தயவுசெய்து உடன் விரைந்து எங்களையும் அவர்களையும் மீட்டுச்செல்லுங்கள்!" என்று ஓர் அவசர அறிவித்தலை பொலிஸ் நிலையத்திற்கு வழங்கலாம். இதற்கு பொலிஸ் நிலையம் நடவடிக்கை எடுத்தேயாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்!

மேலும் இனிமேலும் தான்தோன்றித்தனமாக செயற்படும் சாரதிகளுக்கும் நடத்துனர்களுக்கும் பொதுமக்கள் எப்படிப் பாடம் புகட்டுவார்கள் என்பதும் ஒரு பாடமாக அமைந்துவிடும். அகிம்சை வழிகள் தோற்றுப்போகின்றபோது வன்முறைகளைப் பிரயோகிக்காமல் தற்காப்பு – எச்சரிக்கை நடவடிக்கைகளில் இறங்குவதில் தவறில்லையே.

(கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் anpuomi1970@gmail.com)!

## இறையிரக்கத்தின் திருமுகம் ......

8ஆம் பக்கத் தொடர்ச்சி

எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் இரக்கத்தை தேடும் பாவமன்னிப்பு வேண்டுபவராக நம்மை ஆக்கிகொள்ளும் போதுதான் நாம் நல்ல ஒப்புரவு அருட்சாதனம் வழங்குபவராக மாறுகின்றோம். மன்னித்து மீட்பளிக்கும் இறை அன்பின் மாறாத் தன்மையின் காணக்கூடிய அடையாளமாயிருந்த இயேசுவின் பணியில் பங்கெடுப்பவரே ஒப்புரவு அருட்சாதனம் வழங்குபவர் என்பதை எப்போதும் நாம் மறத்தலாகாது. பாவங்களை மன்னிப்பதற்கு தூய ஆவியின் கொடையை குருக்களாகிய நாம் பெற்றிருக்கின்றோம். அதற்கு நாம் பொறுப்பாளிகள். இந்த அருட்சாதனத்தின்மீது நம்மில் யாரும் அதிகாரம் கொண்டிருக்கவில்லை. மாறாக இதன் வழியாக நாம் இறையிரக்கத்தின் உண்மையுள்ள ஊழியராய் இருக்கின்றோம். காணமற்போன மகனின் உவமையில் உள்ள தந்தையைப்போல ஒப்புரவு அருட்சாதனம் வழங்கும் ஒவ்வொருவரும் நம்பிக்கையாளரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அம்மகன் அவரது செல்வத்தை அழித்துவிட்டவனாய் இருந்தாலும் தன் மகனை சந்திக்க விரைந்தோடிய தந்தை அவர். ஒப்புரவு அருட்சாதனம் வழங்குபவர்கள் வீடு திரும்புகின்ற, மனம் வருந்திய மகனை அரவணைத்து அவனைத் திரும்பப் பெற்றதில் மகிழ்ச்சிகொள்வதை வெளிப்படுத்த அழைக்கப்பட்டுள்ளனர்.

இளைய மகன் திரும்ப வந்ததில் மகிழ முடியாத வெளியிலே நிற்கும் இன்னொரு மகனிடம் இறைத்தந்தையின் அளவில்லாத இரக்கத்தின் ஒளியில் அவனுடைய நிலைப்பாடு கடுமையானது. அநீதியானது, பொருளற்றது என்பதை விளக்குவதற்கு சொல்வதற்கும் நாம் சோர்வடையக்கூடாது.

ஒப்புரவு அருட்சாதனம் வழங்குபவர்கள் தேவையற்ற கேள்விகளை எழுப்பாமல் இருப்பவர்களாக, மாறாக, உவமையில் வரும் தந்தையைப்போல ஊதாரி மகன் ஏற்கனவே தயாரித்திருந்த உரையை இடையில் நிறுத்த வேண்டும். இவ்வாறு மனம் வருந்தும் ஒவ்வொருவரின் இதயத்திலிருந்து எழும் உதவிக்கும், இரக்கத்திற்குமான மன்றாட்டை ஏற்றுக்கொள்ள ஒப்புரவு அருட்சாதனம் வழங்குபவர்கள் கற்றுக்கொள்வார்கள். சுருங்கக் கூறின் என்ன நேர்ந்தாலும், எப்போதும். எல்லா, இடத்திலும், எல்லா சூழலிலும் இரக்கத்தின் முக்கியத்துவத்தின் அடையாளமாயிருக்க ஒப்புரவு அருட்சாதனம் வழங்குபவர் இருக்க அழைக்கப்படுகின்றார். *(தொடர்ச்சி அடுத்த இதழில்)*

## தவக்கோலம் தருமா வலிமை ....

6ஆம் பக்கத் தொடர்ச்சி

• நல்ல காரியங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதால் என்ன சாதிக்கப்போகிறோம் என்பதைச் சிந்தித்து, எதிர்மறை எண்ணங்களை மாற்றி, நல்லனவற்றுக்கு நேர்மறை எண்ணங்களை துளிர்க்கச் செய்வோம். இப்படி நினைக்க நினைக்க ஊற்றெடுக்கும் நல்ல காரியங்களை ஒருமுகப்படுத்தி, இந்தத் தவக்காலத்தில் நடைமுறைப்படுத்தி, நலன்களைக் குவிப்போம் - தவக்காலம் முடிந்தவுடன் இந்நற்செயல்களிலேயே தொடர இறையருள் வேண்டுவோம். தவக்காலம் நமது ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பைத் தகுந்த முறையில் கொண்டாட நம்மையே தயார் செய்யும் காலம் என்பதை நினைவில்கொண்டு அதற்கேற்ப வாழ்வினை அமைத்துக் கொள்வோம்.

### *வாழ்வு தரும் தவக்காலம்!*

உள்ளத்தை உயர்த்தி எந்தவிதமான தவக்கோலத்தை நாம் அணிந்துகொண்டு செயல்களால் சிறந்து விளங்கினால் நாம் ஏற்கும் தவக்கோலம் நிச்சயம் நமக்கும் நிறைவை நோக்கிய வலிமைதரும் என்பதில் ஐயமில்லை. அதேவேளையில் இதயத்தைத் திறந்து, எதிரியை மன்னித்து மறந்து, செயல்களில் எல்லாம் சிலுவை நாதனைச் சிந்தித்து, சிந்தனைகளை நெறிப்படுத்தி, செபத்தில் நிலைத்து, சேவையில் மகிழ்ந்தால் தவக்காலம் வாழ்வுதரும் அதுவும் புதுவாழ்வைத் தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு, 7ம் ஆண்டு நினைவஞ்சலி





திரு. பிலிப்பு அந்தோனி

அந்தோனி சத்தியானந்தம் (செல்லா)

(பிச்சகுளம் முருங்கன்)

மலர்வு : 02 - 02 - 1948
உதிர்வு : 21 - 03 - 2015

மலர்வு : 13 - 10 - 1986
உதிர்வு : 29 - 03 - 2009


*"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"*

ஆண்டுகள் பத்து ஆனாலும் - உங்கள்
அன்பு முகம் நாம் மறவோம்
பண்பான உங்கள் உள்ளங்கள் - வாழ்வின்
பக்குவம் நாளும் நினைப்போம்
உண்மையாய் வாழ்ந்த உங்கள்
உறவை நாளும் வாழ்வோம்
ஆண்டவரின் பாதமதில்
எங்களுக்காகவும் மன்றாடுங்கள்

*உம் பிரிவால் துயருறும்:*
*அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.*

## 07ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02
05
1968



உதிர்வு
24
03
2009

### திரு. செபமாலை. கொன்சாலஸ் (மகேந்திரன்)

(ஆண்டாங்குளம்)

*"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது"*
*(1கொரிந்தியர்- 15:42)*

கண்ணுக்குள் நிலவாய் மண்ணுக்குள் விதையாய்
விண்ணுக்கு விளக்காய் எம் எண்ணத்தில் உயிராய்
உலாவுகின்ற எம் உயிர் தீபமே!
உன் துளி இரத்தத்தால் மண்குளிர
விண்ணகத் தேவன் உன்வரவைப் பார்த்திருக்க
உன் திருமுகம் ஒளி இழந்ததே
உறவுக்கு விடை சொல்லி விழிமுடிக் கொண்டாயே
எம் இதயம் மறக்குமோ?
நிலைத்திருக்கும் நிலைவாழ்வில் துயில்கொள்ள
இறைவேண்டல் செய்கின்றோம்.

*உம் பிரிவால் துயருறும்:*
*மனைவி, மகள், அப்பா, அம்மா, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்*

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
06
03
1973



உதிர்வு
23
03
2013

### கமலசேகரம் சதீஸ்சேகர் (சதீஸ்)

(வேப்பங்குளம், வவுனியா)

*"ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார், ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக" (யோவான் 1-21)*

மூன்றாண்டு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரங்கள்.
மீண்டுமெப்போ காண்போமென
ஏங்கித் தவிக்கின்றன எம் இதயங்கள்.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காத உம் நினைவோடு
உமது ஆன்ம சாந்திக்காக
இறைவேண்டுதலில் நிலைத்திருக்கின்றன
உம் இரத்தத்தின் இரத்தங்கள்!

*உம் பிரிவால் துயருறும்:*
*பெற்றோர், சகோதரங்கள்*

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. அம்புறோஸ் நித்தியானந்தராசா

(ஓய்வுபெற்ற அதிபர்)

(குழந்தையேசுபுரம், மன்னார்)

மலர்வு : 13 - 07 - 1934
உதிர்வு : 21 - 03 - 2015

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (அரு. 11:25)

அப்பா, அன்பான அப்பா!
ஓராண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரங்கள்
அழியவில்லையே வீட்டில்
உம் பாதச் சுவடுகள் அப்பா!

பாசத்தின் தீபமாய் பண்பின் சிகரமாய்
பார்போற்ற வாழ்ந்த பொக்கிசம் அப்பா - நீங்கள்
பாரம் பரியங்களை கட்டிக்காத்த
கோபுர விளக்கு நீங்கள் அப்பா!

நின்துன்பம் மறந்து எம் துன்பம் துடைத்தவரே
அன்று உந்தன் அரவணைப்பால் அகமகிழ்ந்தோம்
இன்று நீங்கள் இல்லாமல் தவியாய்த் தவிக்கின்றோம்.
நீங்கள் விட்டுச்சென்ற நற்பண்புகள்
எம்மை வழிநடத்துகிறதப்பா

ஓராண்டு சென்றாலும் ஆறவில்லை எம் துன்பம்
ஆண்டவன் சந்நிதியில் உன் ஆன்மா அமைதிபெற
இறைவனை வேண்டுகிறோம்.

*உம் பிரிவால் துயருறும்:*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
23
11
1935



உதிர்வு
15
03
2014

### திருமதி. அருளானந்தம் திரேசம்மா

(36/2 ரெம்பிள் றோட், யாழ்ப்பாணம்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிகவும் மதிப்பிற்குரியது"
(திருப்பாடல் 116:15)

அன்பின் இறைவா, எங்கள் அன்புத் தெய்வம் எம் அம்மாவுக்காக நன்றி கூறுகின்றோம். எம்மை உயிரிலும் மேலாக நேசித்து, தம் உதிரம் சிந்தி எம்மை உருவாக்கி, எம்மோடு வாழ்ந்த எம் அன்பு அம்மாவை கனிவோடு கண்ணோக்கியருளும். அவரை நித்திய பேரின்ப வீட்டில் நித்தியமும் பாதுகாத்துக்கொள்ள தாழ்மையோடு மன்றாடுகின்றோம்.
கன்னிமாமரியே... மாசில்லாமல் உற்பவித்த இறைவனின் தாயே.. திருச்செபமாலையை அளவில்லாத அன்புடன் தினமும் செபித்து, எம்மையும் செபிக்கத் தூண்டிய எம் பாசமிகு அம்மாவை உமது பாதத்தில் ஒப்படைத்துள்ளோம். அவருக்காக உமது திருமகனிடம் வேண்டிக்கொள்ளும்.

*உம் பிரிவால் துயருறும்: கணவன், பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்*

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம். - மன்னா நிர்வாகம் -

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002 9782

## மன்னா விநியோகஸ்தர்களே!

உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!

மன்னா நிர்வாகம்

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=,
கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



### அருட்பணி அ. சகாயநாதன்

(சுண்டிக்குளி, முருங்கன்)

மலர்வு : 24.08.1960 குருத்துவம் : 07.04.1994

உதிர்வு : 10.03.2015

அர்ப்பணித்தோம் உந்தனை நாம் இறைபணிக்கு
பணிவாழ்வின் பாதியில் எம் குருவை பறித்துவிட்டாய்.
பாதகம் யாம் ஏது செய்தோம் இறைவா!

நீ மறைந்த செய்தி கேட்டு நாம் அழுத கண்ணீரின்
ஈரமது காயுமுன்னே ஆண்டு ஒன்றும் வந்துவிட்டது.
பணி வாழ்வின் பக்குவம் தேடித்தந்த பதவி
குருமட அதிபராய், மாகாண முதல்வராய் பணிகளை அணிசெய்தாய்.

உள்ளத்தின் நினைவுகள் ஏணிப்படிகளைக் கைதொடும் தூரம்
கலைந்துபோனது உன் குருத்துவ யூபிலிக் கனவுகள்.

குருக்களின் கூட்டத்தில் உன் உருவை எம் கண்கள் தேடும்.
பலர் சிரிக்கும்போது உன் சிரிப்பொலியை எம் செவிகள் தேடும்.
மனிதரை வெல்வதென்றே மரணத்தில் தொழில் என்றால்
மனிதனின் பெருமை எல்லாம் மரணத்தை வெல்வதொன்றே நியதி.

பிரிவால் நினைந்துருகும் - குடும்பத்தினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி. யேசுதாசன் செபஸ்ரியம்மா (மாசில்லா)

(பேசாலை)

மலர்வு : 13.08.1939

உதிர்வு : 12.03.2015

"ஆண்டவரின் கரத்தில் நீ அழகிய
மணிமுடியாய் இருப்பாய்"
(எசாயா: 62-3)

அன்பு அம்மா,
ஆதரவு வேண்டி நிற்போருக்கு உதவும் தாயே,
இரக்கமிகு உம் செய்கையால்
எம்மை இணைத்த தாயே
கடுமையாய் உழைத்து எம் குடும்பம் உயர வழிவகுத்தீர்
இறை அன்பு பிறர் அன்பு என்பதை
உம் பிள்ளைகள் எமக்கு கற்றுத்தந்தீர்.
உம்மை எம் வாழ்வில் மறவோம்.

பிரிவால் நினைந்துருகும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 01 1944



உதிர்வு 25 03 2015

### திரு. செபஸ்டியன் அந்தோனி தாசன் கூஞ்ஞு

(8ம் வட்டாரம், பேசாலை)

ஓராண்டாகின்றது நீர் விழிமூடி
ஸ்தம்பித்துப் போனதெம் உயிர்நாடி.
நித்தம் உம் ஞாபகங்களுடனேயே
வாழ்வதனால் நீர் நீங்கியதை நாம்
நினைப்பதேயில்லை.
ஐயா உம் நினைவலைகளைக்
கழற்றி எறிந்துவிட்டு
வாழ்க்கைப் பாதையில் எம்மால்
பயணிக்க முடியவில்லை - ஏனெனில்
அவை எம் செருப்புக்கள் அல்ல
கால்கள்..

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 12 1988



உதிர்வு 23 03 2015

### செல்வன். யேசுதாசன் அன்ரனிதாஸ் றோச்

(சாந்தன்) (பள்ளிமுனை, மன்னார்)

"சீவியத்தில் உம்மை நேசித்தோம்.
மரணத்திலும் உம்மை மறவோம்"

மல்லிகை மொட்டாகி மனதுக்குள் நீயிருந்து
பூவாகி மலர்வதற்குள் மறைந்து விட்டாயோ
பூப்பறித்த கூடையிலே தீப்பற்றி எரிந்ததுபோல்
பூப்போல பாலகன் நீ பூவுக்குள் மறைந்தாயோ
பாசத்தின் பாதையிலே செல்வமகன் நடப்பான் என்று
காத்திருந்தாள் உன் தாய்.
பாதை தெரிவதற்குள் நீ கண்மூடிவிட்டாயே
வாழ்க்கை நந்தவனத்தில் வண்ணச்சிட்டு பறக்குமென்ற
தாயவளின் ஆசைகள் கனவாகிச் சென்றதுவோ.

பிரிவால் நினைந்துருகும்,
குடும்பத்தினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 08 1934



உதிர்வு 27 03 2015

### திரு. பாவிலுப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர்

(இளைப்பாறிய அதிபர்)
(முத்தரிப்புத்துறை)

எங்கள் உணர்வுகளோடு கலந்து
எம் நினைவில் வாழ்கின்ற ஐயா!
கடந்து செல்லும் ஒவ்வொரு நொடியும் வலிகளோடு .....
உம் அன்பான பேச்சும் புன்னகையும் ஆளுமையும்
கம்பீரமும் கண்களில் நிழலாட மறுபடியும்
இவை கிடைக்காதா என ஏங்குகிறது மனது...
ஏணியாய் நின்று கல்விதனில் பலரை ஏற்றிவிட்டீர்.
உம் பெருமை பிறர் சொல்கையிலே
எம் கண்களும் நெஞ்சும் நிறைகிறதே!
விண்ணகம் வாழும் நீர் விமலனை எமக்காய் இறைஞ்சிடும்.
எம் வாழ்வின் இறுதிவரை உம் நினைவுள் தொடரும்!

பிரிவால் நினைந்துருகும்,
பாசமிகு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவுகள்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 04 1934



உதிர்வு 01 03 2013

### திருமதி. அந்தோனிப்பிள்ளை சவிரியாள் தற்குருஸ்

(கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்)

ஆண்டுகள் மூன்று ஆனாலும் - உங்கள்
அன்பு முகம் நாம் மறவோம்.
பண்பான உங்கள் வாழ்வின்
பக்குவம் நாளும் நினைப்போம்.
உண்மையாய் வாழ்ந்த உங்கள்
உறவை நாளும் வாழ்வோம்
ஆண்டவனின் பாதமதில் எங்களுக்காகவும் மன்றாடுங்கள்

பிரிவால் நினைந்துருகும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 05 1937



உதிர்வு 21 03 2013

### திருமதி. பேர்னதேத் ஞானப்பிரகாசம்

(சில்லாலை, யாழ்ப்பாணம்)

தெய்வமான நீங்கள் காட்டிய அன்பும்
கரிசனையான செய்கைகளும்
பாசமான பார்வையும்,
அக்கறையான கனிவு வார்த்தைகளும்
கோபமே வராத புன்னகை முகமும்
எங்கள் நினைவில் வந்து
நெஞ்சைக் கனக்க வைத்து
அழுகையைத் தருகின்றதே அம்மா
எங்களுக்காக மன்றாடுங்கள்.

பிரிவால் நினைந்துருகும்,
கிறேஸ், சாம்சன்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 07 01 1982



உதிர்வு 28 12 2015

### திரு. நீக்கிலாஸ் ஸ்ரான்லி போல் லெம்பேட்

(சுமன்) (திவி நெகும அபிவிருத்தி உத்தியோகத்தர்)
(வங்காலை)

"ஆண்டவர் தம் அடியாரின் மரணம் அவருடைய
பார்வையில் மிக மதிப்பிற்குரியது" (தி.பா.115:6)

உணர்வோடு ஒன்றியிருந்த எம் உயிர் நண்பா!
கணப்பொழுதில் எம் நட்பைத் தவிக்கவிட்டு
காற்றில் ஏன் கலந்தாய்?
ரணமாகிப் போன எம் இதயங்கள் ஆறிடவே வழியேது?
குணமாக்கும் இறைபதம் நீ அமர்ந்து எம் குறைதீர மன்றாடு.

பிரிவால் நினைந்துருகும்,
நண்பர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org